பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்

இஃது.

# திருமணக்காட்சி.

காயற்பட்டணம்.

பிசபு - செய்கப்துல்காதிறுநயினாரவர்கள் குமாரர்

**செகாதிநயினாப்புலவரவர்கள்**

பாடியது.

கீழக்கரை,

பிச்சைத்தம்பி லப்பையவர்கள், குமாரர்

மகுதூமுகம்மது - அவர்கள்குமாரர்

**இதுறூமுகம்மதவர்கள்**

பொருளுதவி முயிற்சியினால்

**கண்ணகுமதுமகுதூமுகம்மதுப்**

புலவரவர்களால்

தலைப்பட்டப்பிரதியைக்கொண்டு நன்குற ஆராய்ந்து

நிரஞ்சனிவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

முதற் பதிப்பு.

ஹிஜுறத்து [illegible] [illegible]

1892.

OFFICE OF THE ... MADRAS 20 MAY. 9[illegible]

பிசுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்

இஃது.

# அச்சிட்ட வரலாறு.

OFFICE OF THE REGISTRAR
20 MAY. 92
MADRAS.

## ஆசிரியப்பா.

திருவள ரறுஷுஞ் சீரிய குறுசும்
மருவளர் லவ்கும் வனைந்திடு கலமு
மீனுஞ் சசியும் விரிகதிர்ச் சுடரும்
வானும் புவியு மலையுங் கடலும்
நவமிகு சுவன நாடும் வீடும்
பவனமுந் தவனம் பரவிய நரகும்
கானுங் கனையுங் கதிக்குமற் றெவையும்
ஆவெனு மொருசொல் லானுண் டாக்கியே
அவையவைக் காகு மாணை செலுத்தி
நவையற வாசி நடாத்துமெய்க் கடவுள்
தன்னொளி யதனிற் றாளம தாகி
மன்னிய கிந்தீ லாகிமஞ் ஞையதாய்த்
துறைதொறு மிருந்து தோற்ற மாற்ற
மறையுமெவ் வெவையு மறிந்துபின் னைதம்
நபிதிரு நுதலி னல்லொளி யாகிச்
சவியொடு மிலங்குந் தன்மையி னுலவர்
மன்னும் வானவர் வணங்கிடப் பெற்றுய்
பன்னுஹவ் வாவொடு பதிசுவ னத்தில்
வாழ்ந்திருந் திறையே வற்றனை விட்டுத்
தாழ்ந்திடு விலகற் றனையெடுத் ததனைத்
பனற்கரு முவனைப் பதிவிட் டுலகி
லனுப்பப் பட்டவ ராகிஹவ் வாவொடு
ஜுத்தாவிற் சேர்ந்து சொலுஞ்சூ விருபதிற்

மகவுநாற் பானிலாண் வழிவழி யாகப்
புகழொடு முத்தொளி பொருந்தியுற் றப்பினர்
புத்தி பூகம் பொறுமையா லெவ்வி
தத்தினர் கலையு மிணக்கிவா ழரசர்
அதுநான் கிளையி லதிவிதத் தினராய்
எதுவெனுந் தாமொன் றியற்றிடு கருமம்
கால மூன்றையுங் கருதியே செய்யு
மெதுள புந்தி விகசித குணுளர்
அருள்கொடை யிரக்க மறிவன்பு பொறுமை
மருவியெட் டிசையும் வாழ்த்திடு நலத்தார்
அப்துல் முஞபெறு மண்ணல்செய் வரத்தால்
ஒப்பற விர்முதா கொட்டிப் பிறந்த
மக்க ளிருவரில் வண்மையு மொழுங்கு
மிக்க பொறுமையு மேன்மையு மடுத்தோர்க்
கன்புமா தரமு மருளும் பொருந்தி
இன்பமே தியர்க ளியம்பிய வண்ணம்
பொலனுறு மிரட்டைப் பிள்ளைக டம்மிற்
கலகமொன் றின்றிவாழ் ஹாஷீ மென்னு
முத்தியர் செய்தவ முழுமையுந் திரண்டோர்
புத்திர வடிவாய்ப் பூமியி லுதித்தோர்
வெற்றிமன் னவரும் விரும்பியே வந்து
பற்றி யடியைப் பணித்திடு பண்பினர்
வஞ்யக மிஞ்சு மன்று பிருஹான்
அஞ்சா தனுப்பு மாணைக் கலகம்
வந்தநா ளையினில் வல்லநா யகனே
யிந்தக் கலகத் திற்கி டெனச்சொலி
மக்கத்தில் வெற்றி மன்னிடக் கண்ட
முக்கிய ரப்துல் முத்தலி பென்னும்
செப்பரு நன்மையர் செய்தவந் திரண்டு
முப்புவி வாழ்த்துகான் முளையா யுதித்தோர்
வணக்கமு மிணக்கமு மானமுந் தானமுந்
தணப்பறு வெற்றியுந் தயாவமு மொழுங்கும்

தீரமும் வீரமுந் திர்க்கமு மார்க்கமுஞ்
சூரமும் பொருந்திச் சொல்லரு மடவார்
மையல்கொண் டுழலு மதிக்கரு மழகினோர்
உய்யுமெய்ப் புகழி னுத்தம ரானோர்
தந்தைசெய் நேர்ச்சை தானிறை வேறப்
புந்தியிற் பலியைப் பொருந்தியே கூடச்
சென்றிடும் பொறையார் திவியவப் துல்லா
வென்றிடு நாம மிலங்கிடப் பெறுமனர்
நாடொறுஞ் செய்தவ நயத்தினி லவரி
னீடுறு நெற்றியி னிலவிய மூத்தொளி
கற்பும் பொறையுங் கனிவுங் குடியாய்ப்
பொற்புற விருக்கும் பொலன்கொடி யாமினு
வென்னு நாயகியி னோர்கர்ப்பா சனத்தின்
சமன்னுமா னிடர்கள் வடிவா யொன்பது
மதிதொறு நபிமார் வந்துமா ராயமும்
அதிவித மாகப்பின் னமசர்மா ராயமும்
சொல்லிடக் குபிரர் தொழுதிடு புத்துகள்
பல்லவுங் கவிழ்ந்து பாரில்வீழ்ந் திடவும்
சாவ வென்னும் சலதிவற் றிடவும்
கோவாஞ் சேருவான் கொத்தள மிடியவும்
வழிகெடு பாரீசர் வணங்குதீ பவியவும்
விழிகெடு மஜூஸீல் விருப்பாற் செய்திடும்
சிங்கா சனமது தெறித்திடி யவுமவன்
கங்கா நதிநிகர் கண்ணீர்விட் டழவும்
துடக்கமீ தின்றிச் சுன்னத்துஞ் செயலாய்த்
தடச்சிரம் சஜூதாய்த் தாளிசண் டினையும்
மடித்தத பாக வலதுதற் சனியைத்
கிடத்த வலமுழந் தாளினிற் சேர்த்து
இடது காத்தா லெழிற்குறி பொத்திக்
கடிநனி யிடமெலாங் கமழ்ந்திட வசம்பையர்
ஆசியா மறிய மடுத்திருந் தரிய
தேச மருத்துவஞ் செய்திட மாண்பொடும்

திருத்தமுற் றலகஞ் செழித்திடப் பிறந்த
கருத்த ராகியநம் முகம்மது நயினார்
பாரினில் வயதிரு பத்தைந் தினின்மிகு
சீரிய கற்புந் தெளிவுமெந் நலமும்
இருந்துவாழ் கதிஜா வென்னுநா யகியைப்
பொருந்திட மணமா விசைபுரிந் திருந்து
திட்டமாம் நாற்பான் றிருவய தினில்நபிப்
பட்டமும் பெற்றுப் பகரருந் தீன்பயி
ரெவ்வெவ் விடத்து மிலங்கிட விதைத்து
நவ்வி முதல நவிலிழி தினைகளாற்
கரிசெலப் பற்பல காரணங் காட்டிப்
பரிவொடு மக்கப் பதியினி லிருந்து
ஐம்பத்து மூன்றாம் தாகிய வயதில்
இன்புறும் ஹிஜ்ரி யாக வெழுந்து
வரிசையார் மதீன மாநகர் சேர்ந்து
வருஷமோர் பத்தின் மாநில மெல்லாந்
தீனிலை படரச் செய்துவாழ்ந் தனரினிப்
பானுவின் சுடர்மிகப் பரவிடு கடையுக
நாளி லடியவர் நவையுறு பவமற
வாழிய விறைபான் மன்றுடியே பின்னர்
மணிக்கிணை யாசியா மறியமென் றுரைக்குங்
கணிக்கரு மிரண்டு கன்னிகைப் பெண்களைத்
திருமண முடிக்குஞ் சீர்சரித் திரமதைப்
பொருணிறை வர்த்தகப் புகிதருங் கல்வியிற்
றேர்ந்தவிற் பனருஞ் செப்பரு மறையை
யோர்ந்து பொருளறிந் தோதுல மாக்களும்
கணிக்கருங் காரணங் காட்டொலி மார்களும்
பணிக்கரும் ரத்தினப் பரீட்சை யோர்களும்
பரவிவாழ் காயற் பட்டண மென்னுந்
தரையினை யனேகந் தங்கங் கொடுத்து
வாங்கிக் குடிபதி வாழ்வுண் டாக்கும்
ஓங்கிய சீர்த்தி யுள்ள செய்யிது.

சுல்தான் ஜமாலுத் தீனெனும் வள்ளல்
தில்தா னவக்குந் திருமக மகவாய்
வருமவர் தம்மில் வரிசையும் பேறும்
பெருகு பிரபு வெனும்பெயர் பெற்றோர்
கன்னிய செய்தப் துல் காதிறு நயினா
ரென்னு மன்னர்செய் யிருந்தவப் பேற்றாற்
புத்திர சிகாமணி யாகப் பிறந்த
நற்றவ சேகரி நயினார்ப் புலவர்
சொற்சுவை மதுரஞ் சுரந்திடு கனியாய்ப்
பற்பல ராகப் பண்ணமைந் தனவாய்ப்
படிப்பவர் கேட்பவர் பயன்சொல் பவர்க்கு
நொடிப்பிக்கி லாதுநன் னூலெனக் கொள்க
விருத்தப் பாவாய் வியப்புறப் பாடிக்
முக்கதலி திருமணக் காட்சியென் றேபெயர்
கொடுத்தன ரஃதே குருநபி மணத்தின்
றிடத்த சரித்திரச் செய்யு ளதனைற்
பன்னரும் விருப்பிற் படித்திட வெழுதுகிற்
பின்னர்பின் கைப்பிழை பெரிதுறு மென்றே
மன்னுசீர் வளத்தின் வகுதைமண் டலத்துட்
டின்னுமெந் நலமுஞ் சோர்வறப் பெருகி
இரத்திநத் தொழின்முத லிலங்குமெத் தொழிலும்
பெருப்பமாய்ச் செய்யும் பிரபல ரிருந்துவாழ்
கழாறுங் கீழக் கரையெனு நகரின்
மழகளி றனைய மாண்புடைச் செல்வர்
ஸாலிஹாம் பிச்சைத் தம்பி லெப்பைச்
சீலமார் தவத்திற் சேயா யுதித்த
முதுமதி நிகர்த்த முகவஜீ காமுஞ்
சதுமறைத் தெளிவுந் தயாளமும் பொருந்து
முத்தியார் மகுதூ முகம்மதென் றோதும்
பத்தியார் செய்தவப் பாக்கிய மதனாற்
புத்திர வடிவாய்ப் பூமியி லுதித்தோன்
சித்திர வழகுஞ் செழிப்புங் களிப்பு

நித்தமும் பொருந்தி நேர்நெறி தவறா
வுத்தம குணமு முணர்வு மெளியோர்க்
கன்புமா தரவு மறிவுளோர் பேரி
னின்பு மிரக்கமு மீகையும் புலவோர்
தங்களை நிதமுஞ் சங்கைசெய் நேசன்
பொங்கமா யெவர்க்கும் புகழாய் நடப்போன்
வர்த்தக பூட்டக வழிமிகத் தெரிவோன்
விர்ப்பனத் தகுதி விளங்கிய கருத்தன்
மொழியுங் கிலுறுமு கம்மதென் றோதும்
அழகிய வள்ள லருமையாய்ப் பெருமையாய்
நன்னய வுள்ள நாட்டமே பெரிதாய்ப்
பொன்னிதி கோடி புகழொடு மளித்தே
அச்சிட்டுத் தருகவென் றருமையாய்க் கேட்ட
வுச்சிதம் பற்றியு மொண்கா கிரியில்வாழ்
செப்பரும் ஹாபிலு சின்னரா வுத்தர்
லெப்பை செய்தவ நிதிமக வானோர்
சீறு முதல ஜெயபுரா ணங்களும்
பேறாய் மணணப் பிரசங்கம் புரிவோர்
கற்றவ ருவக்கும் ஹம்மாதுப் புலவர்
வெற்றியாய்க் கேட்கும் விருப்பமு முணர்ந்து
விளம்பிடு கட்டபொம் மேந்திர னொடு
தளம்பல கொண்டு சண்டைசெய் வீரர்
கறுத்தம்பி மரைக் காயரின் பேரரும்
மறைப்பொரு ளுணர்ந்த முகியித்தீ னப்துல்
காதிறு மாப்பிள்ளை ஙனதவர் திரண்டே
யேதறு மகவா யிப்புவி தன்னி
லூற்று நல் லனவெலா முவந்திடு கருத்தின்
சித்தியார் ஷேகு முகம்மது மரைக்கார்
தம்மாற் கிடைத்த தகுமேட்டுப் பிரதியாற்
செம்மையா யெழுதித் திருத்தமா யச்சிற்

பதித்துக் கொடுத்தனன் பண்பினர் நண்பினர்
கதித்திடுங் கீர்த்திகன் னகுமதென் றோதுஞ்
சீரியர் தவத்தின் செல்வரா யுதித்த
பேரியன் மகுதூம் பிள்ளைசெய் வரத்தால்
வருமொரு புத்திரன் முகம்மது நயினார்
கருமம தியற்றுங் காரிய னெனும்பெயர்
பெற்றவன் கவ்துல் லகுலம்பீ ரானபீர்
அப்துல் காதி றுண்டகை திருவடி
சிரசக நாவிலுஞ் சேர்த்துறு கடாட்சன்
விரிபொரு ளுள்ளகர் வியபுரா ணங்கள்
கருதரு சித்திரக் கவிதைகள் பலவும்
அருமையி னச்சிட் டவனியி லெங்கும்
பிரசுரஞ் செய்தவி சாலய நாமன்
பொருளுறு சீறு புத்தூ குவ்ஷாம்
பன்னு றவுகல் கூலின் படைப்போ
ரின்னவை யாவரு மெளிதினி லறியக்
கழங்கற வசன காவியஞ் செய்து
வளம்பெற வச்சில் வகுத்திடு கணிதன்
பேசரும் வண்ணப் பிரசண்ட வாக்கி
பூசிரு மகுதூ முகம்மது புலவனே.

அச்சிட்டவரலாறு - முற்றிற்று.

# திருமணக்காட்சி படல அட்டவணை.


| பக்கம். | | பெயர். | பாடற் றொகை. |
|---|---|---|---|
| ௧ | ,, | காப்பு வெண்பா | ௨ |
| ௨ | ,, | கடவுள்வாழ்த்து | ௩௭ |
| ௧௧ | ,, | நாட்டுப்படலம் | ௨௮ |
| ௧௬ | ,, | நகரப்படலம் | ௧௪ |
| ௧௮ | ,, | றசூலுல்லா சிறப்புப்படலம் | ௧௨ |
| ௨௦ | ,, | றவுஹா வருபடலம் | ௫ |
| ௨௧ | ,, | குந்தறுசா வருபடலம் | ௯ |
| ௨௨ | ,, | குறுமூசு வறுபடலம் | ௯ |
| ௨௪ | ,, | முசிலிம்கள் கூபாவுக்குப்போம்படலம் | ௧௧ |
| ௨௫ | ,, | கை சரசுப்படலம் | ௬ |
| ௨௬ | ,, | குறுமூசு படைபோந்தமராடும்படலம் | ௧௫ |
| ௨௯ | ,, | குறுமூசுபடை நபிநாயகத்தின் கபுறை யிடிக்கமதினமுறுபடலம் | ௧௩ |
| ௩௩ | ,, | இமாமஹதி வருபடலம் | ௧௬ |
| ௪௩ | ,, | தஜ்ஜால் வருபடலம் | ௨௯ |
| ௪௭ | ,, | ஈசாநபி வருபடலம் | ௨௫ |
| ௫௧ | ,, | யாஜூசுமாஜூசு வரு படலம் | [illegible] |
| ௫௪ | ,, | தாபத்துல் லறுலென்கிறபட்சிவருபடலம் | ௬ |
| ௫௬ | ,, | பெண்ணோடுபெண் புணருபடலம் | ௩ |
| ௫௭ | ,, | துனியா முடியும் படலம் | ௧௩ |
| ௬௦ | ,, | ஆண்டவனழிவைநினைந் தலத்தும் படலம் | ௫ |
| ௬௧ | ,, | இறந்தவுயி ரெழும்பச்சூறாது படலம் | ௩௦ |
| ௬௬ | ,, | கேள்விதீர்ந்து நபிநாயக மன்றுடிக் கதியருள்படலம் | ௨௦ |
| ௬௯ | ,, | சொர்க்கத்திற் சுகித்திருக்கும் படலம் | ௱௪௬ |
| ௯௪ | ,, | மகுமூதென்னும் யானைவன்னிப்புப் படலம் | ௧௯ |
| ௯௬ | ,, | கிளிக்கூட்டின் வன்னப்படலம் | ௱௧ |
| ௧௧௪ | ,, | நபிநாயகத்திற்கு மாலையிடு படலம் | ௧௪ |
| ௧௧௬ | ,, | கூறுல்ஹீன்கள் சிறப்புப் படலம் | ௩௨ |
| ௧௨௪ | ,, | ஆசியா மறியமைச் சிங்காரிக்கும் படலம் | ௨௩ |
| ௧௨௬ | ,, | நபிநாயக மனையாரு முடையணி படலம் | ௯ |
| ௧௩௬ | ,, | நபிநாயக மணப்பவனிவருபடலம் | ௱௩௬ |
| ௧௫௬ | ,, | நபிநாயகம் ஹவுலல்க் கவுதறி லிறங்கி விருந்தருந்துபடலம் | ௱௧௧ |
| ௧௭௭ | ,, | நபிநாயக முமமத்துகளோடு மோட்சத்தில் வீற்றிருக்கும்படலம் | ௩௨ |


ஆகப் படலம் - ௩௧ - க்குக் காப்புடனேகூடிய திருவிருத்தம் ௧௩௪௭

திருமணக்காட்சி படல அட்டவணை - முற்றிற்று

பிஸுமில்லா ஹிற்றகுமா னிற்றகீம்.

இஃது.

# முகம்மதுநபி சல்லல்லாகு

அலைகிவசல்லமவர்கள்

சுவர்க்கலோகத்தில் வெள்ளையானைமேற் பவனிவந்து

ஆசியா மறியமென்னும்

இரண்டு கன்னிகைப் பெண்களையும்

திருக்கல்யாணஞ்செய்யுஞ் சரித்திரமாகிய.

# திருமணக்காட்சி.

---

காயற்பட்டணத்தையுண்டாக்கிய.

**சுல்தான் செய்யிது ஜமாலுத்தீனவர்கள்**

ஆண்மக்கள்வழியிற் சிரேஷ்டராக வந்த

செய்தப்துல்காதிறுநயினாரவர்கள் குமாரர்,

## சேகாதிநயினாப்புலவரவர்கள்

பாடியது.

காப்பு - வெண்பா.

பூவானம் போற்றும் புறுக்கான் மறைக்கணி
நாவான முஸ்தபா நந்நபிமேற்—பாவாந்
திருமணக்காட்சிக்கதை செப்பவே முப்பார்க்
கருமணக்காட்சிக்கிறையே காப்பு.

ஆலநபிக் கும்மறிய மாசியா வுக்கும்விண்ணுளார்
மாலைமணத் தின்பதிகம் வாழ்த்தவே—ஞால
நிலைகளுக்கும் விண்ணுளார் நிலைகளுக்குந் தொன்றாற்
கலைகளுக்கு முன்னவனே காப்பு.

## கடவுள் வாழ்த்து.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்,

திங்கள்செங் கதிர்மீன் வாயுத் தேயுவா னோர்
கண் மாக்கள், பொங்கலை கலையா யுற்ற பூமிசை
யுயிர்க ளெல்லாந், துங்கவெண் டாள மொன்றிற்
றோமிலா தமைத்த மாறு,தெங்களும் பொலிந்து
நிற்கு மேகனைப் புகலு வாமே. (௧)

முன்னவன் றனையா சாரு முதனடு வீறு கா
ணு, மன்னவன் றனைத்துஞ் சில்லா வல்லவன் ற
னைத் தெருண்டோர், தன்னவன் றனையிவ் வண்
ணங் தகைத்தென மறையுங் கூறு, வன்னவன் ற
னைத் தொழார்கற் றறிந்துமற் றறிந்தி லாரே. (௨)

ஆளினுந் தனத்தி னேயு மணியினு மணியி
னேயுந், தாளினும் வலியி னேயுந் தருக்கினுஞ்
செருக்கு ளாவும், வாளினு மயிலுண் கண்ணார் ம
யக்கினு மளித்தா னென்றோர், நாளினும் வணங்
கா ரெவ்வா றுய்குவார் நவைக டீர்ந்தே. (௩)

கருத்துறு மழுக்கா றென்னுங் காரிருட் பிளம்
பு நந்தத், திருத்திய கலிமா வென்னுந் தீபகன்
கேற்றிச் சால, வருத்தியின் காலை மூசி யாமென
நேயம் பற்றி,பொருத்தனை வணங்குவோர்பொன்
னுலகினை விலைகொண் டோரே. (௪)

சந்த விருத்தம்.

புவிக ளெலாமொரு சுடரொளி வேதிறை புகழ்
வளர் காரணனார், செவிக ளிருதெழு ஜிபுரியில்

## கடவுள் வாழ்த்து.

பேதுற முடிமிசை மீனருள்வோர், கவிகள் குலாவு பொன் னளிமுரல் சோலைகள் கவிமதி நவினில் வாழ், நபிகள் சிகாமணி யுபயகு சேஜப னளிர்சா ணைநினைவாம். (௫)

### கலிச்சந்த விருத்தம்.

மேய சுந்தர லோகமுந்தரு விழியங் கணிநேர், வாய ளம்பிடி போலசம்பையர் வாழ்வையுந் தருநீள், நேய வட்பள வா துறும்பல நேசமும் புகழ்சீர், தூய நண்புயர் துர்தர்முந்நிறை சூல்செமுஞ்சரணே. (௧)

### சந்தக் கலிநிலைத்துறை.

உகமது முடிவினி லுழலுற் றிடுநா, ளகமது பயமற வமர்மித் திசமா, மிகமது தணிலுள மினிதிற் புகழ்வா, முகமது நபிதிரு முளரிப் பதமே.

### சந்த விருத்தம்.

உலகி னிறைந்திடு மிருளது மங்கிட வுதயனைதுங் கிடல்போற், புலைகொலை மிஞ்சிய குபிசர் வணங்குரு பொடிபட வுஞ்செஜயமார், வலமை யுயர்ந்திடு நவமணி கொண்டிலும் வரிசை நிறைந்திடுவோர், நலமுள முயந்திடு முலுலச மென்றிடு நபிகள்பதம் புகழ்வாம். (அ)

### கலி விருத்தம்.

கத்த னேவல் கருத்தி விருத்தியே, யுத்த மத்தை புலகில் விளக்கிடு, முத்தி யாரு முஅசல்கள் பாதப்பூ, நித்தநித்த நினைத்தினி தோதுவாம். (௯)

கலிச்சந்தத் தாழிசை விருத்தம்.

பட்சத் திறைசொன்ன படிக்குல குள்ளவர்பால்
துட்சத் தனமங்க வுனைத்திடு தூய்வழியார்
லட்சத் திருநாண்டு சகஸ்திர நன்னபிமார்
நட்சத் திரமன்ன நகப்பதமுன் னினைவாம். (௧0)

கலி விருத்தம்.

தவமிக்க முகம்மதர் தம்வழியே
பவமொக்க வறுத்திடு பண்பெனமுன்
னவமுற்ற மனத்தினி னம்பியுறு
மபுபக்கர் பதங்களை யன்புறுவாம். (௧௧)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

கமறுத லன்றி யேழை யெளியவர் வருந்தக் கண்டாற்
றிமிரமாம் வறுமை தீரத் திரவிய மளிக்கும் வள்ள
றமரொடு மெவரு மெச்சத் தானர சாளு நீதி
யுமறுகத் தாபின் றுளை யுள்ளகத் திருத்து வாமே. (௧உ)

கலிச்சந்த விருத்தம்.

மதியானதி னுடனேமொழி மகுமூதரின் மகளார்
கதியாருமு குல்தூம்றுகை யாவிங்கிவர் தமையே
விதியான்மணம் புரிவோர்மறை விறலாயுமை யிடுவோ
ருதுமானிபு னப்பானவ சொளியார்பத நினைவாம். (௧௩)

சந்த விருத்தம்.

படியி லண்டர் கொடியொடுந்து புடைகலங்க மிகவுமே
கெடிது தங்கு கொடிகள்சிந்த நிருபர்தங்கண் முனமுலாங்
குடைக ளும்பல் விருதுமுந்து குதிரையுங்க ணழியவே
யட்ருதுல்து லலிபதங்க ளவையுவந்து புகழுவாம். (௧௪)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

வள்ள லிறசூல் போர்மிகும் வரிசை பாத்தி மாபயந்த
பிள்ளை சிரா ஜஸியாரின் பிரிசம் பெருகு மகவானே

றுள்ள மகிழச் சுவனகனி யுண்டோ ரங்கார் பட்டுடுத்தோர்
தென்றூ மணியா மசஹுசைனர் திருப்பொற் பாதந் துதிப்பாமே.()

எழிலா ரிறசூல் தொழுதாங்டு விருப்பி விருந்தங் கெழும்புகையில்
வழியாய் மூன்செய் திபுலாவை வழுவிக் திபுலாத் திசைநோக்கும்
பொழுதி லவர்க ளுடன்றிரும்பும் புகழார் பத்துப் பெயரானு
வழரு நெறியா ரஷறத்துமுல் பஷீரீ னவர்கள் பதம்பணிவாம். ()

மருட்டுக் குபிரர் திசைகளெல்லா முகம்ம திறசூ லுத்திரவா
லுருட்டுத் தேரு மிவுனிகரி யுடனே புகுந்தங் கவர்மனத்தின்
திருட்டுப் புரட்டுப் பறந்திடவே தீனில் விசுலாம் பயிற்றிவரும்
அருட்டாங் கசுஹா பிகளெல்லா மன்பாய் நாளும் புகழ்வாமே. ()

சந்தத் தாழிசை விருத்தம்

மாதுலாவு லோகர்நீதி வாய்மை தானென் றோதவே
பாவிநோடு மேபழாதி யாவுமேயொவ் வாதுசீர்
நூலதான வேதமோது நோன்மையாவுந் தேறினோர்
நாவிமாம்கள் பாதபோதை நாடுவாமெந் நாளுமே. (௧௮)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

ஐயத்தீங் ககற்றும் வேத வருமது நபியின் பேர
ருய்யத்தீன் விளக்க வந்த வொலிகளின் புயத்தி லூன்றும்
வையத்தி ரடியு மென்றன் வாயகந் தந்தசீர்மு
கெய்யித்தி னப்துல் காதிர் சாகிடைக்கிளற்று வாமே. (௧௯)

கலி விருத்தம்.

தஞ்சை ராஜன் தனக்கெதி திராளிசெய்
வஞ்ச னைத்தொழின் மாற்றிய வள்ளல்சீ
ரெஞ்சி டாத வெழிலுகை யூரில்வாழ்
இஞ்சொல் ஷாகுல் ஹமீதை யிறைஞ்சுவாம். (௨0)

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆரணத்தாற் சொற்சோலை கொடுதீன்பைங் கூழ்வாடா
தாகச் சிலப்

பூரணத்தாற் றனிமுதல்வன் றன்பாங்க ரொளிவிடுக்கப்
புவிசேர் வால
வாரணத்தார் மாபதத்தா ரணிபுயத்தா ரணியொளியே
வளர்பொன் னூரிற்
காரணத்தார் பொருந்துதிரு மணக்காட்சி யுரைக்கவழி
கருத லுற்றும். (௨௧)

தெள்ளுமறை நபியிறசூல் திருவுளமா னாங்நேர்
தெரிந்த போத
முள்ளுமண பூசல்கலி தனுக்குத்தூரி யகஹாபி
யுலகங் கொள்ள
விள்ளுமக்கித் தாபுமுனிறுல் ஹக்குநூபி லறபுரைப்பா
விளங்கச் செந்தேன்
றுள்ளுதமி ழாலுரைத்தார் கலைக்கடலை மனக்கலத்தாற்
சோதித் தோரோ. (௨௨)

அலையாத சீர்காயல் வாழ்கலையு மான்லெப்பை
யாலிம் செல்வக்
கலையாழி யெனும்சதக் கத்துல்லா ஆலிமெனுங்
கடற்பா யாறுய்த்
தொலையாத நிபுணமுறு மாலிம்சே கப்துலெப்பை
சொற்ற வாறே
மலையாது சிறியேனுஞ் செந்தமிழாற் பாடவென
மனம்வைத் தேனே. (௨௩)

கொந்துலவு தண்சோலை சூழ்வகுதை மானகர்வாழ்
கோமான் சேகு
யிந்துலவு திருமுக வஜீகான்கஞ் சாகயிறு
னீன்ற பாலன்
முந்தியதீன் றழைத்தோங்க நெறிநடத்த வேண்டிமறை
மொழியுங் கல்விச்
சிந்துநிக ரொன்னும்சே கப்துலெப்பை சொலும்வழி நூற்
சேர்க்கின் றேனே. (௨௪)

அறைதரு சகாத்தமா யிரத்தறுநூற் றிருபானுன்
　　கதனிற் குன்று
திறைதருநங் கலியைஞ்ஞூறத் தாயிரத்தோர் நூற்றிருபத்
　　திரண்டிற் பூவின்
முறைதரும் விஜயவரு டம்மிந்நூலை யாதரவின்
　　மொழிந்தேன் சில
நிறைதருமே தாவியருக் கென்றுமென் றிங்கிதத்தி
　　னிணையா தென்றே. (உரு)

செங்கோலச் செந்தாதுங் கருந்தாதும் பொன்னெனல்போற்
　　செறியுங் கானில்
வெங்கோப வேங்கையும்பூ னையும்புலியா மெனச்செகத்தில்
　　விளம்பல் போலுஞ்
சங்கோல மிடுந்திரையின் மீன்களும்வான் மீன்கணமுஞ்
　　சரிசொல் போலும்
பொங்கோசைப் புலவர்முன்யா னும்புலவ னெனச்சிறியேன்
　　புகல்கின் றேனே. (உசு)

கண்ணினுற் கவர்வனப்பின் மிக்கோர்கண் ணைம்பொறியுங்
　　காட்டிப் பூழ்தி
மண்ணினுற் புனைபாவை யுற்றதெனக் கல்விகவி
　　வல்லோர் முன்னே
பண்ணினுற் பயின்றறியேன் பனுவல்செயத் துணிந்திருந்
　　படிப்பார் தந்தம் [தேன்
நண்ணினுற் கதிமுதியோர் சான்றோரா மெனத்திடமாய்
　　நாடித் தானே. (உஎ)

வழுதிகோன் கொடிதனையே மணந்துமவன் படிதொடவாம்
　　பரியில் வந்து
முழுதுநவ மணிக்கறியாய் முத்தடிசி லாய்விருந்து
　　முன்ன ரியாதும்
பழுதறுமை வருக்காளும் பாண்டியனென் றெவ்விருதும்
　　படைத்துப் பார்மே

லெழுமிசைகொள் ளதிராஜ ராம்பிரபு குலதிலக
னியம்பி னானே. (உஅ)

வள்ளனபி திருமணக்காட் சியையுயர்த்தோர் நவிலுமுணா
வழிவ ழாமல்
வெள்ளமக ராலயஞ்சூழ் மேதினியிற் செழுந்தமிழால்
விளக்கஞ் செய்தான்
றள்ளருஞ்சீர் வகுதயபு நூல்காதிர் நயினார்சொற்
றனயன் வாசக்
கள்ளவிழ்குங் குமப்புயன்சே காதிநயி னான்புகழ்மேற்
கருதி னானே. (உகூ)

வேதவித்தாம் நபியிறசூல் திருமணக்காட் சியையுலகில்
விளக்கஞ் செய்யப்
பூதலத்திற் பொன்றாது புகழெனச்செந் தேன்மழைபோற்
பொழிந்தான் றாய
மாதவத்தார் செறிகாயற் பதியதிப னிதியதிபன்
வளங் குலாவு
நீதமுற்ற வுபயகுலோத் துங்கனறி ஞோர்புகழு
நிருபன் றானே, (௩0)

உலகெலா மொருசுடர்போ லோங்குகல்வி யெனுங்கடலா
யுற்றே பார்மே
லலகிலாப் புகழிறசூல் நீன்பயினாத் தழைப்பிக்கு
மண்ணல் காய
விலகுமொழி யாழியெனு மாலிம்சுலை மான்லெப்பை
யீன்ற பாலர்
குலபதியா லிம்சதக்கத் துல்லாதம் பேரரெனுங்
கொற்ற வேந்தே. (௩க)

அங்கர்வாழ் வுறுங்குரிசில் வர்த்தகர்சிரோ மணியா
ரலியாச் சீர்த்தி
யென்னகரும் பேர்விளங்கு மாமுகயி னுவரத்தா
லீன்ற பாலர்

மன்னவரை யுலாம்வேட்டு மயூக்கர் லெப்பைசெல்வர்
வளர்பொன் மேரு
இங்ஙனைத் தனிபுரக்கும் லெப்பைநயினு னென்னு
மிசைகொள் வேந்தே. (கஉ)

எத்தமிழுந் தெரிந்தமையாற் கற்றோர்கள் வரிசையறி
வியல்பாய் வந்த
வித்தகரா இபவப்துல் காதிர்நயி னுலெப்பை
வேந்தர் முன்னோன்
சத்தமுகி லென்னவிந்த தமிழ்க்காதைக் களவறுசீர்
தந்தான் செங்கை
நத்தனைய கொடையிலெப்பை நயினுனென் றோங்குமொரு
நாம வேந்தே. (கங)

கடையானு முதலானு மறியாத பொருளையுளங்
கருகி மேகக்
கொடையாளர் நபியிறசூல் மன்றாடி யீடேற்றிக்
கொள்வ னொன்றே
சடையாது நிதிவாரித் திருமணக்காட் சிக்களித்தான்
றழைத்தா னல்லோ
ஈடையாளன் கொடையாளன் லெப்பைநயி னுன்வருதை
யாச ரேறே. (கச)

காருலவு நிழல்மேவு நபியிறசூல் மணக்காட்சிக்
காதை நீர்சூழ்
பாருலகி லானவர்சொல் லறபுனைசெந் தமிழ்விருத்தப்
பனுவ லாகச்
சீருலவு செங்கனக மளவறநல் கினன்காயற்
சீமான் செம்பொன்
மேருவனை யெனவோங்கும் லெப்பைநயி னுமெனுமோர்
வேந்தர் வேந்தே. (கரு)

சொல்வழுவா வாசாசக் கனிபூணைக் கலைதேர் தீ
ஞானோர் தொன்னூற்

2

கல்விகவி செவியுறக்கேட் டனனாருஞ் செழுந்தேன்
காயன் மண்டிற்
செல்வமரு விறைதூதர் திருமணக்காட் சியையாங்கருஞ்
செய்தான் கற்றோர்
நல்வரிசை செயும்வகுதை நன்னகர்வாழ் சேகாதி
நயினான் றானே. (௧௬)

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதிநா னுணர்ந்த இறசூ லல்லாவு
மவர்வழியும் மத்துகளு மகிழும் பொன்னிற்
தீதிலா வொருவரிடத் தொருவர்செல் லுஞ்
செய்தியுமுன் னோன்விருந்து செய்யும் வாறுங்
கோதிலா மகுமூது மிசையேவைகிக்
குலாவிவரு வதுமாற்றில் வங்கமேறப்
போதுவது மீன்வயிற்றிற் சென்றுமீட்டும்
போதுவதும் வகைவகையாய்ப் புகல்கின் றேனே. (௧௭)

கடவுள்வாழ்த்து - முற்றிற்று.

# நாட்டுப்படலம்.

கடுவையமு தெனவருந்தி யுலகமேழுங்
காரணங்கள் பலபுதுமை காட்டி நாளும்
நடுவுநிலை யிசைதாங்கி யொருகோ லோச்சி
நங்கருணைக் கடன்மாரி நனிகொள் வேந்தர்
வடுவையிகழ் திருமேனி பொறுக்குமாற்றால்
வண்மைதவத் தரும்புவிக்கோர் மணிய தாய்வாய்க்
திடுமற்பு நன்னாட்டி னியல்புகூறற்
கெளியவல்ல வேனுமவற்றிற் சிலசொல் வாமே. (௧)

குரண்டமாந் தொழுதியொப்பக் காயமெல்லாங்
கோட்டியவெண் படங்கடெனக் குயிலின் கூட்டந்
திரண்டவா னகம்படர்ந்து சேணுர்முன்னீர்
செறித்துயாம் பாமுகட்டிற் சென்று சூழ்ந்து
முரண்டரவா லிபப்பூட்கை வீழ்த்திவீழ்த்தி
மொண்டருந்தி யாங்குயர்ந்த முகட்டின் மீதே
கரண்டமாங் கணமானஞ் சூல்கொண்டும்பர்
காரானை பெயர்க்கெனவுங் கவர்ந்த வன்றே. (௨)

மண்ணகத்தின் மன்னுயிர்கட் கிரங்கிமங்குன்
மாதர்வா னுதல்வெயர்ப்ப வனைபூண் காந்தப்
பண்ணகத்தீஞ் சொற்புலம்பி விழிநீர்சிந்தப்
பணிமுலைவிற் சொரிந்தமுத்தம் பவளம் வீழ
விண்ணகத்திற் றனுவயங்கி மின்னியார்த்து
வெடித்திடித்து மம்பரத்து மீது போர்த்துத்
தண்ணகத்தா லியுந்தரள விந்த்ரகோபந்
தனைவீழப் பொழியுமழைத் தாரை தானே. (௩)

கலிநிலைத்துறை.

மெய்யெனத் தருமறை விளம்பி நந்நபி
யுய்யெனத் தீனர்பா லொளிவின் மாநிதி
மையெனத் தயவுகோ டளிக்குமம்புயக்
கையெனப் பொழிந்தன கான மேகமே. (௪

பைங்கதி ரங்கிபோற் படியப் பார்தவம்
வெங்கதக் கரிக்கரி வெருவச் சாலவே
பொங்கவச் சிமையமேற் பொழிந்த சோணபா
செங்கணுங் கங்கையா மென வெழுந்ததே. (௫)

மாபமு மாரமும் வரையும் வேங்கையுங்
குரவமுஞ் சுழியிடை குளித் தெழும்பவே
யரவமா குறிஞ்சிமேற் றவு மகன்றுநீர்
விரவமன் னியவயன் மருத மெய்தவே. (௬)

மலைபடு மணிகளு நீல வள்ளியுங்
கொலைபடு புகர்முகக் கோடு மீடுற
வலைபடு வெள்ளமேன் மள்ள ரியாவரு
நிலைபடக் கவர்ந்தக நிறையத் தேக்குவார். (௭)

மண்டிய வெள்ளமே மாழை வெள்ளமே
கிண்டிய மருதயாள் கிணை முழக்குமி
னண்டிய வேரியி னணைக டாங்குமென்
றெண்டிசை முழவெலாஞ் செறிவ செங்குமே. (௮)

மதுக்களுண் டுற்பல மாலை சூடியே
பதுக்கருங் குரம்புகால் வரம்பு பண்ணைகள்
புதுக்குமின் பகடுகள் புரண் டுகழ்ந்தநீ
ரொதுக்கியே மேழிதொட் டுழுவர் பாரெலாம். (௯)

வள்ளையுங் குவளையும் வாய்ந்த நெய்தலுங்
கள்ளவிண் டலர்நறுங் கமலக் குப்பையுந்
தள்ளியொண் பசம்படித் தோங்கச் சாலிலலாம்
வெள்ளையுஞ் செந்நெலும் வித்து வாமரோ. (௧0)

கோடரா தருமறைக் குரவர் நந்நமி
நாடென வரையென நறைகொ டாரென
நீடுறக் குருத்துமே நிறைந் தெழுங்கதிர்
பீடுறப் பழுத்துமிக் கொழுக்கம் பெற்றவே. (௧௧)

மன்னபி தாமொடா ழுவன வணங்கிய
செங்நெலை யுழுநர்கள் சிந்தை கூர்தரப்
பன்னிய கரிவிதொட் டரிந்து பார்திகழ்
பொன்னவிர் வரைமெனப் போர்க ளேற்றுவார். (கஉ)

ஏற்றிய குவைமெலா மிருங் களத்திடை
தோற்றிய பதப்பக டுளக்கி விட்டபின்
காற்றினிற் பதடிவை களைந் தியற்றுவார்
மாற்றிய குரவர்கண் மனைக டோறுமே. (கங)

நெல்லெலாந் தத்தமின் னிறைய வீட்டியே
யல்லெலா மகற்றிகல் லறம்வ ழாமலாங்
கெல்லெலாம் விருந்துட னருந்தி யின்சுவை
சொல்லெலாந் தரக்கிளர்ந் தாக்கந் துன்னுமால். (கச)

ஆம்பலார் வாவியுள் ளம்பு யத்தின்றேன்
மேம்பலாக் கனிமுசு வழுக்கி வீழ்கறு
வேம்பலார் கேணிநீ ரொடுக்கு மங்கையிற்
றும்பல தெவன்கொன்மற் றுணைக்குந் தன்மையே. (கரு)

பணைவரம் புயிர்த்தவெண் பணில முத்தமு
மணையெழு பைங்கழை யார முத்தமுந்
திணைமுழு துயர்வன சிறப்பைப் பாரங்க
டிணைவிழி கண்டுசெய் நகையிற் றோன்றுமால். (கசா)

முண்டக நாண்மலர் முறுக்க விழ்ந்தபின்
வண்டக மகிழ்ந்துதண் ணறவ மாந்தியே
பண்டக வின்னிசை பயிலப் பேட்டனந்
திண்டகச் சேவலொண் சிறைக்குட் டுஞ்சுமால். (கஎ)

மங்கைய ராடவே யிலையி லாமயில்
பங்கைய மாம்பல்பைங் குவளைப் பன்முகைக்
கொங்கைவாய் கண்களுக் குடைந்து கூம்பிய
வங்கையா லஞ்சலித் திறைஞ்ச லாகுமால் (க.அ)

புயலெனக் கருங்குழல் சரியப் பூந்தொடை
துயல்வரக் கயங்குடை மகளிர் துங்கவே
யெயிலெனப் பிறழ்விழி யம்பிற் றோன்றவொண்
கயலென வோடிமங் கடிதிற் கொத்துமால் (க௯)

பூந்தடங் குடைபவர் கொழுநர் போந்துபூ
வாய்ந்தகான் பொய்கையண் டையிர்த்து நிற்பரா
லேந்தழ கணங்களு ரிலகு மொண்சினைக்
காந்தளுங் குமிழும்வன் களவு நோக்கியே (உ0)

வழங்கிய வண்டலில் வலம்பு ரித்திரண்
முழங்கியே சூன்முதிர்ந் தீனு முத்தெலாங்
கழங்கெனக் கன்னிய ராடக் கானுறும்
பழங்கனி வாயினூற் பவள மாகுமால். (உக)

வான்மிசை மழைகவிந் திருண்டு வார்துளி
தான்மிகப் பொழிந்தெனக் கவிக டங்கையாற்
கான்மலர்ச் சோலையிற் கனிக டாக்கவீழ்
தேன்மழை யெனத்திசை யெங்குஞ் சிந்துமால். (உஉ)

பங்கயவா வியிற்கடி பதுமத் தாளையுங்
கொங்கலர் குவளையுங் குதட்டு மேதிவாய்
தங்கவார்த் தொளிசெய்வெண் டாளம் பைம்பொறிச்
செங்கண்வா ளாவுமிழ் திங்கள் போலுமால். (உங)

அரம்பையின் கனிகண்மாங் கனிக ளாசினி
மரம்பயில் கனிகளுந் தகர்ந்து மல்குதேன்
குரம்பையின் மனையையுங் கூன்சங் கூர்வயல்
வரம்பையுங் கடந்துவர் வாரி தோயுமால். (உச)

மதுக்குடஞ் சிதைந்ததேன் வார்சி னைப்பலா
மெதுச்சுளை முட்களை வீழ்ந் தழிந்தெனச்
சதுக்கமென் கனுங்கய மூவக் கால்வழீஇ
புதுக்குகோ மறுகெலாம் பொலிய மண்டுமால் (உரு)

ஆலைவாய்க் கரும்புடைத் தாட்டு மார்பமுஞ்
சோலைவாய் நறவுணுஞ் சுரும்பி னோதையுஞ்
சேலவா யாவிபுட் சிலம்புஞ் சும்மையும்
வேலைவா யமைத்தெழும் விழவு மானுமால். (௨௬)

போத்துமத் தளஞ்செயப் புட்கள் பாண்செயத்
தேத்துட வையிற்குயில் சின்ன மூதலாற்
கூத்துடன் மஞ்ஞைகள் குனிப்பக் கண்டுபோன்
காத்துறு கவிசிர கம்பஞ் செய்யுமால். (௨௭)

அணியிழை யார்துணை யவரொ டூடியே
தணிவரத் துணியொடு நீத்த தக்கபூண்
மணிகளு மாரமு மாலைக் குப்பையும்
பணிவினல் வயினெழும் பறம்பு போலுமால் (௨௮)

நாட்டுப்படலம் முற்றிற்று.

ஆகப் படலம்-௨-க்குத் திருவிருத்தம். ௯௫

# நகரப்படலம்.

விளங்குமெய்ம் மறைவிதி யாசர் வேதிய
ருளங்குளிர்ந் தறபுநா டொழுங்கு தீபமாய்
வளங்கொழுஞ் சீர்திகழ் மக்க மானகர்
களங்கமற் றகல்வளங் கருது வாமரோ. (௧)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

நாகிளங் கமுகு மாவு நாளிகே ளும்ப லாவு
மாகிளங் கதலி யுங்கா ரளவுநந் தந்த வண்மே
லேகிளம் பிடியி னல்லா ரிழைதிகழ் நகரஞ் சூழ
மாகிளர் வனிதை மங்கை வனைந்தபைங் கடற்றா சொத்த.

கருணையாய்ப் புரக்கு மேலோன் ககனத மூல மாக
வருணமா மணியின் வாறே ரமைத்தெழுங் ககுபத் துல்லா
வருணவி ரேழு பாரு மத்தியிற் றெடுத்துத் தூக்குந்
தருணவான் சுடரிற் றோன்றுஞ் சாரமொத் திருந்த மாதோ. (௩)

கான்றுவெண் ணிலவு செய்யுங் கதிர்மணி குயிற்றிக் கோட்டும்
வான்றுயர் மாட கூட மன்னுமே னிலைகண் மேடை
யூன்றுமண் டபங்கண் மற்று முயர்ந்தொளிர் வனசான் றோர்செய்
தோன்றுவண் புகழ்பொன் றுது தகளற வோங்கல் போன்ற. (௪)

தீற்றுவெண் சுதைகொள் பித்தி செறிமணி மாடத் துச்சி
யேற்றுவெண் கொடிக ளெல்லா மிலங்கவே துளங்க லம்மா
மாற்றுதங் கனிமற் றீன்று வம்மினென் றூர்ந்த வென்னத் [௫.
தோற்றுநன் குயர்ந்தோர் தம்மைத் துயிற்கையா லழைப்பபோன்

விரைகமழ் கதம்பச் சேரூர் வீதியு மருங்கிற் சேர்ந்த
புரையது கடையு மம்பொற் புதவுகள் பலவு மாங்கே
திசைபொரு மாந்தர் ஹஜ்ஜ செய்யவந் தமைந்த வாற்றால்
வரைவரு நீற்றக் காலு மதகுகள் போல மன்றே. (௬)

திவளவாய்த் தென்னுந் தெங்கு சேணிடை செறிந்து ருட்டு
மவளவாய் நிலாப்பொன் மாடத் தணிமணிச் சிகர மீதிற்
றவளவான் றவழ்தல் கோதைத் தாதறக் குமுற்ற தீஞ்சொற்
பவளவாய் மடவா ரூட்டும் பண்ணெகிற் புகைய தாமால். (௭)

சொன்னமும் பணிபொற் றாசுந் துகிர்நவ மணியும் பட்டு
மின்னமின் பிறவி யாதென் றறிகில்லோர்க் கரங்கண் டன்றோர்
முன்மையுந் தருவி யார்க்கு முகமனோ டுள்ள வெல்லாம்
பன்னரும் பரிவி னல்கப் பயின்றதிப் படியி லன்றே. (அ)

சிறுவுமன் பில்லா ரியாவர் நீணிலத் துயிர்க டன்னா
மறுவகன் றன்றோ வென்ன வருந்தமுற் றுணரு நீரார்
சிறுவர்கண் முதியர் நூலிற் செய்வர்நல் லறிவின் மிக்கா
ருருவர்க டெருட்சி யெல்லை யோதலாந் தகைமைத் தன்றே. (கூ)

வள்ளையுண் குழவி ஞரு மகிழ்தரு மகவு மியாரும்
வெள்ளைவண் மதியை வெல்லும் விழுமறை முழக்க லாலே
கிள்ளையுங் கருதிக் கேட்டுக் கேள்வியிற் றரிக்குங் காரிப்
பிள்ளையும் பகருமென்னிற் பெரிதுணர் கலரி யாரே. (க0)

திறங்கிழ மின்றி யீகை செய்மண முரசு மூன்றுங்
கறங்கிசை யோடு சேணிற் கருங்கடன் முரசு மென்னப்
பிறங்கிய லாவணத்திற் பேரொலி கேட்டெல் லோரு
முறங்கிலா தகல்வர் வேலை யுடைத்தல கெழுந்த தென்றே. (கக)

குலகிரி மன்னும் வேழங் கூன்றெறுக் கவினப் பாய்மா
புலகிரி யென்ன நீள்செம் பொற்குவை கொடிஞ்சித் திண்டே
ரலகிரி துயில்பூம் பட்டோ டணிமணி பகரங் காட்டி
நலகிரி கையின் மெய்க் கொண்டு நணுகியன் றணுக லன்றே. (கஉ)

கன்றினைக் காணு தேங்குங் கபிலைபோ லிருந்து தேர்ந்து
நின்றிடை யவர்கண் முன்ன நேருமோர் புரியோன் றன்னைச்
சென்றிடை வருதி யட்டல் செய்தும்யாஞ் செய்து மென்ன
மன்றிடை வழக்குச் செத்தும் வழங்கிய வள்ளி யோரே. (கங

மறைப்பினு மொத்த பாலர் மறைபாப் பிழுக்கத் தத்தம்
பிறப்பொழுக் கோவி னொத்துப் பிக்கிமுன் போத ரங்கோ
விறப்பமுன் னேல்லை யைந்தா னியஞ்செயற் கரிய செய்தும்
சிறப்புறல் வேண்டு மென்னத் தெளிவரிக் நகரி யோரே. (கச)

நகரப்படல-முற்றிற்று.

ஆகப் படலம்-ங - க்குத் திருவிருத்தம். - எகூ

# றசூலுல்லா சிறப்புப்படலம்.

மல்லல்கூ ரிந்த மக்க மாநகர்க் கரசர் சிலப்
பல்லவா னுலகும் பூவும் பரித்தொரு குடையிற் றங்கி
யல்லன மாயத் தொனிசெயுஞ்சிங்கா சனத்தமர்ந்து வாய்மை
நல்லநான் மறை விளக்கு நாயகர் ஞான மிக்கார். (௧)

மாற்றருஞ் சிறப்பின் வைய மடந்தைபூ ணணிய தாகப்
போற்றரும் புகழ்சேர் வண்மை புரியர சரிமை கொண்டோ
ராற்றல்சால் குறைஷி வங்ஷத் தப்துல்லா நுதலிற் றோன்றிச்
சாற்றருஞ் செவ்வி யாணித் தரளமென் றுகித்த வள்ளல். (௨)

தருமமும் பொறையு மன்புஞ் சத்திய மறையு மொன்றி
வருமொரு வடிவ மென்ன வசுந்தரை யுதயஞ் செய்தோ
ரொருமையில் வாரா வொட்டா ரூர்செறி காட தாக்கிப்
பெருமைசேர் தீனோர் பெற்ற பேறெனச் சிறந்த கோமான். (௩)

வரம்பெறு நபிகள் யாரு மாசிலா வுனது தோழ
ருரம்பெறு தீனி லாக்கென் றொருவனைக் கேட்கப் பெற்ற
பரம்பெறு தக்க தீனோர் பரிமள நரந்த மெய்யர்
கரம்பெறு பதங்கண் மல்கக் கவினழ கேந்தும் வேந்து. (௪)

புதியவ னாசனத்திற் புகிற்பத கமலை நீப்பின்
மதியினம் மறுவக்ஷ வீறு மவுலுந்தான் முடிவினீவிர்
விதியவ னாறுமென் றெண்ணன் மேலவ னிறையோன் கூறக்
கதிபெறு செருக்கி னைம்பொற் கபுசுடன் கடந்த மேலோர். (௫)

அம்பரக் கார்சூற் கொண்டங் கணுகினக் கனமே திக்கும்
வெம்பரற் கானிற் பைந்தாள் விரைநறுங் கமல நீலம்
வம்பரக் காம்பு சேம்பு வள்ளைமற் றவுஞ் செழிக்க
நம்பரக் கானீர்க் கங்கா நதிதருங் கருணை யன்னார். (௬)

முந்துமென் றனது தோழர் முகம்மதைப் படைத்தி லேனே
லந்தரமும் பார்கள்வான் வெய்யோ னுடுபதி யுடுக்கண் வேலை

வந்துணைமந் தர்கள் யாவும் வகைவகை யளியே னென்னத்
தந்துதன் றவன் றுதிக்குத் தருதிமிக் குயர் ஹபீபு. (௮)

மக்கமு மதீன நாடும் பயித்துல்மு கத்தி சோடு
பக்கமும் ஷாமு றூமும் பரவைநேர் மிசுறு கூபா
மிக்கபா ரெவையு மெண்ணி மிகுதிறை யளப்ப தென்னத்
தக்கநேர் கலிமா நல்கத் தருத்துறு மிறசூ லுல்லா. (௯)

மான்றவ ருதுவேடன் மாட்டொரு பிணையாய் நின்றே
னான்றவர் நபிகட் கெல்லா மாசுமா யிமையோர் நல்ல
தின்றவ ருறு செல்வர் திருநயி னார்க்கு மாலை
தான்றவ ருதுசொர்க்க தலத்தினிற் கூட்ட வென்றே. (௯)

கோதிகழ் வதுவை நோக்குங் குழுந்திரண் டேகு மம்பொன்
வீதிக டிருத்தக் கூண்ட மிசையகா லமிழ்ந்து மாறாய்
நீதிகள் சிறந்தென் விண்பார் நிமிளமே காந்தஞ் செய்யக்
காதிய கருவி யேவி யளிப்பது கருத லுற்றும். (௧௦)

சூற்பதி பசுங்கார் நீழற் றுன்றுநன் னபிகள் கோமான்
மாற்பதி வாணு வீறில் வருபதி னடையா ளங்க
ணுற்பது நிகழ்ந்த பின்னர் நயியுக முடிவிற் சூழும்
வேற்பதி தறுகட் காபிர் விகடமுற் றெழுவ ரென்றார். (௧௧)

அடிகளீ துரைத்த லோடு மபூபக்க ரெழுந்து நின்று
முடிவுநாள் வினைக ளெல்லா முறைமுறை யருள்வீ ரென்னப்
படிபுக ழெவையு மீயும் பழிப்பிலி தூதர் செங்கட்
கடிகமழ் பவள வாயார் கருதுத லொடுங்கி னாரே. (௧௨)

றசூலுல்லா சிறப்புப்படல - முற்றிற்று.

ஆகபடலம் -௪- க்குத் திருவிருத்தம் - ௯௧.

# றவுஹாவருபடலம்.

கலிநிலைத்துறை.

இன்னல் சேர்குறு மூசெனும் ராச்சியத் திருந்து
முன்ன மேவரு வாறொரு தறுகண்ணர் மூடன்
வன்ன மேதெரி வரும்பொருண் முனிவெலாம் வளைந்து
பின்ன மேயக லாறவு ஹாவெனும் பெயரான், (௧)

கொள்ளிக் கண்ணெனக் கனன்றுதீ யுமிழ்ந்திடுங் கொடிய
வெள்ளிக் கண்ணனற் றீநெறி பழகிலா வெறிய
னெள்ளிக் கண்ணினுந் தெருட்சியு மிரட்சியு மில்லான்
வள்ளிக் கண்ணகண் புவிக்கொரு கூற்றெனு மறத்தான். (௨)

காத கன்றினைத் துணையுநல் லறமிலாக் காபிர்
பாத கன்கொடு வசியெனு மறுவகைப் படையான்
நீத கன்றிடுந் தீனுளோ ரியாவருந் தேம்பப்
பேத கப்படச் சேர்த்தடல் விளைத்திடும் பிழையோன். (௩)

மாறு பட்டவன் காபிரா னவர்க்கருள் வழங்குந்
தாறு பட்டமும் மதப்புகர் முகமெனுந் தகையான்
தேறு பட்டநம் வழியிழுக் காதமெய்த் தீனோர்
வீறு பட்டிடும் வசியினு லீர்ந்திடும் வெய்யோன். (௪)

வல்ல தீனிசு லாமெனு மரபினோர் வருந்தக்
கொல்ல வேறென வார்ப்பரித் தாருயிர் குறைக்க
வெல்லை சூழுற வருறவு ஹாவெனு மின்ன
புல்லன் மேயபின் மற்றொரு கொடியவன் புகுவான். (௫)

றவுஹாவருபடல - முற்றிற்று.

ஆகப்படலம் -௫- க்குத் திருவிருத்தம். ௬௧

# குந்தறுசாவரு படலம்.

மேவி யீங்குறு மிவனும்விஞ் சையருள் வீணும்
பாவி யானவன் குந்தறு சாவெனப் படுவோன்
தாவி மூழ்கிய யுன்கண னழலினுற் சார்ந்து
பூவி னுறிய மைக்கரு மேனியன் பொல்லான். (௧)

கழை சுழித்தெறி தடக்கையின் கடக்கயங் காலாள்
குழை சுவற்குசைக் கவினவாம் பரிகொடிஞ் சியந்தேர்
விழை யுறக்கடல் பரந்தென மேதினி மிடைந்து.
பிழை யுறக்கடி தடர்வனு யகன்சினம் பெறுவான். (௨)

தானை மொய்த்திடச் சூலம்வேல் கணைபல தாங்கி
வானை மொய்த்திடக் கணைமழை பொழிந்தெதிர் மலைந்து
தீனை மொய்த்தவர் தமதுயி ரலைந்திடச் சிதைந்தே
யீன மொய்த்திட வான்றெல்லா மழிவுசெய் திடுவான். (௩)

கண்டு கொண்டுறாம் ஷாம்குரு சான்பகு தாதுங்
கொண்டு கொண்டுயர் கோட்டையு நாட்டையுங் குறுகி
மீண்டு கொண்டுதீ னவர்தமை வெகுண்டமர் விளைப்பன்
பண்டு கொண்டவன் விதியெவ னுறுமெனப் பாரான். (௪)

செய்ய நேர்வழிக் குரியதோர் தீன்பயிர் தீய்த்து
வெய்ய தீவினைக் குபிர்ப்பயிர் விளைத்திடும் வினையான்
மைய னுமனக் கயவனும் வையமு மடியத்
துய்ய நாயக னேவிய முனிவெல்லாந் துடரும். (௫)

சூழ்ந்து முன்னவன் விடும்பலாய் கூற்றெனத் துடர்ந்து
வாழ்ந்த குந்தறு சாவுடன் பதாதியும் வலியும்
வீழ்ந் தனைச்சணத் திழிந்திட முதலவன் வியப்பா
லாழ்ந்த பாற்கடல் போலிசு லாம்பெருக் காமல். (௬)

சீல காரிய மூமினோ ரனைவருந் திரண்டு
கால காலமு மழிவிலான் றனையுளங் கருதி

யால காலமா யழன்றபுன் குபிரொலா மரிந்து
சால மாயுயர் நகரொலாங் கொண்டவ்வூர் தரிப்பார். (எ)

இடிக்க மற்றிலை யென்னவே நீனுளோ ரெல்லா
மிடுக்க ணுற்றனு ண்டிடிவிழு மரமென மெலிந்து
திடுக்க முற்றிட வூழிவெங் கனலெனச் சினந்து
கடுக்கு மற்றுமோ ரழகுகெட் டவண்வரக் காண்பார். (அ)

அழிவி லாதவன் றனக்குமா றுய்முனி வடுத்து
வழியி லாவழி நடந்தழற் குழியிடை மாழ்கு
பழி யருதவன் சாயிர்முன் னெதிர்படுங் கால
மிழிவ தானிறு வாணியாய் நாணமற் றிருப்பான். (கூ)

குந்தருசாவருபடல - முற்றிற்று.

ஆகப்படலம் -சு- க்குத் திருவிருத்தம்-ாடு

# குறுமூசுவருபடலம்.

கவர் மனக்குரு மூசெனப் பெயர்பெறுங் கயவ
னவை யழுத்திய வுளனெருத் தினையிலா நனந்தா
ரவய வப்பழு தானவன் றீன்வழி யவர்க்குச்
சுவை யகற்றுசொற் சமனெனத் தோற்றுபு சூமன். (க)

காற்றி னுங்கடி தார்த்தழி யினமுரல் காடத்
தூற்றி டுங்கவுட் கடகளி றுலவையென் றுலவித்
தோற்ற ருங்குசைக் கொய்யுளை ரதத்தளத் தொகைகொண்
டாற்ற லின்புவி யொருகொடுங் கோலினி லாள்வான். (உ)

கொண்டை யிர்க்கதிர்க் குந்தமுந் திகிரியுங் கொழுவுந்
தண்ட முத்தலை தோமரந் தோணிகூன் றனுவு
மண்ட மாட்படை பல்லவு முழவர்கை யணுகா
மண்ட லத்துறு மூமினெல் லாரையும் வதைப்பான். (ங)

வெடித்த சொல்லினன் மேதினி முழுவதும் வெட்டிப்
பிடித்து நன்னெறி யோருயி ராயினுந் பெயர்த்துத்
தடித்து நுண்ணிடை பணைமுலை வனிதையர் தம்மை
யடித்தி மூத்துவம் பாலவர் கற்பெலா மழிப்பான். (ச)

பெருப்ப மானமுன் னவன்வினை யிடைவிடாப் பிடிக்கு
முருப்ப மாறிலா வுழுவையிற் கொடியவ னுலகிற்
க்ருப்ப மாகிய கன்னியைக் கொணர்வனுட் கலங்கி
நெருப்பின் வீழ்மலர் போன்முகங் கருகியே நிற்பார். (ரு)

நிற்ப சென்செய்வ னேவெனப் பதைத்திட் நேரே
கொர்ப்ப வஞ்சியர் பண்டியைக் கருவியாற் கிறிச்
சிற்ப மென்றவக் குழவியை யெடுத்துயிர் கிரியா
தற்ப மென்றினும் படுத்துவன் கடிதனி யாயம். (சா)

வயிற்றி னுக்குளே பாலகன் மரித்ததே லவன்கூ
செயிற்றி னுக்கித முளித்தெரி னெட்டுயிர்ப் பெறிந்து
ஜெயித்து வந்தது கேடினி நமக்கெனத் தேம்பி
யயிர்த் திரங்கியிக் காருலத் தயர்ந்தறி வழிவான். (எ)

பரந்தி ருக்கும்வா ருதியெனப் பெருக்கினும் படையா
லுபரந்த றித்தெதிர் பொருபவ னின்மையா லொருங்கு
சுரந்து கிட்டுகே டறிகிலா தமர்செய்வான் றுலையிற்
புரந்தி ருக்குமா நகர்க்கெய்யாச் செருக்கொடும் புகுவான். ()

மகர வாருதி பெருகிநீர் வடிந்திடும் வண்ணம்
புகரி யானைதேர் கிள்ளைகொண் டடர்ந்துதன் புரியிற்
சிகர மாமுடி புனைகுரு மூசசென் றதற்பின்
பகர மாய்க்கரந் திருந்ததி னவர்வெளிப் படுவார். (கூ)

குறுமுகவருபடல - முற்றிற்று.

ஆகப்படலம் -எ- க்குத் திருவிருத்தம். ௱௪

# முசலிம்கள் கூபாவுக்குப்போம் படலம்.

எரி நின்றநீர் தணையெதிர் நீர்வரம் பிடித்து
வாரி யென்றகிற் சிறுகுழி யமைந்தன வளைந்த
போரி னிந்திர னறியப் பிறமறை போதும்
பேரி னந்தலை கூட்டிவை குவர்துயர் பெருத்தே. (க)

கூடி யுற்றனற் றவசெலாந் தலையிலாக் குறையால்
வாடி யுற்றதீங் கின்னவை பிறமென வருங்கொ
லாடி யிற்றுரும் பாய்நமக் கொருவனை யாசாய்த்
தேடி வைப்பது தெருளென யோசனை செய்வார். (உ)

யுத்தி யிதுகன் றென்னவே யனைவரும் பொருந்திப்
பத்தி யாலடம் புந்திரண் டாலறு படுமோ
சத்தி யாய்நம தினந்திரன் டிருப்பது தகைத்தென்
றெத்தி காந்தரும் போற்றுகூ பாநகர்க் கெழுவார். (௩)

இறை யருட்பெரு வளங்கொள்கூ பாநகர்க் கேகி
மறை தரித்தவப் பாசுத வியதிரு மகனார்
பொறை தரித்தருள் கைசெனப் பெயர்பெறும் புகழோர்
கறை யகற்றிய பூரண மதிமுகங் காண்பார். (௪)

கண்டு லம்பொரு மணிப்புயர் [illegible] இச் சலாங் கருதி
விண்டு லங்கிய மதியிலா வ[illegible]ென மெலிந்து
தண்டு லைந்திடத் தினவர் தமையெலாஞ் சால
மண்டு லைந்தெனக் குபிர்ப்படை படைந்தவை நவில்வார். (௫)

அஞ்சி லுனிலை யரியவன் றனக்கனி யாய
மெஞ்சி ஞனிலைக் கொடியவன் காபிர்தன் னிகலாற்
றஞ்சி னூர்சில ரவன்றனக் கொளித்துயிர் திரியா
மிஞ்சி னாங்களின் றடைந்தன மீதுதெவ் வினையே. (௬)

என்று கூறலும் கைசெனு மேலவ ரிரங்கிக்
கன்றி மாமன மங்கியீ ருயவிக் கால

நன்று தாவுற லன்றிநேர் பயக்கு மோறுன்
கொன்று போவதோ ருகமெனக் கோரமிக் குறுமோ. (எ)

ஆதி நாயகன் கற்பனை யாலுறு மதற்கிப்
போதி லுமலா லவ்வினை தவிர்த்திடப் போமோ
நீதி நாயகர் நந்நபி நினிவினை நெருங்கிக்
காதி லுன்றனை யெதிர்வது கடனெனக் கவல்வார். (அ)

வீணி லேயுயி ரிறப்பதிற் பீஸபீல் விரும்பிச்
சேணி லேயெதிர் மலைந்துகா பிர்களுயிர் செகுத்தால்
வாணி லேகர்தம் பதந்தரு மெனிலுமோர் மன்னர்க்
காணி லேயிலைக் காயத்தி லுறுமெனுங் கருத்தால். (கூ)

உம்மை நாடியிங் குற்றன முறையிகழ்ந் தோர்க
டம்மை நேர்வழி படுத்திய லார்தமைத் தடிந்து
செம்மை யாயரி யணைமிசை யுற்றினி ஜெகத்தி
லெம்மை யாள்வது கடனென யாவரு மிசைப்பார். (க0)

இந்த வண்ணமா கெவர்களு மொருப்பட விசைக்கு
மந்த வாசக முணர் தழில் தினவர் களையே
புந்தி கூருமி னிறையருள் புரிகுவ னென்பார்
அந்த வேளையி லவர்தமை யாரெசன வமைப்பார். (கக)

முசிலிம்கள்கூபாவுக்குப் போம்படலம் - முற்றிற்று,

ஆகப்படலம் -அ- க்குத் திருவிருத்தம் - ௩௨௫

## கைசராசுப் படலம்,

பாசமங்கல வலம்புரி முழக்கொடும் பதலை
முரசு திண்டிமந் தடாரிபல் லியங்களு முழங்க
விரை செறிந்ததார் மவுலிசேர்த் தரியணை மீதி
லரச மென்றுகை சவர்தமை யிருத்துவ ரன்றே (க)

சுற்ற முற்றவர் மகிழ்ந்திடத் தேர்ச்சியிற் றுணைவ
ருற்றி றைஞ்சிநின் றேபல பலபதி யுரைக்கக்
கற்ற விஞ்சைய ராசிவாழ்த் திடக்கரு தரிய
கொற்ற வர்பணிக் திருப்பர்சீர் கைசெலுங் குரிசில். (௨)

ஆத பத்திரங் கவிப்பவெண் கவரிக ளசைப்பப்
பாத பத்திர நிழலெனப் பைம்டாம் பரவ
நீத பத்திரன் டெழுத்தினை யெண்ணிலே நினைந்து
வேத பத்திரம் வளர் துறை சாசுவீற் றிருப்பார். (௩)

மல்லு லாங்கயக் கடங்கள்வெம் பல்லண மாக்கள்
வெல்லும் வாருழ வர்கண்மிடை மிடைந்திட வெருண்டு
கொல்லு மேறென வார்ப்பரித் தடையலர் குறுகி
னல்ல பீஷபீல் நாடியுற் றிருக்குமந் நாளில். (௪)

நில்லை யீர்ந்தவர் நினர்கூ பாகர் நிறைய
இல்லை யேகிளி போலொரு வனையா திருத்திப்
பல்லை போகமா யுற்றனர் மிகைத்தெனப் பதறி
யுல்லை போற்குரு மூசுமுன் னெருத்தர்சென் அ[illegible]ரைப்பார். (௫)

தூதன் வாய்மொழி கேட்டலு முடித்தலை த[illegible]க்கிச்
சீத மாறிய விணைவிழி கனலெனச் செவ[illegible]
நாத னேவுதி தடும்வகை யுணர்கி[illegible] ருமலி
போத நால்வகைத் திரள்கொண[illegible]கன்னலும் புகுவார். (௬)

கைசாசுப்ப[illegible] - முற்றிற்று.

ஆகப்படலம் -௬-க்குத் திருவிருத்தம். - ௩௩௧

## குருமூசு படைபோந் தமராடும் படலம்.

ஒடை தங்கிய முகப்புகர்க் கடுநடை யோங்கல்
கோடை யுந்திறல் விசருங் கடலெனக் குழுமி
வாடை யெங்கணுஞ் செறிவன கண்டக மகிழ்ந்து
கேட கன்றிடான் வயவரா யனுப்புவன் கிளர்ந்தே. (௧)

திறங்கி டந்தநீ ளவர்கள்வா ழுங்குட திசையி
லிறங்க முப்பதி னாயிரங் குரகத மேவி
யறங்கொ ளாக்குணக் காசைக ளனைத்தையு மடாப்
பிறங்கு முப்பதி னாயிரங் குரதம் பிறிப்பான். (௨)

பவனை யிங்குண மாங்குரு கூசசொற் படியே
தவனை யின்றிச்சே னைச்சது ரங்கமுந் தாவி
யெவனை யுந்துகட் படுத்துது மெனப்படை யேந்தி
யவனை யுந்திய தானையிற் றலைவர்க ளகல்வார். (௩)

பாவை யொத்தெழு மறுபதி னாயிரம் பரியு
மிரவை யொப்பெனத் தூகள்வெளி பம்மவே கியபின்
காவை யுற்றகூ பாவர சென்னவாழ் கைசைப்
பொர வயப்பரி சிலவனுப் பினனவண் புகவே. (௪)

விட மயக்குரு கூசவிட் டனும்பரி வீரர்
மடல் விரித்தபூம் பழனமு மடவியும் வரையு
நடலை ...ன் கடந்திகல் விரும்பக னணியா
லட லகன்றுகூ ..ங்காப் புறத்துவர் நடந்தார். (௫)

தனை நெகிழ்த்திரட் ..ட்கரி முழக்கமுந் தருங்கொய்
யுளை முழக்கமும் பதா..ன் முழக்கமு மொலிக்கும்
வளை முழக்கமும் பேரிகை முழக்கமும் வாரிக்
கிளை முழக்கெனச் செவிடுகள் ..வெது கேட்டார். (௬)

தீர மிக்கமா வீர்தள மிவையெனத் தேர்ந்து
வார மிக்ககூ பாவில்வாழ் கயிசுமற் றவரு
மீர மிக்கவன் றன்னையே வேண்டிநின் றிறைஞ்சிக்
கோர மிக்கவத் தறுகணன் முன்னெதிர் குதிப்பார். (௭)

விந்தை சேர்புயத் தினவர் பீலமில் விரும்பி
நிந்தை சேர்கொடுங் காயிர்க டமக்கெதிர் நெருங்கக்
குந்த மேறிவெங் கொடுமரங் களையயில் கொடுநே
ருந்து மாறுகண் டவர்கைத் தணிவகுத் துரைப்பார். (௮)

அரியின் முன்பொரு கரியெதிர் வருவபோ லடரும்
பரியின் முன்சிறு நரியெனக் கிடைத்தநீர் பாரின்

வரியின் முன்புறு அருவைபோல் வெருண்டுயிர் வானி
லிரிய மண்டுதல் காண்டுமென் றவருட னெதிர்ப்பார். (கூ)

மாறை வைத்தவன் கண்மையா னுமைகொடி வனாயி
னீறை யொப்புற மடிப்பனம் பிறையென நிறையி
லேறை யொப்பெனத் தினவர் குழுமியார்த் திடுவார்
சூறை யொப்பவெஞ் சமர்த்தொழி லவர்களுக் தொடுப்பார். (க0)

இடி முழக்கெனக் கறங்கென வார்த்தயி லெறிவார்
படி துளக்கிடப் பரித்திரள் கரித்திரள் பரிய
முடி தெறித்துகச் சேவகர் பிணம்பட முருக்க
வடி பெயர்த்திடா திருவரு மமர்விளைத் தடர்வார். (கக)

பட்டை யங்கொடு சாடுவர் பரிசையிற் றடுப்பார்
செட்டை கொண்டும்வாள் கொண்டுமொண் முடித்தலை துண்டிய
மட்டை குப்புற வீழ்ந்திடக் கடிவர்பின் வாங்கி
லட்டை யாமெனத் தூங்குதண் டத்திறு லடிப்பார் (கஉ)

வாம்ப ரித்திர ளனைத்துமோர் முகம்பட வளை துச்
சாம்ப ரிற்படுங் காயிர்க ளுவணிவே ருங்க
பாம்ப ரித்திர டொங்கெனப் பத்தரு பார்ந்தோர்
மேம்ப ரத்திசை யிரிவர்வெங் காட்டியுள் வெருண்டே (கங)

குனை கடற்புவி பொங்குமேற் றரிப்புறக் குறுவிற்
கனை யணைப்பவர் யாவர்வெங் கூற்றெனுங் காயிர்
வளைக ளொத்தவெங் கயம்புர விகள்கொடு வளைந்தார்
தனை யெதிர்ப்பா ரென்னசை யுணர்புறஞ் சாயார். (கச)

வெய்து வெய்தென நேர்வழி யினர் வெரீஇ அஆச்
செய்து செய்துசேட் செல்வரின் கூர்ங்கணை மாரி
பெய்து பெய்தவர் தொலைபட வோடிய பின்னே
வைது வைதுவன் காயிர்க ளணுகியே வருவார். (கரு)

குருமுகபடைபோர் தமராடும் படலமுற்றிற்று.

ஆகப்படலம் -ங- க்குத் திருவிருத்தம் = ௱சகூ.

குறூசுபடை நபிநாயகத்தின் கபுறையிடிக்க

# மதினமுறும் படலம்.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

கோளைப் பரிக்குங் கூருமுசு
கூட்டி யனுப்பும் படைத்தலைவர்
வேளைக் குதவு நபிகபுறை
வெட்டி நெருப்பிட் டெரிக்கவென
வாளைப் பகடு மதகிடைட்போய்
வரிவண் டுழுது முகையவிழ்க்கும்
பாளைக் கமுகி னுயர்ந்துதன்கண்
படுக்கு மதின நகர்க்கெழுந்தார். (க)

விருது கறங்க [illegible] வெக்காள
மேள முழங்கச் சங்கொலிப்ப
வருது ரகங்கண் ம[illegible]கயங்கள்
வயமா நெருங்க [illegible]னைவைப்
பொருது களமாக் கிடவெனச்சொற்
புன்மை நினைந்து நன்னெறியோ
ரிருது தெரிதற் கரியோனை
யேத்தி யிறைஞ்சி நவிற்றுவரால். (உ)

நறைதோய் சோலை திகழ்கூபா
நகரி யோரு மற்றோரு
நிறைசே ராக மிகக்கலங்கி
நெடியோன் றன்னை நோக்கிரங்கி
யிறையே யழியாப் பெரும்பொருளே
யேக முதலே நின்றோழு
குறைவி டெரிப்போ மெனவோது
மொட்டார்க் கொருகே டுதவுகவே. (ங)

என்ன விரதந் வேண்டிநிற்கு
　　மிசுலா மானோ ரனைவோர்க்கு
முன்ன ரறிந்த முதன்மொழியு
　　முழக்க முழங்கு மடியார்காள்
சொன்ன வுமக்குத் துணையாகத்
　　தோன்று மஹதி யென்பவளை
யின்ன லறவக் குரிருட்கோ
　　ரிரவி பொருவத் தருதுமன்றே. (ச)

அதன்பின் கொடிதாய்த் தினவர்பா
　　லாழிக் கடல்போற் றிரண்டீண்டி
மதங்கொ டறுகண் வாரணங்கள்
　　வாவுங் கதங்கொள் பரித்திரளுங்
கதஞ்சேர் காலா டிரள்களும் போய்க்
　　கடிசூழ் மதிலு நகரதனை
யிதஞ்சற் றெனினு மின்றியடர்ந்
　　திடுவோங் கடிதி னென்றெழுவார். (ரு)

காசி னியிலப் படிநிகழுங்
　　காலை திமிரம் பருகவரி
யாசில் குடபா லிடையடையு
　　மடைந்த வுடனே யிருகட்டும்
வீசி யெழும்புங் குணபாலில்
　　வெய்யோ னுதித்தா னென்று புட்கண்
மாசி லொலிவேட் டெழுமுடனே
　　மடியுங் கிழக்கே யிருள்வலியே. (சு)

எல்லை யதுபூ ருவத்திசையி
　　லெழுந்தோர் கணத்தில் விழும்விசும்பில்
வல்லை யுடையு மாதலினால்
　　வனத்திற் பயிலும் விலங்கினமுந்
தொல்லை பரவுந் தாபசத்திற்
　　றோயுஞ் சிறகா மாவினமு

மொல்லை தொடரும் பசிதனக்கு
னுலவி மேயா தழலுமரோ. (௭)

தேக்கும் புகழ்மிக் குரிய துய்யோன்
செய்ய கதிரோன் றனைவிளித்து
மேற்கு நடவென் றேயொருசொன்
மேற்கே முழங்குங் கேட்டவுடன்
தீய்க்குங் கிரணத் திவிரங்கள்
செலுத்தித் திமிரப் பிளம்பருந்தித்
தாக்குங் கவினப் பச்சிமத்திற்
சாருந் தடையற் றனபின்னே. (௮)

மேற்கே யொருசொன் முழங்கமலை
வேலை யுடுத்த மேதினியே
நீற்கே கயம்போன் றுருமாத்தி
னெடுநா ளிருந்து தூயமறை
நாற்கேள் வியுந்தேர் நபியிறசூல்
நலஞ்சேர் வளங்கொ டிருமதினுப்
பாற்கே குறுகுங் குருமூசு
படைக ளனைத்தும் விழுங்கென்றே. (௯)

விழுங்கென் றெனுங்கோ தகல்போத
வேத முழங்கு மதினுவி
னெழுங்கொய் யுனோபின் கணங்காலா
ளிபந்தோர் பலவு மிமைப்பொழுதிற்
புழுங்கி யிறையோன் முனிவுவெள்ளம்
புக்கி யமிழ்ந்து மாங்கவனி
யழுந்த வுடல்கள் விழிகடெறித்
தகல விறுக்கி றங்குமால். (௧0)

கள்ளார் காமஞ் சூதுகொலை
களவு துறவா திருண்டிருக்கு
முள்ளார் கொடிய காபிர்திர
ளொங்கும் புவனம் விழுங்கிகெய்த்தோர்

முள்ளார் களவின் பழச்சாற்றின்
மொய்த்தோ ருமது தியவருண்
கொள்ளா துமன மருவருந்துக்
குடித்த துமிழ்வ போலுமால். (கக)

நவமா மிவைகேட் டருண்மதிஞ
நகரோர் மக்கங் கருபாவாழ்
தவமா முனிவி மனைவோருஞ்
சாற்றற் கரிய றகுமனை
யவமாய் நினைந்து புகழ்ந்து சஜ
தாவா ரன்ன காலையெங்குக்
துவமா ¶பிருப்போன் றிருவுளமாய்ச்
சொல்லு மொருசொற் றொனிக்குமால், (கஉ)

என்னை நினைந்து தொழும்பிர்கா
ளிதயங் கலங்கா திருநுமக்கோ
ரன்னை யனைய தயவுதரு
மறஞ்சூழ் மஹதி யென்னுமவர்
தன்னை விடுத்தேன் சார்கின்றார்
தனியோ னொருவ னென்னுமற்
பொன்னை யுருச்செய் தொருவனன்று
போற்று மருடம் கெடுக்கவென்றே. (கங)

குருமூசுபடை நபிநாயகத்தின் கபுறையிடிக்க

மதினமுறும்படல - முற்றிற்று.

ஆகப்படலம் -கக- க்குத் திருவிருத்தம்-ரசஉ.

## இமாமஹதி வருகைப்படலம்.

சாரு மஹதி யென்னு மொரு
தகுதி யுடையோ ரடையாள
மாரு மகிழுங் குணவரா
யகன்ற வதனம் புயமதியுங்
கூரு மெழில்பெற் றுயர்மூக்குங்
கூடும் புருவ மூங்கருணை
சேரு மகரா லயமென்னச்
சிறந்த கறுத்த விழியுமுள்ளோர். (க)

நெடியர் குறிய ரென்றலக
நிகழ்த்தா தெவரு மகிழ்ந்தேத்த
படியா ரெடுத்த திருமெய்யர்
பாதாம் புயத்தா ரதின்புயத்தார்
பிடியா ரெனினு மெய்ப்பொருட்கு
மிக்கா ரெனினு நடுவுநிலை
வடிவு பிறழாத் தாக்கங்கொண்
மன்ன நிறைசேர் மாண்கிளையோர் (உ)

ஒழுக்கம் வண்மை பொறுமைநிறை
யோங்கி யிருக்குந் திருவடிவ
விழுப்ப முடைய மஹதியென்னு
மிக்கோர் சேணிற் பலவளத்தில்
வழுக்கி லொலியிற் பயப்பாவை
மானு மிசுறா ரிடைசால
வெழுப்பு தாகள்வான் புகரற்பத்
தீரா யிரமா வுடன் சார்வார். (௩)

தாசித் திரள்க ளெழுந்துவெய்யோன்
சுடரை மறைப்பக் கவினவா
வாசித் திரள்கள் புடைபெயர்ந்து
மதுரக் கடல்போல் வரவுலகே

காசித் திருந்த புகழ்பெறுமீக்
காயீல் மஹறதி யுடன்றீனை
நேசித் திருள்வெங் குபிர்கடிய
நேர்மக் காவில் வருவாரே. (௪)

ஊள்ள லகற்ற வுறுநாற்பத்
தீரா யிரங்கொய் யுளையுடனே
வள்ளல் மஹறதி வரவர்பின்
வரங்கூர் மீக்கா யீலென்ன
வுள்ளம் பெயர்நாற் பாறோடு
மையா யிரம்வா சியினுடனே
கள்ள மகலா மனக்கயவர்
கணத்தை முருக்க வருவாரோ. (௫)

சங்க முரனுந் திரைபொருமாத்
தளங்கொண் டெழுந்து மக்காவிற்
றுங்க மஹறதி வருஞான்றே
தோமி லிறம லான்மாதந்
திங்க ளுதித்த பதினுனுந்
திறங்கொள் பதினு றிலுங்கதிரா
வெங்கண் மடவா ளெயிற்றரவம்
விழுங்கி யுமிழ்ந்து விடுமன்றே (௬)

கலிச் சந்த விருத்தம்.

விண்மிசை விளங்குகதிர் வெய்யவனை வாயின்
கண்மிசையின் வெவ்வரவு கக்கியபி னுள்ளத்
தெண்மிசை யிரந்ததுய்ய தினவர்க ளெல்லாம்
வண்மஹறதி யென்றுமொரு வள்ளல்வரல் காண்பார் (௭)

ஏமமுறு கொய்யுளை ரதத்திரள் கொணர்ந்த
மாமஹறதி தம்முண்மதி வல்லவ ரிறைஞ்சி
நாமமுறு மும்மையொரு நாயக னளித்தான்
றேமுற வெமக்கொரு துணைக்கென நவின்றே. (௮)

மண்ணிடை யிருட்டிரள்கண் மாள்கனகு பானு
விண்ணிடை யுதித்ததென வெய்யகுபிர் தீய
நண்ணிநீர் முகத்தொளிவு வந்திமறை வாய
கண்ணிணைகள் பெற்றதென வன்பொடு களிப்பார். (௯)

தக்கக லணைப்பரி தடக்கரிகள் சூழ
மிக்கதிறல் கூர்குரவர் மேவிய செருக்கா
மக்கமு மதீனமும் வளங்கொணக ரெல்லாந்
துக்கமகல் தீன்மகிழ்வு சோர்வற விளங்கும் (௧௦)

விஞ்சுசல மின்றிவயன் மேவியுறு பைங்கூழ்
மஞ்சுதுளி செய்யவன மன்னியெழ லென்ன
வெஞ்சுகுபி ரிற்றிற மிழக்தருகு நற்றீன்
அஞ்சுபுவி யிற்றழைத துலங்கவரு நாளில் (௧௧)

மன்னுமிசு லாமசபு வாழவரு கோமா
னுன்னிகரும் வானுளவ ருங்கடிது சென்று
முன்னிய வழற்கொள்குறு மூசுநகர் தீனி
னன்னிலை வளப்பொருது மென்னவிடை நல்கும். (௧௨)

அவ்விடைகொ டாசுபட ரத்திசையை நாடிக்
குவ்விடை வெகுண்டுபுகு கோளரிக ணேராய்
வெவ்விடையும் வாவுமிவு ளித்திரளு நெஞ்சிற்
செவ்விடை விடாதுபெறு திண்ணியரு மொய்ப்பார். (௧௩)

வெள்ளமென வண்ணறரு வீரர்வய மாவு
மள்ளரு மொருங்கெதிர் வருந்திறமை தன்னை
நள்ளழ லழுந்துகுறு மூசழையி னண்ணி
யுள்ளதனை யேறிடுமோ சொத்தனுமா செய்வான். (௧௪)

வேறுபடு தெவ்வரடன் மேயதெனு முன்ன
மாறுபடு நெஞ்சனெறி மாழ்குகுறு மூசு
நீறுபடு கண்ணிணை நெரிப்பெழ முனிந்து
தேறுபடு தீனர்வல்ல செற்றிட நினைந்தே (௧௫)

சாற்றரிய தினவர்க டங்கள்வய வாசி
நூற்றறுப தாயிர கொடிப்பொழுது கொண்டே
கூற்றென வெகுண்டுபொரு மென்னவுரை கூறச்
சீற்றமிகு வித்திறல்கொள் சேவகர் நடப்பார். (௧௬)

சிந்துவை நிகர்த்துவரு சேவகரு மாவும்
வந்தவகை கண்டுமதி வண்மைபெறு மென்கோ
னந்தகுபி ரிற்படையி னுப்பண்விரை வாகச்
சொந்தமக லாதவொரு தூதனை விடுத்தார். (௧௭)

ஆதிமுத லானவனல் லாவொருவ னுமேனோன்
ஆதர்மறை தேருமிற குலெல்னவு நாடி
போதுகவி மாநல னுணர்ந்திடுமி னென்ன
நீதியொடு சென்றுரையு நீவிரென மன்னே. (௧௮)

கள்ளவிழ் நறுந்தொடை கவின்செய்திர போனான்
விள்ளவுரை தூதுபகை வேலையிடை நண்ணி
யுள்ளபடி கூறுவதொல் லார்செவி யுறுமுன்
றள்ளவனை யென்றுவசை சாற்றுவ ரடிப்பார். (௧௯)

தீயினிடை செல்வதெனத் தேணைபல சேடன்
வாயினிடை செல்வதென வான்கண்மையி னோர்கள்
வீயினிடை செல்லுநல வித்தகனை யவ்வோர்
நோயினிடை செய்தொழுதி நம்முழையி னென்பான். (௨௦)

அன்னதறு கண்ணர்தம் மனீகமவை முன்னீ
ரென்னமலி வாகுமிறை யீயுநெறி முன்னா
னன்னய முணர்ந்தொழுகு நன்கினர்தம் வேயுஞ்
சொன்னதி னுரைக்கிணை சுருக்கமுறு மந்நாள். (௨௧)

போதமி கருதவர் புகழ்ந்திடு முஹூற்ற
மாதம திதித்துநிகழ் வைகலஃ தைநாள்
காதனருள் கொண்டற்று நலன்பெருகு மிக்கோர்
[illegible] பகைக்கடல் கவற்றிடுதல் செய்வார். (௨௨)

வளாத்திர ளெனக்கவுண் மதக்கரிகள் சில்லி
கிளாத்தவ ரதத்திர ளெருக்குபரி வெள்ளங்
குளாத்துபா லைக்கிளை கொதிக்கும்வய வோரும்
புளாத்தரு முளத்தர்கொடு புக்குவர் கிளர்ந்தே. (௨௩)

பொங்குதிரை யொப்பவெதிர் புல்லறிவி னோர்க
டங்குதிரை வெள்ளமறு தாளையு மொடிக்கு
மெங்குதிர வாறெழு வடற்புரவி தாண்டி
யிங்குதிறல் காண்மினென வேந்தடர்வர் செய்யோர் (௨௪)

பல்லணம் விசித்துறு பரித்திரள் கடாவிச்
சில்லிக ளிலக்குகொடிஞ் சிச்சகடு தாண்டி
வில்லுழுவ ருத்தறுகண் வேழமு நெருக்கி
யொல்லென வெகுண்டுகுபி ருள்ளர்கை கலப்பார். (௨௫)

தண்டமழு வாளயி றனுக்களை யெடுத்துப்
புண்டரிக மேறுகள் புகுந்தென வுறத்தோ
ரண்டர்கண் முடித்தலை யறப்பவெழி லெண்டாழ்
கண்டபனி போலனி கரந்திடும் வெகுண்டே. (௨௬)

கோபகர விற்பழிகை கூடுகுபிர் வேந்தன்
ரூபமலை யெங்கணு மொருங்கிரித லோடுஞ்
சாபமிவ ரங்கையினர் தத்தமில் வெருட்டித்
திபவர்க டம்முயிர் செகுத்திடுவ ரன்றே. (௨௭)

வாயிரத வின்சொறரு வண்மையின ரெல்லாம்
வேயிரத மும்பகடும் வீசறு மிறப்பப்
போயினர்கள் கூளிகள் பொருந்தியுண வன்பா
லாயிர மடற்பரி யமர்க்கிடை பிடிப்பார். (௨௮)

வாளயி லிழுந்துகுறு முகபடை மன்னர்
சாளைய முடன்றெருஉ தணப்பவெதிர் மோதிக்
காளையரு மாமகுதி யுங்கடிய வீயின்
பாளைய மிறுப்பர்கள் படங்குகள் செறித்தே. (௨௯)

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

மூண்ட போர்க்களத் திடையபி விழுந்துறு
முனையிழந் துயிர் சோர்ந்து
மாண்ட வீரரும் புரவியு மத்தமெண்ணின்
மற்றவர் கடி தேகிக்
கூண்ட வன்குயிர்த் தலையெனப் பணைத்த தோட்
கொற்றவன் குறு மூசு
நீண்ட பொற்கழ லொழுது தாம் படுதுயர்
நினைந்தயர்ந் துரைப் பாரே. (௩௦)

மஹதி யென்னுமோர் வள்ளலும் வயவரும்
வாம்பரி பல வோடே
தொகுதி யாயகந் தந்திரத் தேறினர்
தும்பையந் தொடை வேந்தர்
திருதி கென்னவெங் கூற்றெனச் சீறினர்
சிந்தின நஞ் சேனைப்
பகுதி யாவையுங் கண்டில மென்கொலோ
பலித்ததென் றறைவாரே. (௩௧)

இன்னன் மன்னவன் செவிப்புக வொடுங்கன
லிணைவிழிக் கடை தூவக்
கன்ன வெங்கர ...க்கடாச் சிற்றம்வண்
கயங்களுங் குசை மாவுந்
துன்னு மாழியந் தேர்களு முழுவருந்
தொடுகட லெனக் கூடி
முன்னர் வந்தடர் முகிலிமா னவர்கெட
முருக்குமென் றளித் தானே. (௩௨)

விடை கொடுத்தலுந் தானையின் றலைவர்கள்
வேலையென் றொலி யார்ப்பப்
படைக ளொன்றொடொன் றேற்றிடத் தேர்கரி
பரிமிடை மிடைந் தேகக்

குடைகொ டிப்பதா கைகள்வெயின் மறைத்திடக்
கூன்குட வளை பேச
வுடை கடற்புகு மாறெனக் கறங்கென
வுய்த்தவ ணடை வாரோ. (௬௩)

வாரி வந்தெனக் கடையுக மழையென
மாருதம் வரு மாறாய்ப்
பாரில் வந்திடுந் தண்டெலாத் தீனவர்
பாசறை தனைச் சூழ
நேரில் வந்தவர் காண்டலும் வெருவியுண்
ணினைவழிந் திடும் போதி
லாரிவ் வந்தக ருடனெதிர் பவரென
வடிகண்மு னவில் வாரோ. (௬௪)

மட்டி லாதவன் போர்த்தளங் கடலென
வளைத்தலுங் கட மாறி
முட்டி லாதபே ரறிவினர் பயந்திவை
மொழிதலு முடன் றேற்றித்
தட்டி லாதநம் முதனமக் குறுதியே
தருந்தரும் வெருவென் னெனக்
கெட்டி லாதசீர் மஹதியென் பவருழு
கேளிருக் குரைப் பாரோ. (௬௫)

வாங்கு தெண்டிரைக் கடலெனக் குழுமிய
படைத்திர ளிமைப் போதே
நீங்கு நந்தமக் கிடும்பை வராதொரு
நெடியவன் றுணை சூழு
மோங்கு முண்மையி னொருவனைக் கருத்திடை
யுன்னிநின் றனை வோரும்
வாங்கு சொல்லியே தொழுவமென் றவ்வண
மாசறத் துணி வாரோ. (௬௬)

த்த மத்தின ருரைத்தவப் படியரு
ருள்ளவ ரனை வோருந்

கத்த முற்றவாங் கிட்டிமா மறநெறியாய்த்
தன்கருத் திடை நாடி
யத்த மற்றவக் காபிர்க டமைக்கரு
பாக்கென விரைந் தேத்திச்
சித்த முற்றிடத் தக்குபிர் கட்டிநேர்
செல்குவோர் தொழு வாரே (௩௭)

நந்த மக்கிக விலையெனுஞ் செருக்கின்
னவிவற வறத் தீய
பந்த முற்றிட நாயனங் கவர்படை
யவர்தமக் கிக லாக
மந்த மற்றவர் தானைநபர் துணைவரை
மாறென மறங் கூர்ந்து
தந்த மிற்கடிந் தொருவருக் கொருவர்வெஞ்
சமர்த்தொழில் புரி வாரே. (௩௮)

கதையுங் குத்தமு மழுவம்வே லெறியுங்
கலந்திடக் களந் தோறுஞ்
சிதையுந் துண்டமாய்ப் புயமறத் தொடையறச்
சிரமறக் கரம் வீழத்
தறையுங் குன்றெனப் பிணங்குவித் திடநிணஞ்
சம்புநாய் கழு காரப்
புதையுஞ் சேறெனக் குருதியா றொழுகிடப்
புலம்வெறும் புல மாமே (௩௯)

வெய்ய காபிர்க டத்தமிற் படைகளால்
வீழ்ந்தன ரவ ரெல்லாம்
பொய்யர் சொல்லென வெறுங்கன மாயதே.
புதுமையென் றதை யோர்ந்து
துய்ய நாயனை நின்செய லெனவிடத்
தொலையுமோ வெனப் போற்றி
யைய னுமறு நியும்வய வரும்வினைத்
தார்ப்பரித் தெழு வாரே. (௪௦)

பஞ்ச மாகதி பயின்றிடுங் குரகதம்
பனைமுகப் புகர் மாவு
மிஞ்ச மீறிய வீரரும் புடைவர
விடுசுடர்ப் படை மல்கக்
கஞ்ச மாமலர்த் தடங்களும் பூந்துணர்
க்கானமுங் கடந் தேகி
யெஞ்செ லாமறை யோர்குரு மூசெனு
மிராச்சியத் திடை சார்வார். (௪௧)

சிகர மேவிய கோபுர வாயிலூர்
தெற்றியுஞ் செண் டேறு
மகர மாமணி குயிற்றுகோ மறுகுவாம்
பரித்திர ணிரைத் திண்டி
மகர வாருதி போற்களஞ் சூழெயில்
வனைதலுங் குயிர் வேந்தன்
புகர பீனையுண் கனியென வசியறப்
புந்தியு ளாய் வானே. (௪௨)

பக்க நோக்குவன் றேர்ச்சியின் றுணைவனைப்
பசப்பணிப் படை யெல்லா
மொக்க நோக்குவன் றனக்குறுங் கணமங்
கொன்றுமே காணுன்
றுக்க நோக்கியாம் செய்பிழை கைவசஞ்
சூழ்ந்தென மதி சோர்ந்து
மைக்க ணோக்கியற் குறித்தெமக் கின்றுகாண்
வந்ததுகே டென்பான். (௪௩)

திண்மை யற்றிடும் புன்மைமோன் றன்னைநற்
றீனிலை வரு கென்னத்
தண்மை யுற்றபூங் கடிகமழ் குங்குமத்
தாரணி புய வேந்த

ருண்மை யிற்சொல் லொழிந்தது கண்டவ
னுயர்தலைத் துறவோரை
நண்மை யுற்றிடு முலகுறச் செகுத்தன
னடிகள் பல கொள்வார், (சச)

முடிவி லாதவன் முனிவுமிக் குறுங்குறு
மூசெனு மத்தேசச்
சுடிகை சேர்குறு மூசுயிர் கொன்றவன்
றொன்னகர் தமக் காக்கி
யடிதொழாதவர் கோட்டையு நாட்டையு
மக்கினிக் கிரை யாக்கிப்
படியெ லாமிக லாநெறி பெருகிடப்
பரிவுகொ டினி தாள்வார். (சரு)

அந்தி லைப்படி தன்னிடை யொருகுடை
யரசுசெய் துயர்தீனை
நன்னி லைப்பட வளர்த்தவி ரொளிமணி
நகுமரி யனை மீதிற்
றுன்னி வெற்றிவாள் வீரர்கள் வயப்பரித்
தொகைபெருங் கடல் சூழ.
மன்னி மாமஹ்தியுமவர் காப்பது
வச்சிர முல காள்வார். (சசு)

இமாமஹ்திவருபடலம் - முற்றிற்று.

ஆகப்படலம் - கஉ - க்குத் திருவிருத்தம். உ௱அ.

# தஞ்ஞால் வருபடலம்.

கலிநிலைத்துறை.

இச்சால் நெடுங்கடல்சூழ்புவி யெங்கு மெங்கோன்
மெச்சால் நெறி நடத்தியே மேய பின்னர்
நச்சால மழுன்றென நாடு நடுங்க வார்த்துத்
தச்சால் வருவன்குபிர்த் தான மிருந்து தானே. (௧)

முடிவின் கடுங்காலு முகிற்றுளி யோடதிர்க்கு
மிடியும் புருந் தாலென வெண்ணருஞ் சேனையார்ப்பப்
படியுங் கனித்தினர் நடுங்குறப் பன்னிருத்தும்
வெடிவெங் கூரற்கொய்சுவல் வேசரி மீது சார்வன். (௨)

வருகத் தபநெற் றியிலோர் வரிகோட்டி மத்தி
னருகத் தனுணர்ந்திடி லாதிதனக் குத்தீய
பெருகத் தகை யற்றவன் காபிரெனப் பிறங்கு
மொருகத் தீயுற்றிறைஞ் சுத்தம ரோதத் தோன்றும். (௩)

அந்தப்பெரு மத்திரி நீளமீ ரா று லெட்ச
முந்தப்பகர் நாலிலட்ச முழமுள்ள சேணு
நந்தப்படு மற்றிடக் காலது வெள்ளி நந்தூர்
தொந்தப் பரவைக் கிறங்கிற் பிறங்கா லுந்தோயா (௪)

இவ்வேசரி யேறிய புன்கணன் றன்னைக்
குவ்வேகுபி ரோரு மெகூதிகளும்பண் கூறுஞ்
செவ்வேழிசை யோர்களுங் கூற்றருந் தீயர்யாரு
மவ்வேழ்கடல் சூழ்ந்தெனச் சூழ்ந்து றுவார்களன்றே. (௫)

பிறக்கின்ற பிறந்தவரிற் பொலான்பெய ருங்காலஞ்
சிறக்கின்ற புவிக்குறு சீதநீர் மேகநல்கா
வறக்கின்ற தீஞ்ஞெழு வச்சிரம் பஞ்சமாக
விறக்கின்றது சீவனி யாவு மியம்ப லம்மா. (௬)

துளக்கும்படி. சேய்பசி துஞ்சுறத் துன்னும் யாரு
மளக்கும்படி கொண்டுணை வார்ந்து களிக்கு மாற்றுல்

விளக்கும்படி யிற்கொலை வெவ்வியன் செல்க னெல்லாம்
பிளக்கும்படி கொண்டுணை வார்த்திடப் பின்பு சொல்வான். (எ)

பொய்யிற்புகு காரணத்தான் மலைபோலு மெய்யான்
மொய்யிற்புக ணைந்த முரட்படையா னவயத்தான்
மையிற்புகு தீய மனக்கய வோர்களில் வோன்
மெய்யிற்புகு தற்பா னென்று வியந்து கொள்வார். (அ)

முழக்குத்தரு மக்கவி கைப்புகு மோனைவேதர்
வழக்குற்ற வழிப்படு மாமுநிவர்களாகும்
பழிக்குற்ற படிக்கொழுகப் படார் இப்பாவி
சழக்குற்றழி பாச்சிற சாலையிற் சேர்ப்பனன்றே. (௯)

குவிடத் திடியுங் கடலுங் கடுங் கூதிரும்போ
லெவிடத் துத்திறத் தழித்தெம்மரபின் றனூறித்
றவிடொத் திடவின் னொடு விண்ணையுந் தாக்குந் தாளா
னவிடத் தினிற் செல்கில ஞங்கு தலத்து மன்றே. (௧௦)

கொச்சகக் கலிப்பா.

அத்தலங்கண் மக்க மடிகண்மா மதினம்
வைத்திலங்குஞ் சோதி வைத்துல்மு கத்திசுஞ்
சுத்தரகருற்றுந் தாரிசொ மலையென்று
மித்தலங்க ளுனுமன்றி யெங்கு மடைவானே. (௧௧)

மற்றோர் ஹதிதில் வழங்குவது கூற்றனையா
னற்றோர் வலப்பாலு மோங்கு மிடப்பாலுஞ்
சுற்றோய மலையிரண்டிங் காண்டகையி லேகொணர்வ
னெற்றோய வியனுலகு மேலை யுலகுமென்றே. (௧௨)

அச்சுவர்க்க மென்னு மடுக்கலதின் மாளிகைகண்
மச்சுவர்க்க மேனிலைகண் மண்டபங்கண் மேடையெல்லா
மெச்சுவர்க்கம் பொன்னெருகல் வெள்ளியொரு கல்லாக
நற்சுவர்க்கம் போல வனிபடைடான் செய்கிற்பான். (௧௩)

சினைவான் பசாரி செய்யும் விருக்க மெல்லாம்
வனைவான் பைங்காந்தி மணிக ளதினாலே
புனைவான் பலவிகற்பப் பூம்பட் டிலைகளெனக்
கனைவான் பெருங்கழற் காற்கால் நினைவானே. (கச)

செப்போவார் விம்பித் திகழ்முலைகள் கண்ணயிலோ
துப்போ வமுதந் துளிக்குமிதழ் மின்னிடையோ
கைப்போ துலராச்செங் காந்தமோ யாதவருக்
கொப்போ துவமென் னுருமமாம்மை மாதான்றே (கரு)

ஊனாறும் வேட மொழிந்த வடிவாக்கத்
தானூறு பேய்க டணியே யிடையிருத்தித்
தேனூறு பாற்குடிநை நீமறுநீர் சிந்துகளும்
வானூறு வெற்பின் மனைகளின்கீ ழோடிவிப்பான் (கசு)

மறத்தின் கொடுங்கோலோ வன்கண்மை யோரிடத்து
புறத்தின் கொணரும் பொருப்பை நரகமென்றுந்
திறத்தின் பொறிச்சுடிகைச் செங்கணராத் தேன்பிறவு
நிறைத்துங் கொடிய நெருப்பினுற் செய்விப்பான். (கஎ)

கள்ளி மரமுகங் கதைதழுருப்ப மாறுமற்
றுள்ளிவிழும் பாலுக் துணர்துணர்கா யும்பலவு
விள்ளி லரியநொடு வெவ்வழுவி னுல்வெய்யவன்
கொள்ளி யெனச்சேந்த கொடியவிரு கண்ணனே. (கஅ)

காட்சியாய் மன்னுகின்ற கற்பமுங்கண் டோர்கலங்கச்
சூழ்ச்சியாய்ச் செய்யுஞ் சுவற்பிரச முங்கண்ணு
மீட்சியே யன்றியெரி வெங் நரகில் விழ்ந்தழலுந்
தாழ்ச்சியோ ரிங்குவெல்லாஞ் சத்தியமென் றட்கொள்வார். ()

எள்ளத்தீ யிக்குள் விருநெருப்புப் போலுடலந்
துள்ளத்தீய்த் தூழிமட்டுந் துஞ்சா திடும்பையுறுங்
கள்ளத்தீ யண்டரும்போய்க் காரணங்கள் காண்குபிர
ருள்ளத்தீ துண்மையென வுற்றவன்றன் னேடுரைப்பார். (உ0)

தலைமா நிலத்தெமக்குத் தம்பிரா னாகவந்தோய்
கொலைமாறி லாத்தறுகட் கூற்றுவன்கை யாய்விளங்கு
நிலைமாறு மெந்தையன்னை நீடிணைகேண் மக்கடம்மை
மலையா தெழுப்பியிங்கு வைகுதியெம் முன்னமொன்றே. (உக)

ஆங்கவர்கள் வேட மவர்போல் வருதிசென்ன
வோங்கல் வடிவ னுறுமலைகை கட்கோதப்
பாங்க ரவரவர்க்குப் பயந்தோர் துணைவர்மகார்
தாங்களென் வேடஞ் சடுதியெடுத் தேகுமால். (உஉ)

பெற்றார் போலொக்கப் பிறந்தார்போற் பெற்றாரைப்
பெற்றார்போன் மைந்தருற்ற பேர்கள்போற் காண்குதனு
முற்றார் தத்த முறைவழிகண் ணீர்பனிப்பப்
பற்று யதனியே பலன்கா ணைமகிழ்வார். (உங)

கிடந்தான வெந்தீக் கிடங்கவி யுங்காயிர்
மடந்தாளான் ஜெயமெல்லா மாயமென வையுறுத்
தடந்தாவத் துஞ்சுந் தாமரையெல்லா மீண்டளித்தார்
சடந்தா னுறுமிவர்போற் றம்பிரா னில்லையென்பார். (உச)

திருத்த முதுக்குறைவு சேர் முகிலி மூமின்கள்
கருத்தின்மரு ளின்றியொரு கத்தனைக்கா ணுந்தகையா
யொருத்தன்முனி யேபடரு மூழ்வான்செய் பவமெல்லாம்
பொருத்தமுறு மாயப் பொய்மைமெய்யன் றென்பாரே. (உரு)

மெய்மையென்றுட் கொள்ளாது வீணன் றொழிலதெல்லாம்
பொய்மை யென்று நிந்தை புகலுந் தீனோர்கடமைச்
செய்மைநெறி தீய்க்குந் தெறுக்காலன் றனக்கதழ்ந்தாங்
கைமைபுறு நண்பரோர் கதியினிற் போடுவிப்பான். (உசா)

குழைவுறவே வெய்யோர் கொடுநரகிற் சேர்த்தவுடன்
றழைவுறுமோர் முன்னோன் றருணத் திடைவிடுப்பான்
பிழையுறு புன்கண்ணன் பெறுசொர்க்கஞ் சேர்ந்தவரைப்
பழையமறை யாதி பவனத்தி லாக்குவனால். (உஎ)

சீற்றம்புகு சிறுகட் சிந்தூரங்கண் மான்றடந்தேர்
கூற்றம்புரை கொலைகைக் கொண்டதிற லோர்திரளுங்
காற்றம்பு.விக்காறுங் காலே திடரிஞரமை
போற்றம்ப மற்றழிந்து போமா றறியானே. (உஅ)

மாறுகொண்டிவ் வாறுமுன்னீர் வாரிபொரு தந்திரங்க
ளாறுகொண்டு நல்ல வறத்தா றறியாது
வீறுகொண் டிடப்படார்ந்தான் வெவ்வா ளார்ப்பரிப்பை
நூறுகொண் டெப்ப கொடிவரையிற் றீவானே. (உகூ)

தஜ்ஜால் வருபடல - முற்றிற்று.

ஆகப்படலம் - கரு - க்குத் திருவிருத்தம் - உகள

# ஈசா நபிவருபடலம்.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

இற்றன வுலக முற்று மெறழ்வலி யூகந் தன்னுற்
செற்றறம் வழுக்கிச் சூழா விழிவெனுஞ் செருக்குத் தேக்கு
மற்றவன் தச்சா லென்று மன்னவன் றன்னைத் தேடி
நற்றவ மோங்கு மீசா நபியிவண் புருவா ரன்றே. (க)

மறுவில்கற் புடைய வன்னை மறியங்கன் னிகையிற் பெற்ற
நறுவியன் மறைதே ரீசா நபிசனு வான் றிறந்து
நறுவிய தரையிற் சாரி னன்மணி மார்பின் மன்ற
லுறுவிரி கடல்சூழ் வைப்பி னேவறக் கமழு மன்றே. (உ)

அம்மனைத் தேடி நாசி யதனுழைத் தடையில் வந்து
கம்மெனக் கமழு மற்றெற் கடுத்தது கால மென்ன
வெம்மென நோக்கா னீற்று மயக்குற விரிதல் செயவான். (௩)

கதிரவ னுதயங் காணும் பனியெனக் கலைவி லாக்காண்
முதிரிருள் போலும் வெங்கை முன்னுறு அருவை போலு
மதிகுர றழற்கட் பேழ்வா யாளிபாற் களிறு மானப்
பிதிர்வரை யனீகஞ் சாயப் பேதையன் வெருவி யோடும். (௪)

ஓடுங் கொடிய தீய னுயிர்தொலைத் திடுது மென்ன
நேடியே தவத்தோர் பற்ற நிலையற விரைத னோக்கிப்
பீடிலி பருத்தா டன்னைப் பெரும்படி பிடிப்பப் பின்னர்
நாடியே யொல்லை யீசா நபியவர் கூடிக் கொள்வார். (௫)

புல்லிலை முடுகிக் கண்டம் பொறியென முனிந்து செங்கை
வல்லயங் கொடுசேட் டனன் மார்பிடை வீசத் தைத்துத்
தொல்லையன் றடுக்கு மாற்றுற் றெடுக்கணச் சிமைய மானச
செல்லடும் புவியில் வீழ்வான் சீவனுந் துறக்கு மன்றே. (௬)

விலங்கலென் றோங்குந் தோளான் மிடுக்கினால் வெய்யந் தன்னை
மலங்கநந் துறுங்கொல் லோடம் மாட்டெனுங் களியாற் றீமை
தலங்களிற் செய்யுந் தச்சால் தன்னுயி ரிமைப்பி னீங்கக்
கலங்கறு தனியோன் செய்யுஞ் செயலினைக் கருதப் பாலார். (௭)

அளப்படும் படைகள் சோதி யருணன்முன் பனிபோ னீங்கத்
தளப்பெரும் புவியின் மேலீ சாநபி வந்து தச்சா
லெளப்படு மாவி மாய்ப்ப வேகனங் கவலைச் சீத
வளப்படா நிரையந் தள்ளி வருத்தமுற் றழலச் செய்வான். (௮)

இன்னபின் தச்சாற் கஞ்சி யிடைகரந் திருப்போ னெல்லாம்
பன்னரும் பருதி காணும் பதுமமென் றக மலர்ந்து
கொன்னற வெளிப்பட் டான்று குளிர்நாக் காசாய் மேய
நன்னய மறைதே ரீசா நபிதமை யினிது காண்பார். (௯)

செங்கனி வாயுஞ் செவ்வி திகழ்மதி முகமுஞ் சோதி
பொங்கணி மருட்ட முங்கட் புலன்கொளா வழகு நோக்கி
யெங்கள்கண் ணின்னல் காத்த விறைக்கெலாப் புகழு மென்னத்
துங்கநின் னடத்தி னோர்கள் சொல்வர்கள் பணிப்ப வன்றே. (௧௦)

மண்பெற்றோம்யாங்கண்முன்னாமகிழ்பெற்றோங்குபிரார்நெஞ்சம்
புண்பெற்றோம் பின்னீர் கண்ணிற் புலமிலா ரான்றே மின்றே
விண்பெற்றொவ் வாது ளவும் வெண்மதி வதனங் காணக்
கண்பெற்றோ மடிக ளென்னக் கருதுவர் நிறுவ னோரே. (௧௧)

நிரட்பெருந் திமிரக் கங்குல் சிக்கும்வெண் கதிரோ னென்ன
முரட்பெருங் குபிர்க ணத்த முருக்கவந் துற்றீர் வாரி
யரைப்பெருந் தரையில் யாங்க ளாகியின் றடைந்தோ மென்னச்
சரப்பெருஞ் சலசம் வீழ்ந்து சலாமுரைத் தினிதி னிற்பார். (௧௨)

அப்பொழு தினிய கற்பி னன்னையா மறிய மீன்ற
கைப்பொரு ளனைய மேலோர் கதிதரு மறைநூற் கேள்வி
மெய்ப்பொரு ளிறசூ லுல்லா விழுமிய ரும்மத் தோர்க
ளொப்பொரு நீவி ருங்க ளுன்வழி யொழுகு மன்றே. (௧௩)

பிற்றையும் பகர்வார் முந்தும் பெரியவ னிறசூ லுல்லா
மற்றையொவ் வானோர் போற்று மாண்புறு மிறசூ லுல்லா
கற்றையங் குழலார் மூப்பைக் கருதிய விறசூ லுல்லா
நற்றவ நபிகள் யார்க்கு நாயக ரிறசூ லுல்லா. (௧௪)

மாதவ ரிறசூ லுல்லா மன்னிய வுயர்தீ னோத
மேதகு நபிமார் தீனின் விழுமிய வாத லாலும்
பூதல முடிவு மட்டும் போம்பவர் கவர்த லாலும்
பேதர வுமது தீனி னடவுநீர் பேணி யென்றே. (௧௫)

உந்தமக் கிருவர் தம்மை யுபரிமா மாக வைத்துச்
சந்தமைக் கவிகை வள்ள றந்நெறி நடவு மென்று

நந்தமக் குறுதி யீசா நபியரு ளியவவ் வாறே
பைந்தமிழ்க் குடைய தீனோர் பலருமொத் திணங்கு வாரே. (கசா)

மாரிபோல் வழங்கு செங்கை முகம்மது ஹனிபா வோடு
ஷிரியோ ரப்துல் லாசொற் சேய்முகம் மதையுந் தங்கட்
காரிமா மாக நாட்டி யவருரை மருதூட் கொண்டு
பாரிலே யொருவர் போல்ப் பல்லரும் பொருந்தி நிற்பார். (கஎ)

அவ்விய குபிர்க ணைந்த வறுத்தறுத் திசுலா மார்க்க
நவ்வினர்க் கிருகண் மாய்க்கு நன்னிலைக் கலிமா நல்கிக்
குவ்வினிற் பலருங் கூண்டு கோணறத் திருத்தி நன்னீர்
யெவ்விதிற் குறைவுற் றுநற் றீன்வழி யொழுகு வாரே. (கஅ)

நானிலை முன்னு லீசா நபியுநல் விறசூ லுல்லா
தீனிலை நடப்பர் வெய்ய தீவினை மாக்கள் வைகு
மேனிலை யாணம் வீழ்த்தி மெய்ந்நெறித் தீன்வி ளக்கிக்
கோனிலை முறைவ ளாது குவ்வொரு குடையி லாள்வார். (ககூ)

அற்றிடுஞ் சீவன் மீட்டு மடந்தைமெய் யெனவே மாறி
யிற்றிடுந் தீன்வி ழாம லெழுந்திடத் தாங்கிச் செங்கோல்
சுற்றிடுந் தரைப்பா ரெல்லாந் துங்கனுற் பாலுண் டாண்டு
கற்றிடுந் தெருளா லாதி கடவுளைப் பணிதல் செய்வார். (உ0)

பொறிகளிற் கலந்து நிற்கும் புலன்களும் புந்தி தானு
நெறிகளிற் பிரியா தொன்றாய் நிலைபடக் கூட்டி யஞ்சி
மறிகடற் புவியி னேந்தி மரிமுதல் சுஜூது தன்னில்
வெறிகடித் தருளோ ராதி விண்ணுல கடையு மன்றே. (உக)

நல்லறந் தழுவு மீசா நபியுயி ரகன்ற தென்ன
யில்லறந் தழுவு மேலோ ரியாவரு மந்தோ வெங்கட்
கல்லறுந் துணையா ரீண்டு மகவிட மழியாக் கெங்கொ
லெல்லலற் றீனற் கென்செய் வோமென் றுளம்புழுங்கி நைவார். ()

ஏங்குவர் குழுமி யுள்ள மிரங்குவர் திருமெய்க் கையாற்
றாங்குவர் காங்க ளோங்கித் தன்முகத் தறைந்து கன்றிப்

பாங்கினிற் றழுவார் நெஞ்சம் பதைபதைத் தழுங்கிக் கண்ணீர்
தாங்குறப் பனிப்ப வாவி சோர்ந்தெனக் கலங்கு வாரே. (உ௩)

ஆகுலத் தயர்ந்து வாடு மவரந்தை யகசி லாநன்
மாகுலத் தின ராற்றி மரிப்பிலான் விதியை நொந்து
தீகுலத் தவர்க்கே தென்னத் திருநபி தமை யடக்கிப்
பாகுலத் திருப்பில் லாதிப் பயனுணர்ந் தொழுக்கஞ் செய்வார். ( )

நொறில்பரித் தேர்க டாவி நொன்மையா தவனி றப்ப
வெறிகிளைப் பவன மெங்கு மிருள்பரந் திருண்டு மாறு
மறியமீ சாவே தாம்பர் மானிலத் திவசு மூன்றிற்
றறுகில்யா ஜூசு மாஜூ செனுந்தறு கண்ணர் சார்வார். (உ௫)

ஈசாநபி வருபடலம் முற்றிற்று.

ஆகப்படலம் - கசு - க்குத் திருவிருத்தம். உகூஉ.

## யாஜூசு மாஜூசுவருபடலம்.

பெருங்கடல் கவித்துப் பொங்கிப் பெயர்ந்தெனக் கூற்ற மொப்ப
நெருங்கடல் வளையு மீனர் நேமிமீ தமளி யாக
வொருங்கடற் சங்க மென்று அரப்பரி துரந்தாட் சித்த
மிருங்கட மார்வுந் தேரு மிவுளியு மல்க வென்றே. (க)

வன்னியென் றழலுஞ் சீற்ற மாற்றலர் தினி னீர்மை
துன்னிநற் கடுமை காட்டத் தொடுகடல் பரந்தாங் கீண்டி
மன்னியர் தம்மிற் சோதி மணியணி மகுடஞ் சூடுங்
கொன்னிரு பதிக ளாறே றாயிரங் கோடி மன்னே. (உ)

அணிமணி மவுலி வேந்த ராயிரங் கோடி பெரும்
பணிமணி கொழிக்கு முன்னீர்ப் பவ்வமார்ப் பரிப்ப தென்னக்
குணில்படு முரசு காளங் குளிறுபல் லியங்கள் பொங்க
மணியின மிளிர மூன்று கூட்டமாய் வருவர் மன்னோ. (௩)

காற்றின்மும் மடிக விக்துக் கதழ்முகற் கதங்கண் மன்று
மாற்றினின் மடுவி னூற்றி னமைந்தநீர் முழுதுண் டேருங்
கூற்றினில் வெருவி ரண்டான் குழாங்கடெண் டிரையின் முன்னீர்
தேற்றுநீ ரென வருந்திச் செருக்குறாச் செல்லு மன்றே. (௪)

கொலைபழுத் திருக்கு முன்றுங் குழுக்கடம் பண்டிக் கிய
விலையுண வென்னு மாற்று விருந்தசைப் பாரப்பி னேங்கு
மலைகள்பா தவங்கண் முற்றும் வயிறுகள் விங்கத் தேக்கி
யலையுடைத் தவனி பொங்கு மமலையிற் றெழுகு மாதோ. (௫)

முதனடு வீருங் கூட்ட மூன்றுளா ரனை நீள
மதனள வுரைக்கி னேர்சா னோர்முழ மொளறு காற்பான்
மறமிகு மவரி லெய்த வழியில்லான் வழியோர் காதந்
தறமன்னும் பார மெய்திற் றங்கியே வல்லே சார்வார். (௬)

குத்திர மகலா வன்னோர் சோதைமார் தமியொ ருத்தி
புத்திர ரோரைந் நூறும் புதல்விய ரோரைந் நூறு
மித்தனைப் பெறுவா ளென்னி லெண்ணிலு மடவா ரீனுஞ்
சத்துரு வைந்த நீட்டுஞ் சலதியிற் பெருக்க மாமே. (௭)

மைப்பெருங் கங்கு லென்ன வனைத்துறுங் கொடிய மாற்றார்
பைப்பெரும் பருவாய்ச் செங்கட் பணிவிசை யிடந்த யாரிற்
பொய்ப்பெருங் கொடுங்கோ லோச்சிப் பொருமிக வின்மை யாலே
மெய்ப்பெருங் களிப்பான் மூன்றுந் தொன்றுதா லாண்டி ருப்பார்.

வாரிகுழ் மதின மக்கம் மைத்தல்மு கத்தி சொங்குந்
தாரிசி றுவெற் பிங்கள் கொற்றரான் கிடத்தைந் செல்லார்
சேரிச வாமா னோர்க ணெஞ்சகங் கலங்கத் தாக்கிப்
பாரின்மற் றிவைக ளெல்லாம் பாசறையிற் பாக்கு செல்வார். (௯)

கடந்தரு சிறுகட் டீற்றக் கடமலை கொடிஞ்சித் திண்டோ
கடந்தரு கலினப் பாய்மா கசிவியாம் பதாதி யோடு
மடந்தரு படிமேல் மாறி விண்டியார் கவியார் சால
வடந்தரு கொடிய நீரார் மறுவுவர் தமை வியந்தே. (௰)

காசினி யணைத்து மேத்தக் கருகலர் கடிந்து கொண்டோ
மாசினி நமக்கு யார்கொல் வலியுறா மன்றி யுண்டோ
வாசினி யசச னுள்ள வறிகொல்ல வெழுமி னென்றும்
பேசினிப் புடவி யெங்கும் பெரும்பொறைக் கடலை யொத்தே. ()

நடுப்பதி வெளிகா ணாது நளிம தத்திரட்டி யோர்க
ளெடுப்பர்கூன் சிலைகா ணேற்றி யேளனம் பெரிய வெல்லாந்
தொடுப்பர்கா தள விழுத்துத் துணைவிழி சேப்பக் காதி
விடுப்பர்கூ ரப்பு மாரி வெயினிழ லாக வம்மா. (௧௨)

உரத்தறு கண்ணை ரொல்லே யொழிந்திடும் வகையோ ராது
பொரத்தகாப் பகழி மாரி பொழியமற் றதனை யெல்லாங்
காத்தடும் விழியில் லாதான் கடவுளர் தம்மைக் கூவி
யாத்தவாய் கலிதோய்த் தீயு மென்னனு மஃதே செய்வார். (௧௩)

பாகழிவா யெல்லாம் புண்ணீர் பட்டவை காண்ட லோடு
மிகழுவார் விண்ணூர் வாழு மிறைவையுஞ் செகுத்தோ மென்று
புகழுவா ரினிநம் மோடு பொருவதற் கெதிரா ரென்று
மிகழுவார் குரவை யார்ப்பா ரிருணிறை மடைமை யோரே. (௧௪)

பூமிமீ தொருகொ டிக்குட் பொன்றிடுங் கொடியோர் முற்றுந்
தோமிலா தனையுங் கொன்றேன் றாங்கொறுஞ் செருக்குநந்த
வேமுறு முனிவு தாக்கி விரைந்தழித் திடுதி யென்ன
மூமினு னவர்கை யேற்று முதல்வனை யிரந்து நிற்பார். (௧௫)

குவிந்தநல் லோர்து வாக்கைக் கொண்டிறை தறுகண் ணாள
ரவிந்திட முனிவொன் றேவ வம்முனி யிருண்ட கார்போற்
கவிந்தது குளித்தோய் முன்னர் கண்ணிமைத் திடுமுன் றீயோர்
செவந்ததீ விழுங்கி டம்போற் றீவர்மற் றெருவ சன்றே. (௧௬)

யாஜுஜு மாஜுஜு வருபடலம் - முற்றிற்று.

ஆகப்படலம் ௧௰ - க்குத் திருவிருத்தம், ௨௭௮.

## தாபத்துல் ஷறுலென்கிறபட்சிவருபடலம்

எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

நற்குண மழிந்த புன்மையோர் சேர்த்தி
    நனிபெற நந்தமென் பனபோற்
றற்குண மிகுந்த வன்கணர் கொடியா
    ஜூசுமா ஜூசெனத் தோன்றும்
புற்குறும் பினர்கள் கணமிறை முனிவாற்
    பொன்றுநா ளேழினிற் போதுஞ்
சற்குணஞ் சிறந்த பட்சியொன் றதின்பேர்
    தாபத்துல் ஷறுலெனத் தகுமே. (க)

திறப்படு மின்ன புட்சபா மறுவாச்
    சிமையமோ ரிரண்டினுக் கிடையிற்
புறப்படு மிந்த மண்மக டன்னைப்
    போழ்ந்தெழுன் றுந்தினஞ் சிரமு
முறப்படு மூன்று திவாச்செவி னெஞ்ச
    மொருதிருப் பகற்செவிந் பதமு
கிறப்படுஞ் சிறையும் பிணமு நிவைப்பு
    நீணிலத் தவ்ளர்கண் ணுறவே. (உ)

அன்னது வதன மாந்தா னனம்போ
    லறைகழுத் தடர்புலிக் களம்போன்
மின்னது கெழுமெய் பறவையி னுடல்போல்
    வியன்பத மத்தகத் தான்போன்
மன்னதன் டங்க லிபுறு மூவர்வெண்
    மதியென விளங்கிடும் வல்க்கை
தன்னது விரலிற் சுலைபுமா னபிதங்
    தருங்கில் ராஸிபூண் டிருக்கும். (ந)

இறையருள் பெற்றமூ சாநபி யாசா
    பிடக்கையிற் பிணித்தில வெயிற்செய்

சிறைகளை விரித்து விசைகொடு திகாந்தச்
　சேணெலாம் பறந்துறத் திரியு
முறைவழி யிழுக்கா விறையுளந் தங்கு
　மூமிறு னவர்தமைக் காண்கிற்
குறைவின்முத் திரைமோ திரங்கொடு தடவுங்
　குளிர்முகந் தண்ணிலா வுறுமே.　(ச)

கோடுறுச் செப்ப முடையவன் விழிவாற்
　குறைவறு கொற்றமாண் புடையோன்
பீடுறு பெரிய நாயகன் றனக்குப்
　பேதமா மாறுகொண் டுலகிற்
கேடுறு மூரண்பூண் டிருமனக் குபிர்கூர்
　கீழ்மையாங் காபிர்கள் காணில்
நீடுறு மாசாக் கோல்கொடு தட்டு
　நிறங்கெடக் கறுத்திடு முகமே.　(ரு)

வாரணப் புவன முலைமலை யாய
　மறிதிரைக் கருங்கட லுடையாய்ப்
போரணி கலன்கண் மன்பதை யாகப்
　பெறுகுவன் மிருதருச் சேட்டுந்
தாரண மங்கை யுழிபெலா மன்ன
　தகைமையாய்ப் பறந்துலாம் பட்சி
சீரணி மக்கத் தாவண வீதி
　சென்றுளச் செருக்கொடு நிற்கும்.　(சா)

தாபத்துல்லறுவென்கிற பட்சிவருபடல - முற்றிற்று.

ஆகப்படலம் - கசு - க்குத் திருவிருத்தம். உஅச

# பெண்ணோடுபெண் புணரும்படலம்.

நன்னெறி யிழிக்கித் தீநெறி பழக்கி
நடக்கும்வன் காபிரா னவர்க
டுன்னெறி நாடு முழுவதுங் குபிரிற்
சூழுமா டவர்குழா மருகி
பன்னெறிக் கடந்தூற் றவர்தம் மடவா
ரற்பறப் பெருகிய வாற்றான்
மன்னெறி கடற்போன் மதசல முவட்ட
மாதரு மாதரும் புணர்வார். (க)

கழிகொள்கா தலினன் மழவிடை யன்ன
காமுக ராங்களுண் டெனினும்
வழிபட வவரோ டிணங்கிய சகத்தை
மகிழ்ந்தனு பவித்திட மாட்டார்
பழிகொள்பெண் ணொடுபெண் சேர்க்கைசெய் திருப்பார்
படியிவிப் படிநிகழ் காலை
யழியிலோ ரிளவல் தன்னது கருமத்
தவப்புடன் வெள்ளிடைப் படுவான். (உ)

வெளிப்படு மிளவல் பின்றொடர்ந் தாசை
விளையுமென் றனைப்புணர் கென்னக்
களிப்புட னுற்பான் மடந்தையர் தொடர்ந்து
கலையையு முரிந்தலக் கழிப்பார்
வளிப்படு கடல்சூழ் புவிநிரு வாணி
யாயிருந் துயிர்சினைப் பாரை
நளிர்ப்படு நறும்பூ மரத்தலத் துயர்வா
னுரியர் சூழ்கொடு நிற்பார். (ங)

பெண்ணோடுபெண் புணரும் படல - முற்றிற்று.

ஆகப்படலம் - கஎ - க்குத் திருவிருத்தம் உஅள

# துனியாமுடியும்படலம்.

அந்தவே ளையிலே யனைத்தையு மழிக்க
வழிவிலா ராஜத முடையோன்
முந்தவே யிசுறா பீல்தனை விளித்து
முயன்றுகு றாமெனும் வகிநேர்
வந்தவ ரூராங்கொண் டூதியச் சண்ட
மாருத மறைந்திடுங் காற்றுற்
றெழுந்தமா தர்கடங் கருப்பமற் றெல்லாந்
துஞ்சுறக் கலங்கிவீழ்ந் திடுமே. (௧)

உண்ணவே யடிசி லள்ளிய கரமு
முதகநீர் கோதிய கரமு
மெண்ணமே பறந்து திடர்குவி பூழை
யெற்றுமா ருதமறைந் தாங்கே
திண்ணமா மலைகள் பஞ்சுபஞ் சாகச்
சேணெலாம் பறந்திடும் பின்னும்
வண்ணமார் குறா தென்னு மோர் சத்தம்
வரவலித் தூதுவர் மலக்கே. (௨)

ஊதிய கடுங்கா லுறைந்திட வுலகி
லுள்ளபல் லுயிர்களுந் தருவின்
மீதில்வா லிபறு மாருதம் விழியால்
வியன்சிறை தாபத்துல் லறுலுஞ்
சோதிசேர் மக்கத் தாவண நின்று
துஞ்சமீ ரேழுல கெங்கு
நீதிசே ருயிர்கள் பல்லவு மிறந்து
நிலைபறத் துலைந்திடு மதன்பின். (௩)

மன்னுபல் லுயிர்க ளனைத்தையு முண்ணு
மலக்கவர் தம்மையோர் கூவி
யுன்னுமுன் னறியு முதல்லனிவ் வுலகி
லுயர்ந்தவா னகத்தினி லுயிரோ

டின்னுமுற் றவைக ளுள்ளவோ வென்ன
வெங்களைப் புரந்திடு மிறையே
முன்னுமோ ரெண்ம லல்லதிங் கில்லை
முஃகலா தென்று முனை மொழிவார். (௪)

கலிச்சந்த விருத்தம்.

ஒல்லிய வென்மரி யாதென மாசக
லோர்முத லோன்வினவக்
கொல்லிய வன்கண் மலக்கல் மவுத்துரை
கூறுவர்நின் னறுகிற்
புல்லிய வானவர் நால்வ ருனைப்பணி
பூணுமு கற்றவெனச்
சொல்லிய சிற்றடி யோமொரு நால்வர்
தொலைந்தன மற்றவையே. (௫)

பகரு மறுவுடை பரிப்பவர் தம்முயிர்
பற்றென வத்தமிலான்
புகல முடிப்ப ரினந்தன தாவி
பொறுத்தவ ரியாவரென
நிகரி லிவன்மலக் கல்மவுத்து
நினைக்குமு னேயறிவோ
யிகலறு சிற்றடி யோமொரு நால்வ
ரிருப்பவர் மற்றிலையே. (௬)

என்னலு மூவர்த மாவியு முன்னொன்
றிறப்பவ னேவிடவே
பின்னமி லாருயிர் தன்னை யொருங்கு
பிடிப்ப மரித்த பினே
யின்ன மிருப்பவ ராரென நாயக
னேகன் வினவிடவே
மன்னவ வென்னை வணங்கி யொடுங்கி
மலக்கல்மவுத் தருள்வார். (௭)

அன்னைபி லாயழி யாய்துயி லாயெளி
யாய்துணை யாயுறுவார்
தன்னைவி லாய்மறை யாது விளங்கு
தனிப்பொரு ளேயருளே
முன்னையெ லாமுனை வேய்புவி வானிடை
மொய்த்த படைப்புகளி
லென்னை யலாதில நின்னடி யேயெளி
யேனென வேமொழிவார். (௮)

நின்றன தாவி பிடித்திடு நீயென
நீதிபகர்ந் திடவே
மன்றன தாவி மலக்கல் மவுத்து
வலித்து வலித் துயர்வா
மென்றன தாவி வரும்படி
யெனக்கென வேயுழலும்
றொன்றெறு நாயக னேயினி யென்செய்வ
னேனென வாய் விடுவார். (௯)

என்புந் தசையு நரம்புந் தறிபட்
டிடவுறு தம்முயிரைத்
அன்புட னுன்னி வலிப்ப வருந்தவர்
துறவுற வருகிலையே
முன்பு மவுத்து வருத்தம திப்படி
முறுமெனத் தெரிகிற்
கொன்புகு பித்தா நிற்கில னென்று
குழறியரற் றுவரால். (௧௦)

மலக்கல் மவுத்து மவுத்தின் மிகுத்த
வருத்தமதிற் குளமே
கலக்க முறத்தனி குழறு முழக்கங்
கனிபணி மீதனிற்
றலக்க முறச்செவி யுற்றிடின் முற்றுயிர்
தன் றுடபடைப் பெனவு

நலக்க முறக்கண நந்திடு மப்பனு
மன்னுயிர்வாங் குவரால். (கக)

மெய்த்த புனற்கீழ் பூமியி லோர்தாங்
மேல்வானத் தொருதாள்
வைத்தர முற்றிட வூன்றி வலித்துயிர்
வாரா தழல் காலை
யுத்தம நாய னுறங்கி யசைத்துட
னுடலநடுக் குறவே
மொத்தவ சாவி அறக்குமத் தன்மை
மொழிந்திடி வரிதம்மா. (க௨)

சூதைச் செடிமிசை யிட்டொரு மென்றுகில்
துரிதினிழுப் பனபோற்
பேணைப் புனையு மலக்கல் பவத்துயிர்
பிரியப் புவிவானிற்
சேணைப் பெறுமொரு சீவனு மில்லைத்
திறனிறை பொறைகுறையா
பேணைப் பெறுமொரு சோதி பொழிந்தவ
னேயழி யாதவனே. (க௩)

துணியா முடியும்படல - முற்றிற்று.

ஆகப்படலம் - க௮ - க்குத் திருவிருத்தம். ௩௦௦.

## ஆண்டவ னழிவைநினைந் தலத்தும் படலம்.

அறுசீர்க் கழில்டி யாசிரிய விருத்தம்.

அலகிலாப் புகழா யோங்கு மாதியாய் நிறைந்து நிற்குஞ்
நிலகல லகவொளான் றில்லாச் சிறப்புறு தூய்ய நாய
னுலகமீ தேரா யுள்ள வுயிர்கள்பற் பலவுஞ் செத்துக்
கலகமெல் லியங்குஞ் சத்தங் கண்ணுறக் கிடக்குங் காலை. (க)

அருளுடை னெவையு மாக்கி யழிக்கும்வல் லமைசேர் மேலோன்
தெருளுடன் றன்னிற் றனே திருவுள மாவான் முன்னே
பொருளுடன் மறைவியான் நீந்த போதமோர்ந் தொழுகு மென்ன
மருளுடன் தந்த தர்ம மறையின ரவரெங் கென்றே. (உ)

நன்னெறி நடத்த விட்டே னடத்திடா வரச ரெங்கே
மன்னெறி யாமென் னேவன் மறந்திடு மாந்த ரெங்கே
முன்னெறி மாந்தர் தங்கண் முகத்துக்கா யளித்தோ ரெங்கே
கொன்னெறி யடிமை தன்னைக் கொடுமைசெய் தவர்க ளெங்கே. ()

நாடினா னுதவு பொன்பூ ணணிமணி முதன்மற் றெல்லாந்
தேடினே னனின் கென்ற நியவக் கொடியோ ரெங்கே
நீடிய பொருள தெங்கென் னிலயிதுன் னிலைமை சீர்மை
பாடிய துளதென் றிச்சைப் படிவனுப் பறைந்தோ ரெங்கே. (௪)

சீரிடை யுலகு மன்ன திலத்திடை யுயிர்கள் யாவுந்
தேருடை பொருளு மன்ன பொருளினுற் றிகழ்வை யாவு
மாருடை பொருளா யிப்போ தடைந்தது முன்னும் பின்னும்
பேருடை யவன்யா னென்று பெரியவன் மொழிவ னன்றே. (௫)

ஆண்டவ னழிவைவிதிக் கலத்தும்படலம் - முற்றிற்று.

ஆகப்படலம் - ௧௧ - க்குத் திருவிருத்தம். ௨௦௫.

## இறந்தவுயிரெழும்பச் சூறாதுபடலம்.

மரித்தவல் லுயர்கள் யாவு மண்ணவே யெழுப்பி நீதி
யுரித்தகேள் வியுங்க ணக்கு மொருங்குகேட் டவர்கள் பெற்றுத்
தரித்திடுந் தலங்கள் காட்டத் தக்கதா யிசுறு பிலேப்
பரித்ததே யெழுப்பிச் சூறைப் பற்றியூ தென்பான் முன்னேன். (க)

சீலமன் பெரிய தூயோன் றிருவுளப் படிசூ றென்னுங்
கூலமார் குழல்கைப் பற்றிக் கொண்டதின் றூது வார்க
ளோலமா யுயிர்க ளாக்கை புறம்புகு மதனின் கூற்றச்
சாலமார் தனைக்கா ணுங்க டலங்களிற் புகவு மென்றே. (உ)

நந்தலி லரிய சோதி நன்மையுந் தீமை தானுஞ்
சிந்தனை யுடன்சோ திக்குந் தினமிதா யிற்றென் றாத
முந்தவே முதல்வன் செய்த முறையினோ ருறுப்பி ருது
தந்தம துடலிற் கூடிச் சார்ந்தபின் னெழும்பி யாவும். (௩)

வடிவுறு மனுவுஞ் ஜின்னும் வளரறி யுண்டன்ம யாலே
யடியவர் துயர் கெடாமத் தடுத்ததென் றறிவர் சாலப்
படிவடிப் படிய தார்க்கும் பருதிவல் லயத்தின் காறு
முடிமிசை கொடூர மாக முடுகிவெங் கனல்க டேவும். (௪)

வெங்கதிர் தாக்கும் வெப்பால் வெந்துவெந் துருகு மூனந்
தங்கணைக் கான்மு ழூர்தா டமைதனை கழுத்துச் சென்னி
யங்கத னளவு மிஞ்சி யவரவர் செயன்மட் டாக
மூங்கவாழ்ந் துழல்வர் செங்கை முழமெழு பதின்கீழ் மன்னோ. ()

வேளையங் கதனில் வெய்யோன் வெந்தழற் காங்க டாக்க
மூளைகள் கொதிக்க வேங்கை முரிதல சென்னத் தேண்டிக்
காளைய சொடுமின் னுருங் கண்பொன்று வுரியா னோடு
*கோளைவார் நாவு மின்றிக் கூர்த்தவண் டிரிவ ரன்றே. (௬)

அழலிடு மெழுகு போல்வெந் தாக்கைக ளுருகி யோட
வழலுவார் வெய்யி லாற்றூ தொதுங்கிடத் தேடி னுங்கோர்
நிழலுமா தரவு மின்றி நிலையற நின்று நின்று
கழறுவா ரினிமற் றேர்நாங் காண்டுணை யென்று நலைவார். (௭)

தந்தைதாய்க் கொழுநி யன்னோர் தாள்பணிந் தருளார் தாமுஞ்
சிந்தையாய்க் கேளீர் துன்பந் தீர்த்தவர்க் குதவா தாரு
நிந்தைசெய் தெளியோர் தம்மை நெறிகெட லடர்ந்தோர் தாமு
முந்தையோர் செய்குற் றங்காண் முன்னுறப் பொருந்தார் தாமும்.

வஞ்சனை விஞ்சை யாலே மானுடர் தமைச்செற் றோரும்
விஞ்சிய புறஞ்சொற் றோரும் வெவ்விதிற் கொலைசெய் தோரு
மஞ்சுறன் கடைநின் றோரு மானத மழிக்கின் றோரு
மெஞ்சலாற் செயலே கக்கு மினருங் கள்ளுண்டோரும். (௯)

*கோள்-ஐ-வார்-ஐ, கோழை, வார், நீர், கோள், கொள்ளல்.

பிறங்கடை நிற்கின் றேரும் பெறுநடு வொரீஇயி னேரு
மறங்கிடை யாய்ச்சூ தாட்டி னயர்ந்துளஞ் செருக்கி னேரு
மறன்கடை படுத்து மேலோர் மனங்குறை படுத்தி னேருந்
திறன்கடை படாத வேதத் தின்பொருள் பயின்றி டாரும். (௧௦)

கெட்டன மழிந்தோ மென்பார் கேட்கிலென் சொல்வோமென்பார்
பட்டனம் பாவி யென்பார் பரதவித் தலைந்து சொல்வா
ரிட்டவூன் வெயிலின் மூழ்கி யெய்த்திளைத் தயர்வார் வெய்யோன்
சுட்டவெங் கனலிற் றேகஞ் சுருண்டிடக் கருகு வாரே. (௧௧)

அம்பியா வவுலி யாக்க ளவசவர் தம்மைப் பேணிப்
பம்பியெப் படியோ வென்று பயங்கொடு நிற்ப ரென்னிற்
கெம்பிய கணக்கட் கியாவர் கிருபைகோ டஞ்ச லென்பார்
வெம்பிய வவர்க டத்தம் வினைகளின் வருத்தந் தானே. (௧௨)

இந்ததா னுலாம் வானத் திரவிவெங் கனல் பொறுது
தந்தநீ ழலிலா துங்கித் தகையற விருக்கின் றீரே
யந்தநாட் சென்னி தன்னை யடுத்தழல் விடுக்கும் வெம்மை
வந்தநீர் பொறுக்கு மாறு மனதுணர்ந் தமல்செய் வீரே. (௧௩)

தனியனு சனுகாத் தூய தற்பர னழிவி லாதான்
முனிவிலா மிறங்குமக்காண் முற்றுணை காணே மென்பார்க்
கினிமையா லஞ்ச லஞ்சல் யானுள னுங்கட் கென்ன
மனுடர்யா வருக்குந் தாயாம் வள்ளலா தரவு சொல்வாம். (௧௪)

ஆயவந் நாளொன் றைம்பா னாயிரம் வருஷ மாக
வேயவோர் நிலையி னிற்பார் யாரையுங் கேள்வி கேட்டு
நேயமார் நன்மை தீமை நிறைசெய்புந் திராசிற் றூக்கித்
தூயவ னீதி யாகத் தொடுபலன் கொடுப்ப னன்றே. (௧௫)

நன்மையோ ரனுவுண் டென்னி னலனுறு சுவர்க்க மீவான்
றிம்மையோ ரனுவுண் டென்னிற் றீநர குழை விடுப்பான்
பன்மைசேர் வினையி ரண்டும் பயில்சம னாகச் செய்யி
னன்மைசே ரெகரூ பென்னு நலத்திருந் திடுவன் மாதோ. (௧௬

அனந்தலை யில்லா னுக்கு மக்கண்டம் பதிக்குந் தாயோ
ரினந்தலை மயக்கத் தின்புற் றிடமேதோ கதிக்கு மம்மா
நனந்தலை யுலகு மென்ன நாட்டமெத் தலத்தி லாதி
யெனந்தலை யாது வாரித் திரளெனச் சில ரிருப்பார். (௧௭)

அழுவமர் புவியின் கண்ணே யாருயி ரொடுங்கு முன்னர்
குழுவெலாந்தொழுதிறைஞ்சுங்கொற்றமிக்குடை யோன்றன்னைத்
தழுவிய நன்கு நானுந் தகாதெனு நீற்றுத் தள்ளும்
வழுவையுஞ் சமமாய்ச் செய்யு மவரவர் செய்கை தாமே. (௧௮)

வன்மையை யுடையோ னுக்கு மற்றவர் புவியிற் செய்த
நன்மையுந் தீமை தானு நவில்சம னாக லாலே
பொன்மைமே லுலகி னுக்கும் பூமிக்கும் புகுதப் போக்கி
யின்மையா லுலகு மென்னு மிடத்தினி லிருப்ப ரன்றே. (௧௯)

மன்னிய வுலகி லுள்ளோர் வாழ்க்கையும் வடிவும் பூணுங்
கன்னியர் நலனுஞ் செல்வக் களிப்புங்கண் களிப்பக் காண்பார்
சென்னிகள் வெடிப்ப மூளை தெறிப்பவெந் தழலின் மூழ்கிப்
பன்னிய வூழி காலம் படுநர கறையுங் காண்பார். (௨௦)

எரிந்தசெந் தழற்கண் மாளிக் கிருந்தழற் கிடங்கில் வீழ்த்திக்
கரந்திடா விருப்புத் தண்டாற் கறுத்தடித் திடியென் றார்த்துப்
பொருந்திட வுடலைத் தாக்கப் பொறுக்கலா துழல்வார் கண்டே
தெரிந்தவிச் சேடி யெம்மைச் சேர்க்கலா யிறையே யென்பார். ()

பொன்னிலைத் தருக்க ணல்கும் புதுச்சுவைக் கனிகண் மாந்திச்
சென்னிலைப் பணிகண் மங்காத் தூயபொற் றுகில்கள் சூட்டி
நின்னிலைக் குரியோ ருற்ற நலங்களு மகிழ்வுங் கண்டே
யின்னிலை யெம்மைச் சேர்ப்பா யிறையவா வென விரப்பார். (௨௨)

கொப்படு குழையுங் கண்ணுங் கொவ்வையங் கனிபோல் வாயுஞ்
செப்படு புளக கும்பத் திகழ்முலை யிழையு மேந்து
மைப்படு குழலி னாரு மகிழ்நருங் களிப்பல் கண்டே
யிப்படி யெம்மைச் சேர்ப்பா யிறையவா வென விரப்பார். (௨௩)

## கலிநிலைத்துறை.

நபிக ளுக்கர சானவர் நான்மறை விளக்கப்
புவிக ளுக்கர சானவர் பொறையுளோ னருஷிற்
கவிசு ரத்தினி னடந்திடுங் காரண கடவுள்
செவிக் ளுக்கமு தாயதீச் சொற்புகர் செய்வோர். (௨௪)

ஊறு முத்தினி னீசொரு வனுக்கலா துண்ணப்
பேறு பெற்றில யென்னவக் கேணிமேற் பெருகக்
கூறு பாண்பொன் ஞான்றியம் பியாவருங் கொண்டு
மாறு போற்குவித் தூ வட்டெடுத் திடத்தரு மன்னோ. (௨௫)

கோட்டி னீள்கரு பாவிடத் திருக்கையிற் கொல்ல
வீட்டி லேயிருந் தபுஜஹ் லனுப்பிய வெறியோன்
நீட்டி யுச்சியிற் சிலைமிசை யிருந்தெரி சிலைநா
ணீட்டி யம்பதிட் டாங்குவீற் றிருந்திடு நெறியோர். (௨௬)

மனை யிருந்தருள் பிராட்டியா மனத்திடை வறுமை
நினை விருந்தமை யாதிதன் றிருவுள நோக்கே
யனைய பொற்கிரி யிரசிதச் சிமையமு மனுப்ப
வினையி தென்றிகழ்ந் தகற்றிய தெருட்சிகர் மேலோர். (௨௭)

பைத் திருந்திய பஃறலை யெழுப்பெரும் பணியை
மொய்த் திருந்தகா காவிறைக் காகவே முருந்திப்
பொய்த் திருந்தவர் நன்னெறிப் பின்வரப் பொறியாய்
வைத் திருந்தமை முனையு மணந்தருள் வள்ளல். (௨௮)

மெய்ம்மை யாகிய சுருபமும் விழுமறை விளம்புஞ்
செய்ம்மை வாய்மையு மொருவனைத் தெருண்டிடுந் திறமும்
பொய்ம்மை யானவை யறிகிலாச் செயமும் புகழு
மிய்ம்மை யேயொரு வடிவமா யுதித்தருளெங்கோன். (௨௯)

முன்பு தோன்றிய படைப்பெவை யெவைக்குமுன் பமைத்துப்
பின்பு தோன்றிய பெருந்தகைக் குரியநம் பெருமா

னன்பு தோன்றிய வபுதுல்லா பேறெனு மாச
ரின்பு தோன்றிய தினவர்க் கிரங்கிய இறசூல். (௧0)

இறந்தவுயிரெழும்பச்சூறாதுபடல - முற்றிற்று.

ஆகப்படலம் - ௨0 - க்குத் திருவிருத்தம், ௩௱௩௫.

## கேள்விதீர்ந்து நபிநாயகமன்ருடிக்கதியருள்படலம்

வள்ள லாகிய முகம்மது நபியுல்லா வரிசை
யுள்ள மாதவ ரந்தநா ளாதமற் றோருங்
கள்ள மாந்தர்கள் காரியங் கேட்கவே கலங்கி
மெள்ள முன்னவ னருளின்மன் ருடுவர் மிகவே. (௧)

சந்த மேற்குறை யென்கொலா யுறுமெனி னமர்க
டந்த மேற்குறை விலகலெவ் வழியெனத் தளம்பி
முந்த வாதமு நபியுமற் றவர்களு முன்னு
மந்த வேளைமன் ருடுவர் மதினம்வா ழரசே. (௨)

கடுத்த பாவிக டம்மையுங் காணுமா ருவா
நடுத் தலத்தவர் தம்மையு மரியவ னருளா
லெடுத்த வன்புகொ டிரங்கிமன் ருடியே யேம
மடுத்த மேலுல காக்குவர் மதினம்வா ழரசர். (௩)

ஆதி நாயகன் றொழுதம் பொருட்டினு லம்பொற்
சோதி விண்ணுல கடைந்தவர் பெற்றியார் சொலுவார்
கோதி லாதவ ருடிப்பன வுண்பன குறையா
வீதி சார்மணி மாளிகை பலவள மிகவே. (௪)

ஆழி யின்னமு தறன்மது நீர்தினை மார்ந்த
வீதி வாயிலின் வழிவள முலையினர் வேட்கைப்
பாழி யொண்மணி மாளிகை பெற்றுளம் பரிவா
யூழி காலமுஞ் சிதைவிலா வாழ்க்கையா லுறுவார். (௫)

வண்ணி றற்கதிர் முத்தினுற் குயிற்றுபொன் மாடத்
துண்ணி லாவிய பைங்கதிர் மாளிகை யுளியே
பண்ணி லாவிய மாமணிக் குரியின்மேற் பரிவா
யெண்ணி லாதுறு வார்சிறு தென்றல்வீ சிடவே. (௬)

எவன மங்கையர் கிள்ளைபோற் கொஞ்சிய விஞ்சொற்
கவன மன்றியே செவிப்புல னுண்டவர் சயிலத்
தவன மென்சுணங் கிளமுலைக் கோடுமார் பழுந்தக்
கவன மின்றியெஞ் ஞான்றும்வீற் றிருப்பருட் கனிந்தே (௭)

இளமை மூப்பிரண் டெட்டெணுன் றெனநிகழ்ந் திருக்கும்
வளமை யாம்வய தாடவர்க் கரிவையர் வயது
முளமை பன்னிரண் டெண்ணிரண் டென்னவாய்ந் தோங்கிக்
களமை பொன்றிட வாணுதல் கனமிசை கவின்பார். (௮)

கைத்தி ருஞ்சுவ னத்தினெஞ் ஞான்றுமிக் கனிப்போ
டெய்த்து நீடிய வூழிகா லமும்பழி யொரீஇ
மைத்தி ருந்திய கட்கனி விரிபுவாய் மடவார்
பைத்த டஞ்சுனை யாடியா னந்தமாய்ப் பயில்வார். (௯)

சேந்த சீறடி பாண்மொழி துடியிடைச் சிறியார்
காந்து பன்மணிக் கச்சணி பூண்முலை கனப்ப
வேந்தி யேவல்செய் திடமணி யாசனத் திருந்து
பூந்த ருக்களின் சுவைக்கனி யுண்டவண் பொலிவார். (௧௦)

வரம்பு மட்டிடாத் தனிமுதல் விமானமேல் வதியு
மரம்பை மாதர்வாண் முகத்தினைத் தேனனி தின்மைத்தா
னிரம்பு பச்சைவாண் புருடரா கத்தினு நிகரிற்
கரம்பு துக்குசெம் மணிவயி ரத்தினுங் கலந்தே. (௧௧)

மங்கு லின்குழன் மடவரன் மேனியை வடிவ
பங்கு றப்படைத் தானரங் கத்தையும் பச்சைக்
குங்கு மத்தையும் வெள்ளையம் பளையுமே கொடுசேர்
பொங்கு மேகம கமவெனப் பரிமளம் புணர்ப்ப. (௧௨)

பருவ மொன்றிய வஞ்சிய சோமனேர் படைத்தான்
மருள மைந்திடு காம்புவா சனைநனி மணக்கத்
திருவ மைந்ததாள் விரன்முழந் தாள்செலச் சிறப்பாய்ப்
பொருவி லாதுடைங் குங்குமத் தளித்தனன் புகழோன். (௧௩)

அணி சிறந்தபொற் சானுவு மகல்மார் பளவுந்
தணிவி காந்தகல் லாரியாற் படைத்தனன் றனியோன்
மணிசெ றிந்திடு மூன்முதல் வலம்புரி மட்டும்
பணிசெ றிந்திடு வெள்ளையம் பணைக்கொடு படைத்தான். (௧௪)

இசை முழங்குபூங் கந்தர முதற்சிர மீறாய்ந்
திசை மகிழ்ந்திடும் பாளிதந் தனைக்கொடு சேர்த்தான்
வசை யிகழ்ந்திடு சிந்தையாய் நேருடன் வணங்கு
நசை சிறந்திடு மூமிரு ணவர்க்கென நாதன். (௧௫)

இன்ன வாணமைத் தவிசொளி பரப்பிமீ யெறிக்கு
மன்னை நேரிடை யரம்பையர் புவியின்மேல் வீழி
யன்ன வாயினோர் தாமுமிழ்ந் தாண்முடி வளவு
மன்ன தெங்கணு மருதுநா ணப்பரி மளமே. (௧௬)

ஊறு பேறி வுடையமூ மின்களி லொருவர்க்
கீறு மாறிய தன்னளி யானளித் திடுவான்
கூறு மாசமு துண்பதிற் குடிப்பதிற் குறையா
நூறு பேர்குடித் துண்டிடு முணவெனு நாலே. (௧௭)

இடுக்க முற்றமூ மின்களி லொருவனுக் கியா
மிடுக்க ணூறுபேர்க் குள்ளவை யாதலின் வினைவால்
வடுக்கண் மாதர்நூற் றுவகையோர் நாளையின் மகிழ்கூர்ந்
தடுக்கு மஞ்சமேற் சுகமனு பவித்திட வறியோன். (௧௮)

கந்த மென்முலை மாதரி லொருவனைக் கலப்பா
ரிந்த மாநிலத் தெந்தனை வயதுமட் டிருந்தா
னந்த மட்டெடை வாரணப் பாகைதேர்ந் தறிந்தோர்
முந்த வோதினர் புகாகன் றிடமுது மொழியே. (௧௯)

சேடு பெற்றிடு மொளிமணி மாளிகை திகழும்
வீடு பெற்றவர் வாழுள வொன்றது விளம்பி
ஞூடு பெற்றிடும் வருடமோ ராயிர நடக்கும்
ஈடு பெற்றவத் தினத்தவர் செயலினை யிசைப்பாம். (௨0)

கேள்விதீர்ந்து நபிநாயக மன்ருடிக்

கதிசேர்க்கும்படல - முற்றிற்று.

ஆசப்படலம் - உக - க்குத் திருவிருத்தம். ௯௱௫௫.

## சொர்க்கத்திற் சுகித்திருக்கும் படலம்,

புருட மாதவ வரமொன் றதுவிடி பொழுது
வருட மூன்றுநா ளளவுமின் னமிர்தலுண் மாந்தி
யிருட ராச்சுவை தேன்மது நீர்குடித் திறைபோ
னருட வாமகிழ் கூர்ந்திடச் செருக்குவ ரன்றே. (க)

மத்தி யானியம் வருடமுந் நூற்றறு மட்டு
முத்தி யானம அழைவிழி யாடியு மோர்கை
சித்தி யானமர் வேட்டைக ளாடியுஞ் சிறந்த
பத்தி யானதன் கலையினீ ராடியும் பரிவார். (உ)

துன்று சாய்பொழு தான்றமுந் தூறுறுந் துணையு
மன்றல் வார்குழற் றெண்டைவாய் துடியிடை மடவார்
குன்று போலிள முலைகிளைத் துவப்புடன் கூடி
யொன்று மார்ப்பபே ரின்பமோங் கிடத்தனி யுறுவார். (௩)

தக்க தாயநா ளுண்டுமற் றமிக்கையிற் சாருஞ்
செக்கர் வானிறம் பொன்றுபுற் கெறுமொளி தேக்கப்
புக்க வேளையின் முத்திபெற் றவரெலாம் புகழான்
மிக்க தானவன் றனைத்தெரி சிக்கமே வுவரால். (௪)

கற்ப காலமு மின்னன விமானமாங் கதிர்சேர்
மற்ப காதமு மின்கவொண் கதிர்முடி வணைந்து

விற்ப கார்கவ நவமணி பூண்டுமின் மிலைந்து
பொற்ப காவசம் பையயிர்புணர்ந் தருத்தியிற் பொலிவார். (௫)

கலி நிலைத்துறை,

நரைதிரை யன்றியெந் நாளு மொன்றுபோற்
புரையறத் தேகமும் பொற்பு மோங்கிட
வுரைதரு மிடும்பைநெஞ் சுளைவு மோவிட
வரைவற விற்றசிர் வாழ்வு பொங்குவார். (௬)

இத்தகை யுரைத்தவை யாதும் பற்பல
வுத்தம ருரைமுனி நூலக்கொ ளாவினில்
வித்தக ருரையினில் விளம்ப மேயினென்
முத்தக மிருந்தவர் தீனர் முன்னமே. (௭)

தென்னுறு மாதவஞ் செய்யு மான்றவர்
பொன்னுல கதன்மிசை புகுந்து வாழுநாள்
சொன்னவவ் வாசமோ ரேழுந் தாவுறை
பன்னுளங் களிப்பொடு பயிறல் கூறுவாம். (௮)

வாய்த்தநற் சனிபெனும் வார மொன்றொளி
பூத்திலங் கியதுகில் பூண்டு மேயவர்
சாத்திய புதல்வர்தன் தாய்பி தாவிடத்
தேத்தரு மாளிகை யெழுந்து காண்பரால். (௯)

தந்தைதா யவரவர் தனையர் வைகுழை
இந்தைகூர் பரிவுடன் திங்கள் போக்கென
விந்தைசேர் மெய்யின வெயில் விரித்திடச்
சிந்தையி னிரவிநாட் டேடிச் செல்லுவார். (௧0)

திங்க ளென் மூதுணர் சீஷர் யாவருந்
தங்கடந் தேசிகர் தனைக்கி காண்குறைப
புங்கமா ளிகைத்தலை புகுவர் சேணுல
கெங்கணு மொள்ளொளி யெறிந்தி லங்கவே. (௧௧)

மருவுபே ரறிஞர்செல் வாயி னன்றையி
லருகுவந் துணர்ந்தமா ணாக்கர் மாட்டினிற்
பெருகிய மலர்க்கியாம் பெட்பி னேகுவ
ருருமணி மோவியி னொளிவு காலவே. (கஉ)

அவரிழை மாந்தர்க ளாரு மவ்வவர்
நவிகடம் மலர்ச்சா ணுடிக் கண்ணுறக்
குவிமணி மாளிகை குலவ வேகுவார்
புவிபுகழ்ந் திடவரும் புதன் றினத்திலே. (கங)

வளையறு புகழ்நபி மாரு மவ்வவ
ருளாவழி படுமவ ரும்மத் தோர்கள்பால்
விளைபக லாகிய வியாழத் தேகுவார்
தளையணி துகின்முடி சசியிற் காந்தவே. (கச)

வெள்ளிநா ளன்றுள விருப்ப ருமலே
வள்ளியோ ரணிவரு மதின மாநகர்த்
தெள்ளியோர் தமைத்தெரி சிக்கச் செல்லுவா
ருள்ளியோ ருளப்பெறு முவரி யொப்பவே. (கரு)

சங்கவா ருதித்திரள் சாருந் தன்மைபோற்
புங்கமா ளிகையகம் புகுந்து கண்டபின்
னெங்கணு யகரும்யா வருமந் நாளையி
லங்கணேர் சென்றிறை யவனைக் காணவே. (கசு)

புவிகண்டமின் னொளியெனப் பொங்கும் தேர்களிற்
சிவிகையிற் பாண்டியிற் றிரிபு ரக்கினி
னபிகண்மற் றவர்களு நாதன் றேழர்பின்
குவிதிர ளாகவே குலவிச் செல்வரால். (கஎ)

பொன்னுல கதிலொளி புனைந்த பூண்களுந்
துன்னுமென் றுகில்களுஞ் சோதி மோலியு
மன்னுமென் வெழில்களும் வயங்கத் தூதர்பின்
தென்னுறு மாகியைத் தெரிக்கச் செல்லுவார். (கஅ)

ஆன்றமக் காபுரத் தரசர் தம்முடன்
சான்றவ ரனைவருந் தகவில் செல்வழி
தோன்றுமா ளிகைகளுந் துணைற்பைம் பாசடை
யூன்றிய நருக்களு மொக்கத் தாழுமால். (க௯)

புரிந்தமுன் னவன்றனைக் காணப் போமவர்
பிரிந்திடா தெதிர்தரும் பீடு மாளிகை
பரிந்தலத் திடைபடி படித்தல் வேதியர்
விரிந்தபொற் கழலெழும் வியப்ப தொக்குமே. (௨0)

விண்டட னுளாத்தருள் வேந்து மேதக
மண்டபே ருவகையிற் செல்லு மாந்தருந்
தண்டிமுன் னடத்தலும் பின்பு தாழ்ந்தவை
பண்டுபோ னிறுவுமப் படிசி றப்பவே. (உக)

இன்னவா றனைவரு மியம்பி யெண்ணற
மன்னிய கணங்களாய் மல்கி வாமெனி
சொன்னவாய் தினெனும் சொர்க்க வாயிலி
லுன்னியே செல்வர்மிக் குவகை யோங்கவே. (உஉ)

அதினெனுஞ் சொர்க்கமொன் றதனை மற்றுள
பதிகள்சூழ்ந் திருக்குமுன் பகர்ந்த சொர்க்கமேல்
விதிவளா தனியவ னருவஃ மிக்குறாங்
கதிரொளி புலகெலாங் காந்தி செய்யவே. (உங)

தானவ பொருவிலாத் தனிய னுளவ
வானவ வென்றுமீ றழிவி லாதவ
வினையி லாயென விறையைப் போற்றியே
வானவர் மொழிவர்வின் னப்ப வாய்மையே. (உச)

ஆடல்கூர் நின்னடி யவர்க ளாகிய
வீடமா மாந்தரு மின்ன னர்களு
மாடமா சதினெறும் வன்மை வான்பதி
நீடணி வாயிலி னிற்கின் றார்களே. (உரு)

என்றுவின் னவர்பணிந் தியம்பத் தூயவ
னன்றெனை யொருவனென் றெண்ணி நாடொறுங்
குன்றிடா வழிபடல் கொண்டு நேர்வழி
நின்றுளமுண் மைகூர் நேச மாகவே. (உசு)

உலைப்புறு பவந்தொலைத் தாசிக் காந்தநேர்
புலப்படு மாறெனப் பொருந்தி நற்றவங்
கலப்பற நோற்றெனைக் காண்க வந்தவர்க்
கலைப்பறப் பிரியமுற் றனமென் றோதியே. (உஎ)

இங்கெனன் னடியவ ரிதயங் கூர்தரச்
சங்கைசெய் வீரென விபுதர் தம்முடன்
பங்கமற் றிருவுளம் பற்ற வவ்வண
மங்கவில் லாதுற வரிசை செய்குவார். (உஅ)

நதியெனு முறுசலா நபிக ளவ்வவர்
பதவியின் படிக்குவன் பதியிற் சேர்ந்திய
வதிகவுள் ளொளியரி யாச னத்தின்மேன்
மதியென விருப்பருண் மகிழ்ச்சி பொங்கவே. (உகூ)

வரிசைமிக் குளநபி மார்கள் வானுல
கிரசதத் தாலமைத் தொளி யிலங்கிய
குருசிக ளதின்மிசை கோத கன்றிடும்
பரிசினி லுறுமவர் பார்வி ளங்கவே. (கூ0)

சிறந்தநற் றவஞ்செய்சித் தீக்கு மார்களு
நிறைந்தழே மின்களு நேய மாநறை
குறைந்திலாப் பாளிதங் குங்கு மத்திட
றுறைந்திடு மெத்தைமீ தாவந்தி ருப்பரால். (கூக)

சொந்தமா யவர்க்களி தூளி மெத்தைகள்
வந்திடு முயற்சியைந் தூறு வச்சிரம்
விந்தையுள் ளவையதன் மிசை யிருக்கவே
சிந்தைசெய் தரத்தணிந் திடுந் திருந்தவே. (கூஉ)

இருந்தவப் பொழுதுயர்ந் திழிய வெண்ணினே
தருந்தனைப் படியுமவ் வமளி தன்மிசை
திருந்துழு மீனவர் சேர வுற்றபின்
னருந்திட வொடுக்களித் திடுவ னார்க்குமே. (௩௩)

கூண்டநற் றவருணக் கோதி லாதுய
ராண்டவ னளித்திடு மொடுக்கி னந்தமு
மண்டதோ வடிவின் வகையு மின்பமுங்
காண்டருங் கருணையுங் கருது வாமரோ. (௩௪)

கலி விருத்தம்.

பெருக்க மான பெரியவன் மாதவர்க்
குருக்க மாக வளிக்கு மொடுக்கது
சுருக்க மாறிய சொற்சதுர்க் கோணமா
யிருக்கு மென்றன ரின்கலை னோர்களே. (௩௫)

கொளை யமைந்தசொற் கூறிய வானவர்
களைபி ரதெடுக் கச்செறி சில்லிக
எளைய மிக்கெழு வான்படி வானதில்
வளைய மொன்றுளச் சேணென வாழ்த்தினார். (௩௬)

அட்ட மொன்றெழு வான்படு வானதி
லிட்ட சக்கரத் தொன்றென வேற்றினார்
திட்ட மாயவ் வொடுக்கெனச் சேணது
விட்ட றைந்திட மிக்கவ ரின்மையே (௩௭)

ஆதி யந்தமு மாண்ட பெரியவன்
வாதி யாதனைத் தோங்கிய மக்கடாம்
வீதி யுற்று மிசைகுவ ரெண்ணிலார்
பேதி யாது பெருப்ப முறைப்பரே. (௩௮)

தரு மொடுக்கினந் தந்த தலங்களின்
மருவு மவ்வவர் நாமம் வணங்குதாற்

பெருகு மாந்தரப் பேரெழுத் தின்றலைத்
தருதி ருப்ப ரணியணி யாகவே. (௩௯)

ஆண்ட சோதி யரிய பெரியவ
னாண்ட ரன்ன வொடுக்கினில் வைத்தனன்
காண்ட குங்கதிர் கான்றபீங் கான்கடான்
கூண்ட நானூற்றுத் தொண்ணூறு கோடியே. (௪0)

பற்ற றுது பகுத்த கலத்திடை
வற்ற றுறு வகைவகை தீவன
மிற்ற றுத விகற்ப மிசைத்திடிற்
சொற்ற நானூற்றுத் தொண்ணூறு கோடியே. (௪௧)

அன்பர் யாவரு மன்ன வொடுக்கதிற்
றுன்ப நீங்கிடச் சூழ்மகிழ் வாகவே
யின்ப மான வவரவர்க் கிச்சையே
தின்ப ருண்பர் செருக்கிச் செருக்கியே. (௪௨)

அடைத்தி டாத விருப்பையுள் ளானதைப்
படைத்த நாண்முதற் பற்பல விந்தையாய்ச்
சடைத்தி டாதலங் கார்ந்தகச் சேயவார்
மிடைத்த ராத விபுதர் கணங்களே. (௪௩)

நாறி றுலிறை யோன்றவ நோற்றவர்
வீறி றுவுணச் செய்யும் விருந்தைத்
தேறி றுலும் விதானிப்புத் தேளிர்கள்
கூறில் நானூற்றுத் தொண்ணூறு கோடியே. (௪௪)

ஐதிருந்த வடிபவர்க் காயிறை
செய் திருந்து திருந்து மொடுக்க
னுய்தி ருந்திய வுத்தம ருண்ணவே
யெய்தும் வந்தங் கிறங்கிய காலையில் (௪௫)

பொறியி னென்று புலன்க ளவித்தநன்
னெறியி னின்று நிலைதவ ருமலே

யறிவி னெஞ்சினி லாதியொன் றென்னுநேர்
பிறிவி னின்றருள் பெற்றிற நூல்களும். (௪௬)

மூன்கு விற்புகு முன்னவ னல்கிய
தென்கு வித்த செழும்பொருள் வேதமு
மின்கு வித்து வியந்த சுருபுமார்
நன்கு வித்தியல் நன்னபி மார்களே. (௪௭)

ஆதி நூலி னரும்பொருட் பாகையு
நீதி யொத்து நிகழ்த்தும் ஹதீதையு
மேதி னிக்குள் விளக்கி நடத்திட
வோதி முற்றுணர் நல்லுல மாக்களும். (௪௮)

புரந்த தற்பர னைப்புக ழாதுளங்
கரந்த வன்கொலைக் காபிர்க ணங்கிடப்
பரந்து நாயன் பலன்பெற வேட்டடல்
துரந்து சொற்றருள் ஷுஹதாக்களும். (௪௯)

வண்மை யானவ னுக்கு வணங்கியுள்
ளொண்மை யோரணு வேனு முறுதிற
வுண்மை கூறி யுவப்புட னுட்படுந்
திண்மை மேவிய சித்திக்கு மார்களும். (௫௦)

கருத்தென் னங்குசத் தைந்தையுங் காத்துநோற்
றருத் தரிக்கிலோ ருள்ளினிற் றேர்ந்துநற்
பொருத்த நாளவம் போக்கி விடாதுநாம்
விருத்த மாற்றிய மிக்கழ மின்களும். (௫௧)

மற்று முள்ள வரிசையுள் ளோர்களு
முற்று மன்ன வொழுக்கின் முயலுறப்
பற்று மிக்க பதவியின் பாலவாய்
சுற்று முன்னி யிருப்பர் துலங்கவே. (௫௨)

கூழு ணத்தொகை யற்ற குழாங்களாய்
வாழு மிக்கவர் வைகிய காலையி

னேழு பத்து வருட மிரும்பசி
சூழு முற்ற தகையுமெய் தோன்றுமால். (௫௩)

பற்று மன்ன பசித்தழல் தியவெண்
ணற்ற தீஞ்சுவை யாரு மயிர்தலுண்
முற்று மின்புற வுண்பர் முயற்சியே
யற்ற மின்றி யகங்களி கூரவே (௫௪)

கறிய னந்தங் கருணை யனந்தமாம்
வெறி யனந்த மிதவை யனந்தமாஞ்
செறி யனந்தம்வி சேட மதின்சுவை
நெறியி னுண்பர் நிறைதரு மேதையோர். (௫௫)

கம்பொ றிக்குங் களங்கமி லான்றரு
நம்பொ றிச்சுவை புக்கு மிரசிதந்
தம்பொ றிக்குண்மென் னுவுணந் தக்கதோ
வைம்பொ றிக்கு நுகர்ச்சிக ளாகுமால். (௫௬)

தொட்ட கையினுந் தூயமென் னுவினு
மிட்ட மெய்யினு மெங்கும் ருசிக்குமே
லட்ட பாவி னருஞ்சுவை தன்னினோர்
பட்ட வின்ப மனந்த பகுப்பினே. (௫௭)

வண்பர் யாவையு மாய்த்தழி யாதுற
மன்ப னுகிசித் தின்ப மறுத்திகந்
துன்ப ேனற்றனங் கூவி யெனச்சொல்பே
ரின்ப மீதென விச்சையி னுண்பரால். (௫௮)

வெண்ணெய் தன்னின் மெதுக்கொளத் தின்றுற
முண்ண யர்ந்திட வுண்டு பருகிநீ
டுண்ணு மென்றுத ரந்தழைத் தோங்கிட
வெண்ண கன்றிட வின்பமிக் கெய்துவார். (௫௯)

பேரின் மேதகு பேதவி தன்மைமட்
பாரி னுத்த பல்ன்கண் முழுவதுஞ்

சீரி னென்னுறு தீன்சுவை தன்னிலே
நேரி லொன்று நிகரிலென் றேத்தியே. (௬௰)

பேறு தந்த பெரியவ னைப்புகழ்ந்
தீறு நந்திய வின்ப வொடுக்கதி
லூறு கின்ற வமிர்த வுணவெல்லாந்
தேறு கின்றவ ருண்டு செழித்தபின். (௬௧)

விண்பு லத்தினு மேவிய பாதல
மண்பு லத்தினு மன்னு மறைமுத
லெண்பு லப்படு மென்னடி யாருணத்
தண்பு னற்கொடு மென்மொழி சாருமே. (௬௨)

அண்ண லாதி யணியின னேவிய
வண்ண நான்கு நதிகளின் வண்புன
லெண்ண ருமது வின்சுவை வள்ளங்க
ளுண்ண வுண்ணவென் றேத்தி யுணருமே. (௬௩)

எத்திக் கும்புரி யேக னருளினான்
முத்திக் கின்புற முந்திய மூமினோ
ரத்திக் கும்புன றேன்மதுத் தீன்சுவை
வத்திக் கும்படி யுண்டு மகிழ்வரால். (௬௪)

அளக் கருஞ்சுவை யாரமிர் தின்புன
லுளக் களிப்புறத் தேக்கியங் குற்றபோழ்
திளக்க மான கருணை யிறையவன்
றுளக்க முற்றவன் சொற்றொனி மேவுமால். (௬௫)

பலன்கள் வேண்டிய பண்போ டணைப்பணி
யுலங்கொ டோளின சோகை சிறப்பவே
நிலங்க ளெங்கு நிலைப்படுஞ் சோதியாற்
றுலங்கு மென்றகில் கூட்டுகு மென்னவே. (௬௬)

வல்ல சோதி மறைமுத லோனருள்
சொல்லவ் வண்ணந் துணர்ச்சினை பூந்தரு

நல்ல மூபி னவருழை நண்ணியே
செல்ல தென்னச் செறிந்துற நிற்குமால். (சுஎ)

அத்த ருக்களின் பத்திசம் யாவுமே
தந்த மற்கந் தருந்துகி லாகையா
லுத்த மர்க்கு ளொருவர்க் குடுத்துவார்.
சுத்த முற்றெழு நூறுபொற் றாசரோ. (சுஅ)

பெருக்கை யாவையும் பேணும் பிழையிலா
துருக்க மாயரு டசொன்றே டொன்றெவ்வா
வருக்க மாயொளிர் வாணர்க்குச் சோதிசெய்
திருக்கு மென்றன ரின்கலை ஞோர்களே, (சுகூ)

எற்ப டுந்துகி லோசெழு நூறிலேய்ந்
தற்ப டுங்கலை யார்குளிர் திங்கள்போல்
விற்ப டுந்துற வோர்செழு மெய்யுறப்
பொற்ப டுஞ்சுடர்ப் பூண்களுஞ் சாத்துவார். (எ0)

பதும வாவிய பண்பர்மெய் வேய்ந்தபூ
ணிதம தாக விளங்கெழு நூறெவ்வோர்
விதம தாக விளங்கி விடுஞ்சுடர்
சதம தாயுவ ணொங்குந் தயங்குமால். (எக)

மென்று கிற்களு மின்சுடர்ப் பூண்களுந்
துன்று மெய்யிடை சூட்டித் துலங்குவோர்
குன்று சேர்புயங் கூரக்கற் பூரங்க
ளின்று பூசுமென் றேறுவ னேகனே. (எஉ)

அருட்பு ரந்தரு மாதிதன் னேவலாற்
கருப்பு ரங்கள்கஸ் தூரியு மம்பரு
மருப்பு ரைந்த கலவைகள் வாரியே
பொருப்பி னங்கு புயங்களிற் பூசுவார். (எங)

கலவை செய்த களபக் குழம்புகள்
குலவு பூண்செய் குவவுப் புயந் திமிர்த்

துலவு சிதள வந்தசைத் தூதரா
மலைமை யோர்பரி பூரண மாவரே. (எச)

அந்த வேளை யவர்பெறு மோகையு
முந்து வாழ்வு முயற்சியு மென்கொலோ
வுந்து நேர்ச்சி முதுக்குறைந் தோதுயிற்
றந்த சோர்புஞ் சலிப்புமில் லார்களே. (எரு)

கலிச்சந்த விருத்தம்.

இவ்வா றுயர்ந்த பதியோர் துலங்கு
மிறகுலொ டாதி முதலைத்
தவ்வாறு கண்ணு றும்போது வென்றி
தருவார மேழி லொருநாட்
செவ்வான வெள்ளி யதனிற் பொலிந்து
திகழுஞ் சிறப் பனைகடா
னவ்வாறு முற்று மொளியா னடக்கு
மறையூழி காலமு மரோ. (எசு)

அணிகொண் டர்ந்து திரமேவு திங்க
ளழகெங்கு மின்கள் செயவே
கிணிகின்ற வன்னச் சிறப்பொன் றுளைத்தார்
சிங்கா சனத்தின் மிசையுந்
தணிவன்றி விஞ்சி ராஜாங்க மென்ற
தனிமேடை மீது மறையா
மணிகொண்ட சொர்க்க நகரோர் திருந்து
மகிபோ லிருந்து மகியால். (எஎ)

தன்னேரி லாகி திருவுள்ள முங்கை
தவறுதவான் பதியின்மேன்
மின்னேயு மொண்மை மணிமண்ட பங்கள்
வியன்மாட கூட விதமும்
பொன்னே சிறந்த வளமுந் திகழ்ந்த
பொலிவுஞ் சிறந்த திருவு
மென்னேர முந்தன் னுளமே மகிழ்ச்சி
யீறுதுகண் டுறுவரால். (எஅ)

விண்ணம்ப ரங்கள் பலவுங் கமழ்ந்த
        வெறிகொண்டு கொங்கு சிதறித்
தண்ணம் பொருந்தி நறவங்கள் சிந்து
        தருகொந் தலர்க் கனகமேல்
வண்ணம் பொருந்தவணி யின்னர் தருந்தகைய
        மதுரப் பயங்கள் பருகிக்
கண்ணங் குயர்ந்த பொதுகா வனங்கள்
        கண்கண்டு சிந்தை கனிவார். (௭௧)

போதே சொரிந்த சுண்ணங்கள் மொண்டு
        புதுநான மம்பர் பனித
மீதே பொருந்து நறைகொண்டு கந்த
        வியன்மாடமா ளிகைபெலாந்
தாதே வளைந்த வாதா யனங்க
        டவழ்கின்ற கேகயமூர்ச்
சீதேவி யென்ற சிறுதென்றல் வந்து
        ஜெயமாக வீச மகிழ்வார். (௭௨)

இறையாதி யங்க ளுளமே விரும்பி
        யெமையாவு மொன்று கசிறு
வறையான தங்கை யசமான தன்றி
        யமரோர் தொழும்பு செயவாழ்
சிறையா யசம்பை யர்கடாழ நின்று
        செயுமேவ லெங்கோ லெனவே
குறையா நிறைந்த பெரும்வாழ்வு கண்டு
        குளிர்வார்கள் சிந்தை யுறவே. (௭௩)

ஆணன்றி பேணை யலிதன்றி யெந்த
        மலியென்றி யாவு மறியாத்
தூணன்றி யுற்ற நெறியுள்ள நாய
        துவளமே விரும்பி யுலகே
வீணன்றி நிற்ற வடியார் முயன்ற
        வியனன் கதற்கு முறையாய்ச்

சேணன்றி யஞ்ச லாம்வந்த வாறு
செவியுற் றகங்கள் குளிர்வார் (௮௨)

எவரும் பொருந்த வினையேக னென்ன
வினைமா ரகத்தின் மரபே
தவநன் கியற்று மவரென்று நீடு
தலைமா னிலங்கள் பலவுங்
கவனங்க ளின்றி யொருகேடி யிற்கொள்
கதிர்மோலிமன் னவர்களி
னவனென்ற வோகை யறியார்கண்முற்று
மகவொந்து நின்று மலைவார். (௮௩)

உயரிற் பொருந்து மொருகத்த னென்று
றுணர்விற் றெளிந்த நலவா
ரயிலிற் சினந்து கடுகைக் கடிந்து
மனியிற் பொருந்தும் விழியார்
தொயிலிற் றிகழ்ந்து களபக் குழம்பு
துதைபொற் குடங்க டழுவி
வெயிலிற் றுலங்கு மணிமா ளிகைக்குள்
விளையாடி யின்ப முறுவார். (௮௪)

நெஞ்சந் துயின்ற துயிருங் கலங்கு
நினைவுற் றறக்க முடனே
மஞ்சும் பிறக்கு மயமுஞ் சிறக்கும
வளமுங் கதிக்கு மதலாற்
றஞ்சந் துகட்கள் களியுஞ் சுகங்கண்
டொலையாத வின்பம் விளையும்
விஞ்சுங் களிப்பு மருமின் கடிக்கண்
மிகவுங் குடித்து மகிழ்வார். (௮௫)

பதுமைமந்த ரும்பர் பலவுங் கனிந்த
பண்ணுன் மயக்கு மிசையாற்
சதமென்ற வேதம் சபுஷறத் தெரிந்த
தாவுந மபி சுந்தி டெரும்

விதமந்த்ர மத்தி மந்தார மென்னும்
வியன்ராக கீத முறையே
யிதமுந்த வோது மமுதங்க ளெண்டு
மெழுமா மதங்கண் மலிவார். (அ௬)

சந்தக்கலி விருத்தம்.

பஞ்செனச் செழும்பத மடந்தையர்க ளன்பொடு
பரிந்து மடிமீ
தஞ்சுக மெனும்படி யிருந்துமொழி கொண்டுவிளை
யாடி யிசைமேற்
கிஞ்சுக மலர்ந்தில வலம்புரி யசைந்தில
கிளர்ந்த தெனவே
வெஞ்சலின் விளக்கொ லெனும்படியி சைத்திடு
மிராக மதினும். (அ௭)

பைந்துணர் வியன்சினை விருங்கமலை யின்புனல்
படுந் தடிமதி
னந்துபயி றண்டளம் வண்டவிடு தெண்டிரை
நதிக் கரைகளின்
வந்துலவு முன்றிலின் வளங்கெழுமு சந்திபின்மின்
மாளிகை களின்
செந்தலகு மென்சிறைய பக்ஷிக ளிருந்திசைகள்
செப்பு வதினும். (அஅ)

திங்களனு தல்வேர்வொழுகு மஞ்சளக மென்மலர்கள்
சிந்த மணிவார்
கொங்கைகள் குலுங்கிட மருங்குற வளக்கணை
குழைக் கமர்சேய்ப்
பங்கய மலர்ச்சரண நூபுர மொலிப்ப விசை
பண்ணி மயில்போ
லங்கலுள லங்கலணி சிறடியர் கொஞ்சிவிளை
யாடு வதினும். (அ௯)

திருக்கிளர் முகத்தட முருக்கிதழ் முறுக்கவிழ்
செழுங் குவளைநேர்

கருக்கவிழு சித்ரவிழி யிற்கொலை பழுத்தெழு
    கடுப் பழகியே
தருக்கினொரு ளாட்பிணி வலைக்கிணை மறத்தொழி
    றரித் தனையகன்
ணரக்கெறி முருக்கித முரம்பைய ருலாவினினை
    யாடு வதினும். (௯0)

மெய்ப்புறு களிப்பொடு வியந்துபுகழ் காளையர்
    மிகப் புனைமையா
யுய்ப்பொடு மதர்ப்புவினை வித்திடு மதுக்களையு
    முண்டு தடிமேன்
மைப்படு மயிர்ப்புளக மேறவினை யத்தவன்
    வழுத் தியசலா
மெய்ப்புற வரச்செவி குளிர்ந்துதவ விறுட
    னிருக்கு மளவே. (௯௧)

பல்லிய விசாகமொடு கீதமுத லங்கருவி
    பன்னு முளவே
யொல்லிய வணைத்துமொ ரணுக்குநிக ரன்றென
    வுறுஞ் செவிகளிற்
புல்லியது சிந்தையி லுவந்துகளி யின்பநிறை
    பொங்கு மிசையே
சொல்லியொரு பக்கியது கூவுமொலி கேட்பருயர்
    சொர்க்க நகரோர். (௯௨)

அப்பறவை யுற்றுறை யனித்திய மனத்தையு
    மனித்தரு டேயோ
னற்புறு கருத்தனைய லற்றுயர் தவத்துறை
    தகைப் பெருமையோ
னெப்பரு முருக்கியின் மறப்புண விலக்கனமு
    ஷடக்கு மதின்கீழ்
வைப்புறு மரத்தமணி யிற்சுடர் பரப்பியொரு
    மாளி கையினே. (௯௩)

பக்கியத னுக்கிறகி லக்கமொரு நாலொளி
    பரப்பு சகிநேர்
திக்கின்மிளிர் நித்தில மதிற்செறியு மற்றவை
    சிறப்ப பிசுமில்
மிக்கின்வளை வுற்றிரு ளறக்கதிர் துலக்கிய
    விகற் புடையதோர்
ஹக்கின்முத லைத்துதிசெய் தச்சிற கடிக்கொள்பொழு
    தார் சிறையினே. (௬௭)

மத்தாள மெத்தனைய திற்றுள மெத்தனை
    வகைத் தாளமுங்
கைத்தாள மெத்தனை யதிற்றுள மெத்தனை
    விகற் பானது
மத்தாள மிக்கெழு முறைக்கே யிறைத்திடு
    மதிற் கீதமு
மெய்த்தாள கித்தனை யுருக்கா யுதித்திடு
    விதப் பாடலே. (௬௮)

ஆவியத னிற்பொலியி ராகவிசை யைத்தருசு
    கங்க ளதனு
லாவியழி வற்றுநிறை தேகமு நிலைத்தறி
    வகங்கள் குளிர
வோவிய மதைப்பழிக லாபமயி லிற்குலவு
    மொண் டொடியனுர்
மேவிய களிப்பினளி யாடவர் செருக்கியல்
    விளம்ப வரிதே. (௬௯)

பொங்கர்செறி சேயுயர் பொதும்பர்மணி மாடமிசை
    பூண் முகில்கள்போ
லெங்கணு முலாவிமக ரந்தமது தூவினகை
    யேக முளதாய்த்
தங்கண்மன பூவக மகிழ்ந்துபரி பூரண
    சமேள முடனே

துங்கமுறு மாடல்கொடு கொஞ்சுமொழி யார்நடன
 தோகை மயில்போல், (௯௭)

உரைதிரு மென்புள்ளது தருராக வின்பமது
 புகுமோசை யாற்
றிரையே விரிந்துகுமி ழிகண்மே லலர்ந்துபுடை
 செழி பாரெலாம்
வரைபோல வெண்டாள மணிவிசு சிந்துபல
 மகிழ்கூரவே
இரையோசை கொண்டு ககன்மீற பொங்கியெழு
 மினி தாகவே. (௯௮)

மாணுறு பசும்பொன்மணி மாடமணி வெண்டாள
 மாளிகைகளின்
சேணுறுங்கிரணம் விசுமணி யின்றிரள்கள்
 சேர் கடைகளின்
னேணுறு தடங்கதலி நீள்வளைக ளன்றியதி
 லேபவி சைகூர்
பாணுரிய பண்டரு விராகம தெழுந்தகைய
 பான்மை யுறவே (௯௯)

பொன்னுர் பதிக்குளுயர் நன்மா தருக்குண்மலி
 பொங்க ரிடைசேர்
தென்னுர் நகட்டிகை ளன்னீ ளிலத்துலவு
 தென்ற லதனு
லந்நா வசைத்திடுவ தன்று ஹதிக்குமிசை
 நன் ஞரியவாஞ்
சொன்று விசைக்குமிசை யென்று செவிக்கதி
 சுகம் பெருகவே. (௧00)

மாட மிசையினு நிலவு பீட மிசை யினுங்கரின்
 மணி மாளிகை
கூட மிசையினு மொளியின் மேடை மிசையினுமலகில்
 குளிர் சோதிசேர்

தேடரிய தருமரு விதிடை யிறுமொழுகு
திரை வீசுநீ
நாடரிய சதுமிதி யாலுகளு மொளிவுகளு
மலை மோதுமே. (௧௱௧)

சந்தக்கலி விருத்தம்.

பொலன்மேவிய செம்பொற்றிறை பொலியும் பறவையின
நலமேவிய வும்பர்க்கு நரர்க்கும் பல வுக்குந்
தலமேவிய வாசாநபி தமையுங்கிளை ஞரையும்
பலபாலவி னாகங்கள் படித்துத்துதி செயுமே. (௧௱௨)

இம்பர்க்கொரு காதங்கம ழிருக்கிரு மேனி
யம்பொற்பொலி கஸ்தூரி யமர்ந்தேவரு திறலோ
ரும்பர்க்கர சாநக்கபி யுயர்நாம மகிழ்ந்தே
நம்பற்பல நாகங்க ளவிர்திப்புகழ் செயுமே, (௧௱௩)

அறுவஷிற்கபு சோடேறிய வம்போருக நாணர்
குறைவஷிற்குல பதியாகிய தொற்றப்பெரு மானை
நிறைசற்குண முடையோர்தமை நித்தந்துதி செய்தே
பறவைத்திரள் நாகங்கள் படிக்குந்தெரி யுறவே. (௧௱௪)

பாதேசன சிங்காசன பதியேமுக மதியே
வாசேசனை நற்றினில் வசச்செய்தருண் மணியே
யுளாசேட னிரும்பைத்தலை யுடையத்துணி திணிதோ
ளாசேயென நாகங்க ளிசைக்கும்பற வைகளே. (௧௱௫)

முற்றக்கைதியன் மகவாகிய முதன்மைப்பொருட் டாரக்
குற்றம்பெரு கென்னப்புகழ் குறையானருள் செய்யும்
பற்றன்பிற ஆல்கட்கர சாய்வந்தருள் பலமே
சுற்றம்புகழ் நபியென்றிசை சொல்லும்பற வைகளே, (௧௱௬)

சோகந்தரு மொருவன்பெற் சோரித்தரை யதனை
மொகந்தரு பெண்ணுக முன்றேபரு ளாகே

யாகந்தரு ளுவகேகய மணவாளனரு திருவே
யேகன்புகழ் கவியேயென மென்புட்க ளிசைக்கும் (க0எ)

பொருதிக்கய மெனவெங்கட புகர்மாவுடை யார
வருதிக்கினி லுருமிற்கொடு வரியிற்றிற முடனே
கருதிக்கொடு குயிர்மாந்தர் கழிந்தோட வடர்ந்த
பருதிக்கிணை யிறலூல்புகழ் பாடும்பற வைகளே. (க0அ)

காதங்கமழ் நீழற்றரு காணுவடி யுடையார்
நீதங்கபழ் நிறைகோலென நிலைநின்றிடு நெறியோர்
வேதங்கமழ் மெய்ப்பாகை விரிக்குங்கரி லறகும்
போதங்கமழ் வாயார்புகழ் போகிற்க ளிசைக்கும். (க0கூ)

வழுநாவின ரென்போனெழு மைந்தற்பெறு நெடுநா
ளெழுநாளினின் மரியச்சிறு பொழுதாக விறந்தி
முழுநாளிடை யெழுநாள் புகழ் முதலைத்தொரி சித்தோ
ருருநாடிடை கயிறார்புக ழொண்புட்க ளிசைக்கும். (கக0)

கிசியிற்சசி யிற்பங்கு நிலத்திற்குற நல்கும்
வசியிற்றிகழ் திருமேனியர் வழுவாமர புள்ளார்
பசியிற்சிலை யுதரத்திடை பற்றத்தடி பவர்சீர்
சசியிற்சிற காப்புட்கடு திக்கும்பண் ணிசைத்தே. (ககக)

வருந்தாது சுரத்திற்குளிர் வனசம்பொலி தடமு
மிருந்தாதுரு மலர்சிந்தி யெழுங்காவு மளித்தே
கருந்தாது விணைக்காலை களிப்பப்புகு பவரைப்
பொருந்தாது நிரப்பக்கிகள் புகழுங்கவி சொலியே. (கக௨)

எதிரொட்டையி லொட்டார்முடி யிடறுங்கதை யான்செய்
முதிரொட்டையி னழுதற்றது மொய்ம்பேற வளித்தோர்
கதிரொட்டையில் வருவைகறை கண்ணின்றருள் பவர்சீர்
வெதிரொட்டையி னிசையாவன வியன்புட்கண் மிழற்றும். ககங.

வஞ்சத்தினை யிடுமுள்ள மறந்தார்கொலை வினைவா
னஞ்சத்தினை யிட்டவன்ன நலங்காண்மத மிறந்த

புஞ்சத்தினை நிகருண்டருள் போதத்தினர் புகழை
நெஞ்சத்தினை மகிழ்விக்க நிறப்பட்சிகள் பாடும். (ககச)

இத்தன்மை யிராகங்க ளிசைத்துப்புற வைகணை
ரத்தன்னபி யிறசூலையு மவருற்றவர் களையுஞ்
சித்தம்மகி ழுறவேதுதி செய்யச்செவி குளிரக்
கத்தன்றரு பதியோர்கள் களிப்பாகிய காலை, (ககரு)

அலைவன்றி யனைத்தும்புரி யருண்மேவிய தனையோ
னலைவன்றிய பெரியோனுடை யுயர்வானறு ஷதின்கீழ்
நிலைநின்றொரு வானோரொரு நிமலன்பணி விடையான்
மலைவன்றிய நற்சோபனம் வணமாக வுரைப்பார் (ககசு)

ஐயப்பட லன்றிப்பல வாவுந்தெரி சித்தே
மையப்பட விரணங்க ளணைப்போத வளிப்போன்
மெய்யப்படு கருணாலய பேதற்றவன் வியனிற்
செய்யப்படு வலிமைப்பதி சேரும்பய மிலரோ. (ககஎ)

விரியுஞ்சது மறையிற்பயின் மெய்ப்பாகையின் மற்றுந்
தெரியும்பல கலையிற்கலை தெளிவிற்றெளி வரிதாம்
புரியுங்கிரு பையுளா னிறை போதப்பொரு ளருள்சே
ரரியுந்தரி பாடான சுவர்க்கப்பதி யினரே. (ககஅ)

என்றென்று சொலுந்தன்மை யுரித்தாகிய விறையோன்
பொன்றென்று சொலும்பான்மை புகாநின்றிடு புகழோ
னன்றென்று முயர்ந்தோர்தவ நெறிஞ்செய்ப வர்க்கோ
வென்றென்று வளப்பத்தொடி ருக்கும்பதி யினரோ. (கக௯)

உளமாசு படாதைம்புல மொருமைப்பட வருளா
லளமாற வறஞ்செய்தருள் காணுந்தெளி வுடையோர்
தளமாக விருக்கும்படி தனிபோனரு ளியசீர்
வளமான சலாமத்தென மன்னும்பதி யினரே. (கஉ0)

இதினஞ்சித னின்பென்ன விறைஞ்சித்தலை முயலுங்
கதிநன்றி பெறுந்தன்னனி கண்டோருற வென்றே
மதிணங்க விருக்குந்திரு வல்லோன்னரு ளியதோர்
அதியென்ற சுவர்க்கத்திடை யாரும்புக ழினரே. (கஉக)

வேணும்பல பலவின்பமும் விளையும்பல பொருளும்
பூணும்பல வளமும்பல பொற்பும்பொலி வுறவே
காணும்படி யொன்ருகிய கர்த்தன்பரி வுறவே
பேணும்பிரு தவுசென்ற பெரும்பொற்பதி யினரே. (கஉஉ)

உறுமைக்கிட மீயாம லுளந்தூவுற நோக்கு
மறுமைக்கமல் மேவும்புகழ் வல்லோருற வெனவே
பொறுமைப்பொரு வில்லானருள் பொங்கும்படி தங்கு
நறுமைக்குயர் மௌவாவென நண்ணும்பதி யினரே. (கஉங)

பலனுமுற வெவ்வீருடை பாரிற்பிழை யறநேர்
புல்லுடி யறஞ்செய்தவர் கோலம்பெரி துடையோர்
குலகாரு மிருப்பப்புகழ் குன்றானரு ளியநன்
னலமாருமங் கிடுமென்று நவிற்றும்பதி யினரே. (கஉச)

தாயன்றி வளர்க்குந்தய தயவுள்ள பிரானென்
னேயஞ்செய்மு றுசலாகிய நிலைதங்கும வர்களே
மாயங்கெட விடர்செய்தெழு மதிநுகர் குடைமோ
சோயன்புறு மணிமாளிகை யிடைவம்மினி துறவே. (கஉரு)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

வனிதைபர்க் காசாய் வந்த மதியமை யாசி யாவை
புனிதமத் திறகு அல்லா வுமைமுற வதனை செய்யா
புனிதனிற் புதாக்கு மாடம் புகுமினென் றறவின் கீழ்நின்
றினிதுற வருதி நின்னை நியம்புதல் கேட்ட போதே. (கஉசு)

பெயரிற லுங்க டாமும் பேரக வமிமார் தாமுந்
தயவுல மாக்க டாமுஞ் சாவிஹா னவர்க டாமுந்
தயாக லவுலி யாக்க ளெந்தமு மிங்க டாமு
மயற வுண்மை கூறும் ஸாய்கிதற தாக்க டாமும். (கஉஎ)

முறாசலீ னவர்கட் கெல்லா முதன்மையர் முகம்மதுக்கு
முறுநபி மார்க்கும் வானம் பூவொருங் கமைத்திட் டோனுக்
கறுதியா யீமான் கொண்டோ ரனைவருங் கூண்டு நிற்பார்
மறுவக விறகு நல்லா மாளிகை வாயில் வந்தே. (௧௨௮)

உலகமே லொருநாள் வாணு ளுள்ளபோ திண்மையோன் றுக்க
மிலகுலா இலாக இல்லல்லா வென்னுமற் றேறுதலோடு
சொலகிலா முகம்ம துற்ற றசூலுல்லா வென்று கூறு
மலகிலா மேலேச ரெல்லா மஞ்ஞன்மா ளிகையிற் சேர்வார். ()

பரஞ்சுரப் பெருமா னன்பாம் பாங்கருக் கென்ன் வும்பர்
கரஞ்சுட ரெறிக்குஞ் செய்ய கணங்கொண்மா மணியி னுலேல்
திரஞ்செய்மா ளிகையி னமைக்குஞ் செழுங்கதிர்க் கிரணமிப்பா
நரஞ்செய்மக் காவின்வாழ்வோ ரொண்புக ழென்ன லாமால். ()

விழிவிலான் றேழு சாங்கே மெய்ப்புற வியந் திருப்பத்
தெளிவினல் வியனுற் செய்த சேட்டுமா ளிகையைக் கூறி
விழிவிலா வியாவுஞ் செய்ய் வேகனி யாண்டு முள்ள
வொளிவெலாந் திரட்டி வைக்கு மோரறை யென்னலாமால். ()

மருவுலா மறுவித் திண்டோண் மளவிளங் காளை யன்ன
பொருவிலா வழகுகொண்ட போதமா ளிகையைக் கூறி
னுருவிலா னுவமை யில்லா னுவனுல கவர்க்குச் செய்யுந்
திருவெலா மொருங்கு வைக்குஞ் சேட்டறை யென்ன லாமால். ()

கொன்கெலா மிருந்து தோற்றக் குரிசின்மா மதினு வாழ்வோர்
பொன்குலா வியசெஞ் சோதி பொழியுமா ளிகையைக் கூறின்
முன்குலாந் தெருண்ட னான்ற முயன்றறஞ் செய்யுஞ் சான்றோர்
நன்கெலாந் திரண்டு நிற்கு நகையென வியம்ப லாமால். (௧௩௩)

அந்தமா ளிகைக்குச் செல்லு மகழ்மணிக் கடை யுயர்ச்சி
சொந்தமா யிசமாண் டுள்ள தொலையுநா மகலந் தன்னை
முந்தவே மொழியி னெழு வாயிர வருடத் தூர
முந்தவுள் ளவையா மென்று ரோங்குநா லறிஞர் தாமே. (௧௩௪)

பிளிர்சுட ரெறிக்கு மன்ன மீயுயர் கடை கூட
மெலிதின்மாற் றனைக்குங் காஞ் சிரணிய மதனு மொன்றுங்
குளிர்நிலாச் செய்யும் வாய்மை குலவிர சதத்தா லொன்று
மொளிசெயு மிரண்டா லென்ன வோதினர் நீதி நூலோர். (௧௩௫)

உறைத்தமா ளிகை யகத்தி லொருபொரு ளுகையங் கொண்டு
திரைத்திர ளனந்த மொன்றாய்த் திரண்டெழு மாறுபோல
நிரைத்தன நபிமார்செய்ய நெறியிற் சூல்மார் மற்றும்
புரைத்தவ றகன்றோ ரெல்லாம் பொலிவுறப் புகுவ ரன்றே. ()

சோதியங் கணங்க ளொன்றாய்ச் சூழ்ந்துயர்ந் திருந்தா லென்னு
நீதிசான் மாளி கைக்கு நிலவுசெம் மணியி னாலே
போதிய கணங்க ளெல்லாம் பொற்புற விருக்குஞ் சேணர்
வேதிகை யொன்றுண் டாகு மேதினி வியந்த தன்றே. (௧௩௭)

வெட்டையுஞ் சேணுங் கொண்ட நிகரிற்செம் மணியால் வாய்ந்த
திட்டையின் வலது பாலிற் றிங்களெண் ணிலவுற் றங்கே
வெட்டைசேர்த் தவிர்சுடர் சோதி வெண்டர ளத்தி னாலே
பெட்டையொன் றகற்று நூறு யிரங்கதி னாக விருக்கும். (௧௩௮)

தண்டரு மருணச் சோதி தருமணித் திண்ணை மீதிற்
கண்டரு மிடது பாலுங் கவினுறச் செறிந்தி ருக்கும்
வெண்டர ளத்தி னாலே விதுக்கள்கூண் டிருந்த வண்ண
மெண்டரு மெழுநூ றாயி ரங்கதி னைகள் பதித்தே, (௧௩௯)

விரிசுடர் பரப்பி யொண்மை விளங்கிடத் தொகுத்தி ருக்குங்
குரிசுக ளதன்மீ தெல்லாங் கோதின்மெல் லணைகள் சேர்த்திப்
பரிசுட னிமைக்கு மொன்றிற் பரிவுபெற் றொருங்கு மொவ்வோர்
வரிசைசேர் முகற்ற பான மலக்குக ளிருப்ப ரன்றே. (௧௪0)

னைத்தபொற் கதிரை யெல்லாம் வான்கதி ரிருந்த வேபோற்
சித்தமென் மகிழ்ச்சி கூரச் சிறப்புற வாருகின்ற
வித்தக முகற்ற பான விபுகள்சென் னிகன்மீ தெல்லா
மொய்த்திடு மொளியி னாலே முடிகள்வேய்ந் திருக்கு மன்றே. ()

முந்தரு நபிக டாமு முறுசலி னவர்க டாமு
மந்தவா னவர்க ளும்மத் தானயா வர்களு நிற்பச்
சிந்துபோந் தென்னச் செவ்வி திகழுமா ளிகையிற் புக்க
வந்தவே லெயிலங் காரும் வானவ ரெழுந்தி ருப்பார். (௧௪௨)

அண்டர்யா வர்களு மங்ங னடைந்தமா னவனைக் கண்ணுற்
கண்டபோ தெழுந்தி ருந்து கதுமெனத் தாழ்ச்சி செய்து
விண்டதோட் சலாமுஞ் சொல்லி வியப்பினு சரிக்கச் சான்றோர்
திண்டரு திண்ணை மீதிற் றெளிவுற விருப்பா ரன்றே. (௧௪௩)

இந்திருக் கின்ற தாய்த்தோ ரிடதுபால் வலது பாலுஞ்
சுந்தரஞ் சிறக்குந் தாரா கணங்களுஞ் சூழ்ந்த வேபோற்
செந்திருக் கின்ற செவ்வாய்த் தீங்கனிச் சொற்சி றார்க
ளந்தரச் சப்பு சப்பா யணியணி யாக நிற்பார். (௧௪௪)

சேண்பட வுரைக்கு மின்ன திண்ணையின் முன்ன தாகக்
காண்படு மழகு கொண்டு கக்முக டோங்குஞ் செய்ய
வாண்படு குப்பா வொன்று வம்பில வாளத் தன்னு
லேண்பட வமைத்தி ருக்கு மெங்கணுஞ் சிறப்ப மாதோ. (௧௪௫)

சுடர்செய்யுங் குப்பா வுள்ளோ தோன்றுவெள் ளானை யொன்றங்
கடரவே சேர்த்து நிற்கு மதன்பெயர் மகுமூ தாகு
மிடர்தவி ரீறசூல் பொன்னூ ரெங்கணு முலாப்போ தற்குப்
படர்புக ழுடைய நாயன் படைத்ததப் பதியின் மாதோ. (௧௪௬)

சொர்க்கத்திற் சுகித்திருக்கும் படல - முற்றிற்று.

ஆகப்படலம் - ௨௨ - க்குத் திருவிருத்தம். ௫௱௧.

## மகுமூதென்னும் யானை வண்ணிப்புப் படலம்.

அறுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

ஆதி நடுவீ றருவுருவ
    மலகில் வன்ன மின்னதென
நீதி மறைதே ருணர்ந்தோர்க்கு
    நிகழ்த்தற் கரிய வளவில்லாச்
சோதி கவினு முயர்நிலையிற்
    றுலங்கு மிறசூ லுலாப்போதுங்
காதுஞ் சிறுகட் பெருங்கோட்டுக்
    களியா னையின்சீர் சிறிதுரைப்பாம். (க)

புவிகண் முழுது மைந்தவெனப்
    போந்தோ ரிறந்து பிறந்தாதி
நபிகள் பெருமான் வழிசாரு
    நனிசேர் கணங்க ளானோர்கள்
சவிகண் மலியு மகுமூதாந்
    தானைத் தவளா சலக்கோட்டின்
குவிக டிரளா யுறுவரெனிற்
    கும்பிப் பெருமை யெளிதன்றே. (உ)

வானைப் பொருந்தல் தவமியற்றி
    மறையோ னமைத்தாங் கெனச்செறிந்து
மீனை யிலகு மிகப் புகராய்
    விளங்கிர் சுடரும் விளிகளா
மோனை தரித்த மும்மதத்தான்
    முரண்கொள் களிசேர் தறுகண்மால்
யானை மகுமூ தழகொழுகு
    மதன்மா லிகையி னமர்ந்தனவாம். (ங)

பங்கி யமரும் புகர்ச்சிறுகட்
    பணைக்கோட் டெற்றுண் முரட்களிற்றைக்
கந்திப் பிணித்த வல்லிதனைக்
    கடிதி னெகிழ்த்துக் ககனபதி

சந்தி வெளியி னுய்த்தனிக்கோ
டடத்திற் புணரேக் கிடவருத்திப்
புந்தி யுவந்து பயிற்றுவான்
பொருந்தா நிற்பார் புலவோரே. (௪)

படங்கொண் டுறுநெட் டெற்பகுவாய்ப்
பணிமேற் பரியைத் தாகட்படுத்த
விடங்கொண் டுறுமின் னீர்த்திரைக
ளெழுந்துண் ணயிராக் கிடவெணிலுங்
கிடங்கொண் டெனமும் மதக்களிப்பாற்
சிறுகண் செவந்து குலவணைபோற்
கடங்கொண் டியர்ருங் குமத்திடர்க
டணைப்புட் கரத்தாற் நகர்க்குமால். (௫)

கட்டா லுயர்குங் குமகரந்த
மெழுபா னிறமம் பரின்குவைக்குட்
கோட்டா லுழக்கிப் புழுக்கையாற்
கோலிப் புடரி லுறவீச
மோட்டா னினியின் முகில்படர்ந்து
முருகார் மாப மொடுபிறவும்
விட்டா மழைபோன் றம்பரிடம்
விரைகள் கமழ வீழுமால். (௬)

காணாப் பிழியக் கடல்னலாய்க்
கடிய வடவா முகமவிக்கப்
பாராக் கணத்திற் றுகளாக்கப்
பகைத்த குபிராங் கடல்சவற்ற
வேணாப் பிடுங்கி யேருவைபு
பிடுக்கி னைசக்க விறல் பொருந்தும
வாணாப் புணிகொங் கையர் பதியார்
முகம்ம திறகுல் வயமாவே. (௭)

மதத்துச் சினத்துக் கதிக்குமிறு
மார்த தளவுங் கானீட்டிக்

கதத்தின் வெருளுநங் கனற்சிறுகட்
காட நிபுணக் களியானை
யிதத்த நபிகட் காசாய
விறைதா திறகுல் நபிவனசப்
பதத்துக் கொடுங்கி யடங்கியிசைப்
பரிக்குந் தருக்காய் நின்றனவே. (அ)

அன்ன களிப்பான் மகமேரு
மணிசயும் படிநின் றனவோங்குங்
கன்ன மதவா ரணம்போலக்
கதித்துப் புளகித் திடைநடக்கும்
பொன்னங் குடம்போற் றிகழ்முலைபோற்
பூவை யரம்பை மடமாத
ரின்ன கரிமே னபிபவனி
யெழுவ தெனச்சூழ்ந் தகமகிழ்வார். (கூ)

உள்ள மடங்கா மகிழ்ச்சிபொங்கி
யுறுவா ருவர்முன் காணீட்டிக்
கிள்ளை யெனக்கொம் பெனநகைத்துக்
கிட்டாக் கனன்று மடவீர்மாக்
கள்ள மிகுத்த திணிக்குறுகல்
கடன்மற் றிலையென் றப்பதியிற்
பிள்ளை யனம்போன் மறுகுதொறும்
பிறைவா ணுதல்வேர்த் திடத்திரிவார். (க0)

ஆட வர்களு மரம்பையரு
மகல்வா னிவர்மந் தரமாறு
நீட வளவா ரணம்பார்த்து
நின்று தளரு மவ்வேலை
யேட கலவா னவரினுவா
னிந்தின் குழவு மனைந்துதிர
மாட மதனுட் கொடுசேர்த்து
வயமா வதனை வலங்கரிப்பார். (கக)

பாழி பொருத்த றனைவானோர்
　　பரிவாய் விதானித் திடநறையார்
பூழி துடைத்துப் புகர்முகத்திற்
　　போத னளித்த பிறங்கொளியார்
சூழி தரித்துக் கதிரினிலாச்
　　சுடர்தண் டரளத் தொடைதூக்கி
யூழி தரித்த கதிரோன்போ
　　லொளிரு நவமா மணிதரிப்பார். (கஉ)

கோணை யுபய தடமருப்பிற்
　　குலவக் கிரண வெயில்விரிக்கப்
பூணை யிறுக்கிக் கிம்புரிகள்
　　பொலிமா மணியின் வளைசேர்த்து
வாணை யிருத்துப் பணமணியின்
　　வடிவு பகல்செய் துயர்நெடுவான்
சேணை விளக்கு மின்கணம்போற்
　　சிறந்த வுவணை யணிவாரே. (கங)

செவியிற் றரளக் குச்சமணி
　　தெளிந்த வயிரக் காற்றொடையுங்
கவினச் செறித்துப் பூட்கையின்மேற்
　　கவின்கொண் மணியின் வளைபூட்டி
யவிருங் கனகத் தொடிமணிக
　　ளழுத்துந் துடர்ச்சங் கிலியணிந்து
புவியிற் றிமிரப் பிளப்பருக்கிப்
　　பொங்கு கிரணப் பூண்விசிப்பார். (கச)

விளங்குங் ககன முகடோங்கு
　　மேரு விணைச்சூழ் சேட்டெனைத்
துளங்கப் படியி னடைபெயர்க்குந்
　　தூணைப் பொருவுங் காற்றிறத்திற்

களங்கங் கல்லொண் சுடரோங்கிக்
    கவின்செய் மணியின் வீரதண்டை
வளங்கொள் கதிரோன் மணிச்சதங்கை
    வாறு டிலங்கப் புனைவாரே. (௧௫)

மின்கான் மணியிற் றிகழ்சிலம்பு
    விதுவென் றொளிர்தண் டைகள்பிறவும்
பின்கா லழகு பெறப்பூட்டிப்
    பிறங்கு தால வட்டமதிற்
பொன்காற் பசும்பொற் றகடழுத்திப்
    பொலி கிக்கி லக்கோ வைகள்சேர்த்து
மன்கா யுலவு முவணையெங்கும்
    வயங்கப் பலவு மணிவாரே. (௧௬)

எச்ச மணுகாப் பசியதங்கத்
    திளைத்த புரியா யிலங்குதய்ய
கச்ச மணித்து செழுமணியிற்
    கடைந்த சதங்கை வடஞ்சேர்த்து
மெச்ச மணியின் சரப்பளிகண்
    மீனின் மிளிர்வை ரச்சாங்க
றுச்ச மணிவா றுலவிரவி
    பொளியு மருங்கக் களத்தணிவார். (௧௭)

மின்னின் கணங்க ளெனக்காந்தி
    விரிக்கும் விரிப்பு வெங்குட்டிப்
பொன்னின் புரியால் விசித்திறுக்கிப்
    புதுக்கு மிரவி மதியுடுப்போன்
மன்னுஞ் சிறிய மணிபெருநாண்
    மணிபொற் புரிகோர்த் திருமருங்கும்
பன்னுங் கவிப்புக் கிணகிணைப்
    பாம்புக் கதர்நேர் பகுப்பாரே. (௧௮)

மஞ்சு மிசையே யொருமுதல்வன்
    வல்ல குதறத் தாலளித்த

வஞ்ச வண்மெத் தைகைவிரிப்பா
சதன்மேல் ஈமியும் வாமனைக்கும்
கொஞ்சு கிளிபொற் கொடியாருங்
குலவ விருக்கு மாசனமாம்
விஞ்சு கிளிக்கூ டொருமூன்றின்
மேய வழகிற் சிறிதுசொல்வாம். (கக.)

மருமூதென்றும் யானை வன்னிப்புப் படல-முற்றிற்று.

ஆகப்படலம் - உக - க்குத் திருவிருத்தம். ருஉ0.

## கிளிக்கூட்டின்வண்ணப்படலம்.

புராந்த இருளை யுடையபெரும்
புகழாய்ப் பொலியும் பொருளிறைபோன்
திருந்தநபிகள்பெருமானுஞ்
செம்பொற்கொடியாரிருவோரு
மிருந்து சிறந்த வவ்வுலக
மெங்கு மிபமே துலாப்போத
நரந்த மதனு லொருமூன்று
நகைசேர் கிளிக்கூண் டமைத்தனனே. (க)

அழகுபலவுந்திரண்டொருமூன்
றுகநிறவுந்தகைமையெனக்குழகு
திகழ்மின் கூட்டமெனக்
கொற்றே றுவகை கூண்டென்னப் பழுதுவென்றே
முயிர்கட் கோர்முதல்வன்
பாங்க ரனவன் புற்றுங்கு
நிழல்கொள் கிளிக்கூண் டதன்வனப்பை
நிகழ்த்தற் குவமை யில (உ)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மாகதம் பவள நீலம் வச்சிரம் பதும ராகந்
தாளவொண் புருட ராகந் தக்ககோ மேத கங்க
ளருவயி டூரி யந்தா னுதவ மணியாற் சேர்த்தி
யிரவியோர் கோடி நின்றாங் கிலங்கியங் கிருக்கு மன்றே. (௫)

இலங்குமா சனங்க டன்னி லேபல வன்ன மான
நலங்கிளர் துகிலாற் பட்டா னென்குற வெங்கும் வேய்ந்து
துலங்கொளி வயிர மாலை தூயதண் டாளக் கோவை
பலங்கொண்மின் மினியிற் றூங்கப் பாங்குற நாற்று வாரால். (௬)

ஆதவன் கரங்க ளென்ன வலங்கிருக் கைக ணின்றுன்
பாதவங் கனிகவர்ந்து பலமயங் காட்டுந் தண்பூ
மோதவங் கொணர்ந்து மெல்ல மொய்ச்சிறு தென்றல் வீச
மாதவங் கிடந்த விண்ணோர் வளங்கொள்சா ளரங்கள் செய்வார். ()

மதுக்கொளின் கோற்சேர் வானோர் வகைவகை பந்தி யாகப்
புதுக்கிய கிளிக்கூ டெல்லாம் பொன்னணிந் தூசு மெய்யின்
மெதுக்கொளக் கதிர்கள் காண்டு மிளிர்தலை யணையுஞ் சேர்த்துப்
பதுக்கொளு மொளிவு காலும் படங்குமேல் வீக்கு வாரே. (௮)

மண்கொளா திருக்கை மூன்று மன்னியங் கிருக்கும் பொற்பு
விண்கொளா மற்றுங் கொள்ளா வியனுல கெங்குங் கொள்ளாப்
பண்கொளா நாவாற் கூறும் பயன்கொளாப் படியின் மாக்கள்
கண்கொளா வோர்மை கொள்ளாக் கருதுவ தெவன்கொன் மாதே.

இன்னவொன் சிறப்பிற் செய்தாங் கேய்கிளிக் கூடு மூன்றும்
பொன்னணி திலுவா னும்பர் போதக மஞ்சு தன்னின்
மன்னவே பேற்று கிற்பார் வானள வோங்கு பொன்ன
மின்னணி மேரு வீதி நிறுவிய விமான மான. (௯)

கலப்பறு மொளிவு வாய்ந்த காவல ரீறருள் வைகப்
புலப்பறு பதம்போல் வைத்துப் பொலிந்தவோ ராச னந்தான்
வலப்புறத் தொன்றும் வான்சீர் மன்னிடப் புறத்தி லொன்று
மூலப்பற நிறுத்தல் செய்வா ருவணைலா மிலங்க வன்றே. (௰)

விரகுறப் பார்த லத்தின் மேவிய விடபக் கோட்டி
னுமுற வைய மெல்லா மொருங்குதாக் கியது போல
விரசிதக் கிரியே நின்ற தென்னும்வா விடத்தின் கொம்பின்
மருவுபொற் பலகை சேர்ப்பார் வல்லவ னருளால் வானோர். (௧௦)

வழுத்துபொற் பலகை யெல்லாம் வாயர்க ளங்கண் முற்று
முழுத்தபன் மணிகண் முற்று முறைமுறை யழகு செய்ய
வழுத்திபொண் கிரணங் காட்ட வளவிலி யமைக்கும் வானோர்
கொழுத்திய வெகுளி தீக்குங் குரவர்க ளிருக்கச் செய்வார். (௧௧)

மாணுறும் புழக்கை வெள்ளை வாரண மருப்பின் கண்ணே
சேணுற வியற்று மன்ன செய்பொற் கிரணத் தட்டைக்
காணுதற் கெளிதோ நீட்சி கருதுதற் கெளிதோ மற்றின்
பேணுறு தவர்க்கு வைக்குங் குரிசிகள் பெரிதா மன்றே. (௧௨)

செம்மணி யொன்றி னல்வச் சிரமணி யொன்றி னேனு
மம்மணி நீல மொன்று லாணிவெண் முத்த மொன்றுந்
கம்மணிப் பருதி யென்னக் காந்துபன் மணிக ளாலு
மெம்மணி யாலுஞ் செய்தங் கிருத்துவர் குரிச தெல்லாம். (௧௩)

வெள்ளியாற் பொன்னாற் செய்து மிருகவ மணி யளித்தி
யொள்ளிய வணையு மென்பஞ் சுறுதலை யணையுஞ் சேர்த்துத்
தெள்ளிதி னொழுங்கொ மூங்காய்ச் சேர்சிறு பெரிய வெல்லா
முள்ளியா மெண்ணொண் ணுமுன் னுடையவ னறிவன் முன்றே ()

பவனமீ தவற்றை யீற்றுப் பலன்கொண்மா தவத்தைப் பூணு
மவரவர் செய்த குற்றக் களவளா வியர்த்து நின்ற
நவதவக் குரிசின் றேற்ற நானிலத் தினில்வின் பூத்த
கவலுதற் கரிய தாரா கணமெனப் பொலியு மன்றே. (௧௬)

ஆடிய திலுவா னென்னு மமரரு மவர்தம் மோடு
கூடிய மலக்கா ரேருங் குல்விய மலங்க ரித்துப்
பீடிய மஞ்சி னொண்மை பெறுங்கிளிக் கூடுங் கோட்டிற்
சூடிய பலகை தானுந் துலங்குறச் செய்த பின்னர். (௧௭)

செஞ்சுட ரெறிக்குஞ் சோதித் திண்ணைமீ திருக்கின் றோர்கண்
மஞ்சுடை கீழுறப் போது மதிளம்வா மூசசர் வைகும்
விஞ்சுபொற் றருத்தி னுக்கு மேடைக்கு மிறங்கிச் செல்ல
வஞ்சுட னென்று சேர்ப்ப வாயிரம் வருட மாமே (கஎ)

இவ்வள வாண்டி நப்ப விருந்தவிக் கணங்க ளெல்லாங்
கைவளர் திகழ்பூண் காக்கக் காயமெய் யெழில்கள் காட்டச்
செவ்வனச் சோதி செய்யுந் திண்ணைமீ திழிந்து சூல்கொண்
மைவணக் குடையி னோர்தம் மணித்தருத் ததனிற் செல்வார். (கஅ)

பொருப்புறழ் புயங்கள் விம்பப் பூணும்வான் வெயிலிற் றோன்ற
மருப்பொலி தாரு மார வடங்களு மிடங்கண் மின்ன
விரிப்பரு களிப்புப் பொங்க விண்மணி மவுலி தாங்கிப்
பருப்பதம் பெயர்ந்த தென்ன வருவர்புத் தேளிர் மீண்மேல். (க௯

ஒளியிலகுன் முடிகள் சூடி முண்டமொண் ணிலவ தோடு
தெளிவுசேர் முறுவ லிங்க டிருமுக மாருமற்று
மிளிவிலா வவுலி யாக்கண் மிகுந்தமு மின்கள் யாரு
நளிவிலாத் திரையும் வெற்பு கடந்தன வடர்ந்து செல்வார். (உ0)

மிகுத்தெழு மனந்த சங்க வெள்ளமா மான மோடு
தொகுத்தெழு மலக்கா ரேருந் தொடர்ந்துசென் றிருக்கு கின்ற
பகுத்தபல் லுயிரு ளொளியதாமொன் றும் பார்த்திப ரிறகு லுல்லா
தருத்திளை யொருவன் செய்த தகைமையார் தெரிக்கப் பாலார். ()

படைப்பெவை யெவைக்கு மேலாய்ப் பாங்கருக் கரிய துய்யோ
னுடைப்பெருஞ் சிறப்பு வாய்ந்த வுயர்த்துமத் தாணி தன்னைத்
தடைப்படா வதிரு சேனுந் தாணிபா தலமவின் றேறு
மிடைப்படு மிதனைப் பிதென் றியம்புத லெவ்வ மாதோ. (உஉ)

கலிநிலைத்துறை.

படிக ளெங்கனு மோசொளி யாகவே பரப்பு
மடிகண் மேதக வைகுமத் தாணிமற் றதிலே
கடிக ளெண்டிசைத் திடுவன கற்பமார் தலங்கள்
கடிகள் சேர்கன காசமே டையின்மிசை கவினும். (உ௩

அளித பூீ இயவம் போருகச் சேயக னன்னல்
களித பூீ இயுறு மாசனக் தாங்கிய கடிகொள்
வளித மேடையி ஞெளிபத்தி பாயுமப் படியி
னுளித பூீ இயசே ணந்தர மடங்கலு மொளியாய். (உச)

தாங்க ளின்னதெள் றியப்புகழ் கரியவாய் தனியோன்
றிரங்க ளாமழி யாவர சாக்கிய திறலோன்
வரங்கள் பெற்றவர் மாட்டவர் விழைவென விளக்க
விரங்கு வோன்இரு மையுமிடை விடாதினி திறங்கும். (உரு)

மேடை யன்னது பாதலத் திருந்துவின் னிமிர்ந்து
வாடை யெண்டிசைப் புறத்தெ லாம் போற்றிரு மருங்கும்
கோடை வக்தசைத் திரைக்கரத் தான்மணி கொழித்துச்
சேடைமேவிய சிந்துவின் றடங்கரை செறிந்தே. (உசு)

முஞ்ச லற்றவன் முதனடு வீறிலா முதல்வ
னஞ்ப லற்றவ னனைத்தையும் படைத்தருளரியோன்
கெஞ்ச லற்றவன் இருமைசால் புடையவன் இனக்கு
மெஞ்ச லற்றவ னருஷின்கி மூரகமே யிருக்கும். (உஎ)

காத்தி றைஞறு மேடையின் பிடர்த்தலை கவினும்
வாத்தி றைஞயர் மக்கமா நகர்புரி வள்ளல்
திரத்தி றைஞறு தடுத்தின செப்புவர் மூவா
யிரத்திரைத் தூறவச் சிரத்தினீட் டியதென வியலோர். (உஅ)

வள்ளி யோரிருக் கத்தரு தருத்தின்மேன் மையுதை
யுள்ளி யோனரி தாகிய நற்பர னொருவன்
தெள்ளி யோர்தமக் கொருமனை வறை சிறப்பாமப்
புள்ளி யாயிற் றியவடி வியாவரே புகல்வார். (உகூ)

பவர்க்க முற்றனர் கேட்டன மெரிந்திடப் பலன்சேர்
சுவர்க்க முற்றவ ருள்ளரா டொறுங்களி தூங்கக்
குவர்க்க மானவப் பொன்னுல கினைநகை கொண்டு
தவக்க வம்மண மறைகவ லுகவென்னத் தயங்கும். (௩0)

தண்பொ ருந்துபுத் தேமூல கெனுமொரு தடத்தின்
வண்பொ ருந்திய கிசண்ணெவாண் புனன்மிசை வளருங்
கண்பொ ருந்திய பதிகளொட் டிலையெனக் காட்டி
விண்பொ ருந்திய முளரியோன் றலர்ந்தென விளங்கும். (௩௧)

மின்னு லாவிய மேனிலை யெனுமொரு வேந்தன்
கன்னி மாடமார் பதிகளொட் டணிகல னாகப்
பொன்னின் மேதகு மொளியெனும் படமெயிற் போர்த்துச்
சென்னி மீதினி லணிந்தமட் குடமெனத் திகழும். (௩௨)

மயனு லாவிய வினைவிலி தனையவர் மைந்தர்
பயனு லாவுற வைகுளி யென்னவே பார்த்து
நயனு நாட்டிவண் ணன்மைக ளனைத்தையு நண்ணும்
வியனு லோகத்தின் செக்கியோன் றென்னவு மிளிரும். (௩௩)

விடவின் மேலவன் றன்னைமா தவமெனும் வேலைக்
கடவி னீந்திவீ டெனுங்கரை சேர்ந்தவர்க் களிப்பா
னடவி லாதுவாழ் வுற்றிடும் பொற்பதி யாமோ
ருடவி னேயிரு வாதனு மென்னவு மொளிரும். (௩௪)

கருக்கு மேனிய விருளெனும் குறுகலர் கழிந்து
வெருக்கொ ளப்படி யாவுமா ளொளிவெனும் வேந்தன்
றருக்கு றும்படி வைகலு மோவறத் தருக்கி
னிருக்கு மோரிடம் போலவும் சிறப்பிரு திலங்கும். (௩௫)

வாய்க்கு மிம்மனை வறையதிற் பன்மணி மயமுந்
தூய்க்கு மாகிதன் றிருவுள மகிழ்ச்சியுந் தோய்ந்தே
யேய்க்கு மிக்கசிங் காரமாய்ச் செய்தன விலங்கச்
சாய்க்கு முச்சுட ரெச்சுடர் களுந்தழீஇச் சாட, (௩௬)

மணிக ளெத்தனை சாருசார மாகவே வனைந்த
பணிக ளெத்தனை பைந்துணர்த் தருக்களின் பயின்ற
கணிக ளெத்தனை காட்சிக ளெத்தனை கதிகா
லணிக ளெத்தனை யெத்தனை யதினலங் காரம். (௩௭)

துவள நாற்றிய பன்மணிச் சோதிக் டோய்ந்து.
பவள முத்தமா யாசமப் பளவாய் பச்சைத்
தவள வச்சிர மாகவம் மணியரி தானு
யிவள வான்செயு மொன்றொளி யொன்றிறே டெதிர்ந்தே. (௧௮)

விண்ணு ளேயடங் காதநன் விபந்தையாம் விதானங்
கண்ணு ளேயடங் காதநன் காரண காட்சி
பெண்ணு ளேயடங் காதவ ளுண்மையெப் படியா
மண்ணு ளேயிருந் திவ்வண மென்றிடும் வழக்கே. (௧௯)

பாரின் மன்னவர் வதுவைசூட் டுமெனப் பரிந்து
சீரின் பந்தலொன் றியற்றியே சிறப்பெனச் செருக்கின்
காரி னீழல்சேர் வள்ளலுக் குவணையின் கட்சூட்
டேரின் மேதரு மிறைசெய்கா வணச்சிறப் பெவனே. (௨0)

சுருக்க மற்றசி ருத்தம மணவறை சூழக்
கருக்கெ ழுத்துமைக் கண்ணாம் பையர்கடங் கணமு
மருக்கு மென்னடை யவருடை சிற்றடி யாரு
மிருக்கு மாயம தெண்ணிமட் டிடப்படா திவனே, (௨௧)

பணங்கொள் வாளராப் பரிப்பிலிவ் வசம்பையர் பண்ணை
யிணங்கும் பேரெழிற் சுடர்விரிந் திலைத்திடு மிலைகள்
சுணங்க லர்ந்தப டரபொற் றுணைமுலைச் சோலை
வணங்க வின்னவென் றியம்புதற் கெளிதல மாதோ. (௨௨)

மகிழ வள்ளலார் வைகுமத் தருத்தன் வலப்பாற்
புகழ்பொ லன்சிறைப் பொம்மல்சேர் செங்கணற் பொறையொன்
றிகழுந் தூதுவின் னவர்க்கர சாகிய ஜிபுரீ
லிகழ்த லன்றியே வீறுட னூற்றுட னிருப்பார். (௨௩)

ஐயன் வீற்றுறு மத்தகுத் திடதுபா லதினும்
வைய மெங்கணும் பொதுள் பல சீவனும் வளர்க்கே
யுய்ய வான்கணி னூற்றுநே ருதவிய சாலப்
பெய்ய மேவுமீக் காயிலு முறைவர்சீர் பெறவே. (௨௪)

ளாத்த நாயக னெத்துணைக் கருணைகொள் ஹபீபு
வாய்த்த வத்தருத் தினங்களின் முன்னமே வடிவாய்க்
கோத்த ருந்திர ளாண்டயர் பயந்தசொற் குமரர்
நீத்த மாய்ச்சமு தாயமாய்க் குழுமியே நிற்பார். (௪௫)

ஆய்ந்த வாறுல வணிசெறி மணித்தருத் ததன்கீ
ழேய்ந்த சுப்பரு வொளியினால் வாய்ந்தினி திருக்கும்
வாய்ந்த வெள்ளிரிப் பிடையெலா மணியொளி வயங்கப்
பாய்ந்த பற்பல கலங்களெண் ணிலவுறும் பரப்பி. (௪௬)

பரப்பு இன்றவை யென்கொலோ வெளிதுணா பரத்து
நிரப்பு இன்றதோர் விலைமதிக் கப்படா நிதியா
துரப்பு விஞ்சிவி சட்டணம் பொறித்துயர்ந் துயர்ந்த
காப்பு ருதுபீங் கான்களு மனந்தமக் கண்ணே. (௪௭)

உள்ளி யாவரு முணர்ந்திடற் கரியவா முறுவென்
றெள்ளி தாகிய பற்பல விந்தையாய்த் திகழ
வள்ளி யேயெடுக் கத்தரும் வண்ணிலா வமைத்த
வெள்ளி யாலுறு கெண்டிக ளனந்தமு மிருமே. (௪௮)

வித்தி னேர்பொருள் வேண்டல்வேண் டாமையின் விதியோன்
சத்தி னாலெழுந் றகைபல் விதங்களாய்த் தொகுத்துப்
பத்தி நாடிய திக்கெலாம் பகுங்கதி ரவன்போன்
முத்தி னாலுறு கிண்ணமெண் ணிலவுமே மொய்க்கும். (௪௯)

மாணிக் கண்ணகல் புளினிசும் பிரண்டுமே கலந்து
பாணிக் கப்படும் வல்லமை யுடையவன் பகுத்தான்
பேணிக் கம்பல வருணவொண் கிரணமே பிறங்கு
மாணிக் கத்தினால் வள்ளமெண் ணிலபல வயங்கும். (௫௦)

உகிரி னாலுல குத்தமர் பொருட்டின னுடையோ
னகிரி னாறுபல் வகைவகை யழகுற வமைத்தான்
பகிரி நாணிலத் தவருளங் களிப்பவான் பசவுந்
துகிரி னாற்செறி குழுவிக ளனந்தமுங் குழும். (௫௧)

முத்தி சேர்பவ ருண்பதற் குறுதியா முதல்வன்
பத்தி சேர்பசும் பொன்னிரு லைகறப் பரப்பு
முத்தி சேர்ந்தபின் காண்கவொண் ணிலகி னுணவு
சித்தி பத்துநா ருயிரம் வகை யுறுஞ் செறிந்தே. (௫௨)

உணவு பத்துநா ருயிர விவேடமோ ருணவி
லனுரு பத்துநா ருயிர முரிசைய தாகு
மணம ருதபல் கருணையு மற்றவும் வளமாய்க்
குணம தாகவே யாங்குபா வித்துமோர் குலவும். (௫௩)

வின்ன மட்டினி லடங்கிலாப் புகழுடை மேலோன்
கன்ன மற்றவ ருழிவாழ் வுற்றிடற் கறைகூர்
நள்ள கற்றியே யமைத்தெழு செம்பொனன் னகரத்
துள்ள பல்வள மனைத்துமே யொடுக்கினி லுறவே. (௫௪)

அமைத்து வைத்தபின் னுகியா யனுதியு மாகிக்
கமைத்தி ருந்திய வல்லவ னெவ்வனக் கருத்தா
லமைத்து தித்துமோர் வணங்கிய வடியவர் யாருஞ்
சமைத்த விவ்விருந் துணவிதிந் துறுமெனத் தயவாய். (௫௫)

அந்த வண்ணமே யவரவர் பதவியி னளவாய்
முந்து சிரபி மார்களு முனுசலீ னவரும்
சந்த மற்றுள மூமினோர் களுமுறுந் தலம்பார்த்
திந்து போலொளி யொடுக்கதின் மகிழ்ச்சிகொ டிருப்பார். (௫௬)

விருந்து நல்கிய வொடுக்கினி லனைவரும் விசனோ
டிருந்து தந்தமக் கிச்சையான் முன்கனி யாது
மருந்து வார்கண்மட் டிடப்படா வின்மதி யாதும்
பொருந்து வார்களிப் பெய்துவார் நன்னவம் பொலிவார். (௫௭)

ஒருவ னுண்மினென் றுவசரிப் பதுசெவிக் கூட்ட
முருகு சுந்தா நாசிக ளருந்திட முட்டிக்
கருது மூறுகள் காயமர்ந் திடுகெனக் காட்டிச்
சருவி ருவினுண் டுவ்விமட் டினித்திடத் தாழ்ப்பார். (௫௮)

யிணைந்தன் கண்ணுரு னருள்விருந் தின்பமெய் பெயரு
மளைந்த குலனைப் பருந்விப தங்களு மதூர
விணைந்த ருற்றகு மினிமையு மதித்திடற் கெளியேற்
கணைந்த நாவுள வென்னினு மட்டிட லரிதே. (௫௯)

உற்ற விவ்வொடுக் குள்ளவிப் பாகமு மொருங்கு
துற்று பற்பல பதார்த்தமும் பொரிக்கறித் தொகையு
மற்று முள்ளவும் வகைத்தையு மின்பமு மதியான்
முற்று ரைப்பதற் கெத்துணை யென்னநா மொழியும். (௬௰)

இப்பெ ரும்பத வமுதலுண் கிடைப்பதற் கெளியே
மெப்பெ ரும்பதம் பெற்றன மின்னபே ரின்பங்
குப்பெ ரும்பகி யாற்றுநற் றவமெலாங் குறுக்கி
னெப்ப ரின்பத்தி னோனுப் பெருகுதன வுவப்பார். (௬௧)

மிடுக்கு மிக்குளா யின்பமீ தேழையே மிசைய
வொடுக் களித்தனை யுவப்பொடும் புகழுமென் றவைப்பா
மடுக்க வேயிருந் தவரவர் கைத்தலத் தள்ளிக்
கொடுக்க வாய்திறந் துண்டுதேக் கெறிந்துடல் குளிர்வார். (௬௨)

இட்ட பன்னைபத் தெழுபதி னுயிரம் வருட
மட்ட தாகவே யிச்சையாம் வஜீவன மாந்தி
முட்டி லாதபே ரின்பமார் கடலிடை மூழ்கித்
தட்டி லாதுபொற் றோள்புள கஞ்செயத் தரிப்பார். (௬௩)

கலிநிலைத்துறை

உறவிருந் தமைகதை யுண்டு தேக்கியே
மறுவுறுந் தவத்தினர் வைகுங் காலயி
னறுதியாய்ப் பணிவிடை யமர ருக்குறு
மிறுதியென் றுதவ வியம்புஞ் சத்தமே. (௬௪)

கங்கையாங் கிருபையங் கடலி னுற்றருள்
பங்கயா னனத்தினர் மரபு பற்றியே
யங்கையேற் றெலைவணங் கடிய வர்க்கெலாஞ்
சங்கையுடை யியாரி. வட்டருஞ் சாற்றுமால். (௬௫)

என்றிறை முதல்வ னேவ லின்படி
குன்றினைப் பொருவுபொற் குவவுத் தோளினர்
துன்றுமே னியினிற் சூட்ட வானவர்
மென்றுகில் கொணரவே விரைவிற் செல்லுவார். (௬௬)

பிருதவு சொன்னவே பிறங்கும் பொற்பதி
மருவிய துகில்களில் வாரி யேகொணர்ந்
தெருவருக் கெழுபது துகிலு டுத்துவார்
திருவுளந் தவறிடாத் திண்மை வானரே. (௬௭)

மாதவற் கெழுபது துகில் வனைந்தபொற்
சீதள மதியெனச் சிறந்தி ருந்தபின்
பூதரப் புயத்துவா னவர்க்குப் போதுமாம்
நீதிமிக் குடையவ னிகழ்ந்துஞ் சந்தமே. (௬௮)

உரகனைச் சிரஞ்சிதைத் தோங்க லோடுநேர்
விரகினைப் பேசிய வேத நாயகர்
மரபினில் வணங்குமென் னடிய வர்க்கெலாஞ்
சிரமிசை சேகரஞ் சேர்த்து மென்னவும். (௬௯)

கபிரோ மணிகபி நாதர் நேர்வழி
தவிர்தலத் தறுதவந் தழைக்கு மெய்யுடை
குவிதவ மணிகளாற் குயிற்றி வில்லொளி
யவிர்மணி யணைத்தையு மணியு மென்னவே. (௭0)

குலங்களிற் றுகளகல் குறைவி வங்கிடைத்
திலங்கிய மன்னவ ரிடையவ யிற்செலு
மலங்கல்சே ரென்னடி யவர்க்கு முன்கையிற்
றுலங்கிய பணிகளைச் சூட்டு கென்னவும். (௭௧)

அப்படிக் களவுள ரகவி டத்தினிற்
பொய்ப்படி நகன்றனம் போத வாய்மையோர்
மைப்படி முகின்மிசை மதிக வித்தன
மொய்ப்படு சிரத்தணி முடிகள் சூட்டுவார். (௭௨)

தெளிவுசேர் நற்றவர் தேய மெங்கணு
மொளிவுசேர் பொன்னினு லோங்கும் வெள்ளியா
லிழிவுசே ராதவ ரத்தி னத்தினு
லழிவுசே ராதபூ ணனைத்தும் பூட்டுவார். (௭௩)

நன்கைநே ரியற்றிய நார்க டஞ்சினை
முன்கையின் மிசைநகை மொய்ப்பப் பூட்டுவார்
பின்கைசேர் வெள்ளிபோன் மிளிரும் பன்மணி
தன்கைசேர் மூவ்வகை சமைந்த பூணமே. (௭௪)

துகில்புனைந் தணிமுடி சூட்டிப் பன்மணிப்
பகிரினை மேனியிற் சாத்திப் பார்த்தபின்
னகிர்முத லாயக னலியின் மிக்கவ
ரெறிவருஞ் சுரர்தமக் கோசை யாகவே. (௭௫)

இயக்கரு பாரினி லென்ன தேவலைப்
பயந்தவென் னடியவர் பரிம ளித்திட
நயந்தரு மம்பரு நாவி யுங்கலந்
தயந்திராத் தடப்புயத் தப்பு மென்னவே. (௭௬)

எளிய படியொளி யேயும் விண்ணவர்
நாவியு மம்பரு நறுங்கு ழம்பதாய்த்
தாவறக் குழைத்தவர் தார்ப்பு யங்களி
னீவிமெய் பூசுவார் நிரம்ப வள்ளியே. (௭௭)

அருவுடை யவன்றனை யடிய வர்க்கெலாம்
வரிசையிற் படிச்செயின் மற்றை யோர்கடம்
பிரிசமு மதிக மாம்பெறு மேன்மையே
முறைசெயற் றெளியவோ வொருவ னன்றியே. (௭௮)

ஆண்டகை யப்துல்லா வாத்தி னன்பினுந்
காண்டகு முலகிடை கதிரு தித்தல்போன்
மாண்டக வுதித்தருள் வள்ளன் மன்றலிற்
பூண்டகு முலகினிச் சிறப்புப் பொங்குமே. (௭௯)

படையுணப் பட்டதோர் படைப்பெல் லாந்திரு
மிடையுறு தாகினா லோற்ற மானவர்
குடைமுகி லிடவருங் குரிசின் மன்றலி
லுடையபவிச் சிறப்புவ ளுலகி லோங்குமே (௪0)

அம்மையைக் கொடியென வாயு நுண்ணிடைக்
கொம்மைவெம் முலையிளங் குமரி யாக்கினோர்
எம்மைமன் னுடிடு மேந்தன் மன்றலி
லும்மைமே லுலகிலிச் சிறப்ப தோங்குமே. (௪௧)

கந்தர மிருக்கையிற் காவிற் கவ்விய
செந்தழல் வாவிடந் தீந்த பூபக்கர்
கந்தாம் பெறவருந் தோன்றன் மன்றலி
னந்தர வுலகிலிச் சிறப்பி லங்குமே. (௪௨)

கடிகமழ் மறுவியோர் காதம் வீசிய
வடிவுறு மரபமார் மாலை மொய்ம்பின
ரடிகளா நபிகளுக் கரசர் மன்றலின்
வடிவுடை யுலகிலிச் சிறப்பு மன்றுமே. (௪௩)

தெண்டிரைக் கடற்கலைந் தேவி மெய்யிடை
வண்டிறற் றீன்பயிர் வளர்த்து வைத்தருள்
கண்டினிற் கனிந்தசொல் ஹபீபு மன்றலில்
விண்டலைப் பதியிலிச் சிறப்பு மேவுமே. (௪௪)

குழைசிலைக் காளவன் கோறல் செய்திடா
துழைமறிக் காய்ப்பிணை யுற்றி ருந்தருண்
மழைசிவண் கைத்தல வள்ளன் மன்றலின்
றழைதரு பதியிலிச் சிறப்புத் தங்குமே. (௪௫)

முற்றிய கூன்றெரு முதுமை நீக்கியே
பற்றிய விளமையைப் பாலித் தேவிடும்
நற்றிரு வடிவுடை நாதர் மன்றலில்
வெற்றிய பதிச்சிறப் பமைந்து மிகுமே. (௪௬)

நெறியுறு மதினம்வாழ் நீதி வேந்தருக்
கறிவுறு மறியமை யாசி யாதமைக்
குறியுறு திருமணங் கூட்டு கின்றது
வெறியுறு முவகையி லார்க்கு மேன்மையாம். (௮௭)

பங்கமி லாதுணர் பலன்கள் வேட்டவர்
தங்கவே கற்பமுந் தழைத்து வாழ்வுற
மங்கலி லான்றரு வான லோகெலா
மங்கலுழ்ந் துயரலங் கார மானதே, (௮௮)

வீறுபெற் றருள்பெறும் வேத நாயக
ராறுபெற் றுயர்தவ மாற்று வோர்க்கெலாங்
கூறுபொற் பதியினிற் கோதி லாதகற்
பேறுபெற் றுயர்மணம் பிரிய மானதே. (௮௯)

வீழியங் கனியித ழரம்பை யின்னுரர்
பாழியந் தடமுலைப் பாரம் விம்பமேற்
றேழிய ருடன்விளை யாடிச் சூழுவார்
வாழிய மகிழ்ச்சியர் வானு லோகெலாம். (௯0)

நறைகமழ் பூந்தரு நகர மெங்கணு
முறைதரு மிசையினின் றோங்கு பட்சிகள்
நிறைதரு விசும்பிடை நிமிர்ந்து பம்பிய
சிறைவிடுத் தாடுதற் சிறப்ப தாகவே. (௯௧)

வரம்பெறு நன்மபி மாரு மாதலத்
தரம்பெறு முறுசலீ மான தாயரு
மரம்பையர் மகிழ்சுக தாக்கள் மூமினோ
ருரம்பெறு மற்றுமுள் ளோர்க ளியாவரும். (௯௨)

மாதவத் துறைதெருள் வரிசை யுள்ளவர்
தீதறு வண்புகழ் தேக்கும் வள்ளலார்
கோதறு வதுவையிற் கூட்டு கின்றதாற்
போதற மிருதியும் பிரிய மாவரே. (௯௩)

ஓங்கிய வளங்கொள்தா லூது நன்னவி
யீங்குயர் புகழ்சபூ றென்னும் வேதநூற்
றுங்கிசை பலவுறு தொனியி ராகமோ
யாங்குள மகிழ்ந்துபா ராட்டு வோ ரவர். (கூச)

தளம்படா வேதநூ றன்னை நன்னவி
விளம்பிட விசையினல் விழைவு பொங்கியே
யிளம்பிறைச் சிறந்த நெழில் நங்கையர்
வளம்படும் ராகநல் விசைவ ளங்களும். (கூரு)

நலசுவைத் தன்புன லுடும் புட்களும்
பலவினைப் பூந்தருப் பயிலக் குந்தமு
மிலவித மாம்பைய ரிசைத்தல் கேட்டு
லலகிரி மூடிய ராகம் பாடலும். (கூசா)

116648

ஈனமிற் பற்பல விசைப்பி ராகமாய்த்
தானுதிக் கிடுவது தன்னை யோர்ந்தனன்
மானவ ரனைவரு மகிழ்மிக் கோங்குவார்
கானம ருலகிடை கவன மின்றியே. (கூஎ)

வீடெலாஞ் செறிந்திடும் விண்ணும் யாண்டிராக்
காடெலாந் தழைந்திடுங் கடவுட் பூந்தருக்
கோடெலாம் பத்திபாய்ந் தொளிவு கூர்தருஞ்
சேடெலா மின்கணத் தெரிது மென்னவே. (கூஅ)

கப்பினி பத்தியாய்ச் சோதிக் காந்தியிற்
கொப்பிலா நாந்தவா சனையு மோனைமயிற்
செப்பிலாப் பாவிதத் தேனு முள்ளவாய்த்
தப்பிலா தெங்கணுந் தயங்கி நிற்குமால். (கூகூ)

படியெலாஞ் செம்மையிற் பாலித் தாண்டரு
ளடிகளுக் கடிதளா மன்ன லார்க்குநற்
கடிமணஞ் சூட்டுநற் களிப்புப் பொங்கியே
வடிவுறு மமரரு மனுவு மற்றுமே. (௧00)

பன்னுயிர்ச் சிறப்புவின் பதியின் மேன்பட
மன்னுமவ் வேளையின் வானர் மானவர்
முன்னுறு முகம்மது முன்ன பாவுமி
தன்னுவார் மணவினுக் கணியல் குட்டவே. (௪0௧)

இனிக்கூட்டின் வல்லைப்படல முற்றிற்று.

ஆகப்படலம் - உச - க்குத் திருவிருத்தம், கூஉக.

# நபிநாயகத்திற்குமாலையிடுபடலம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்

நீலத்தில் வயிரந் தன்னி னித்திலம் விரவிச் செய்த
கோலத்தி லணிதி ரீடங் கொண்டுவா னவர்மற் றேரும்
ஞாலத்தி லனந்த வெள்ள நாலேபோற் குழுமிச் சென்றோர்
சீலத்தி னபிகள் கோமான் றிருமுனம் பணிதல் செய்வார் (க)

வியந்தவர் சலாமுங் கூறி வியனுல கெவைக்கு மேலா
யுயர்ந்திடு மொசிலத் தூற்ற வொண்மணி யாசனத்தின்
மயந்தரு கோமான் மெய்யின் மணவினைக் கிலங்கச் செய்ய
வியன்றரு மொருவ னக்கு மின்களைத் தெரிந்தெ டுப்பார். (உ)

மின்னெலாந் திரண் டிருந்தால் விதுவெலாந் திரண்டி ருந்தாற்
பொன்னெலாந் திரண்டி ருந்தாற் புகழெலாந் திரண்டிருந்தான்
மன்னெலா முடையோ னுள்ள மகிழ்வெலாந் திரண் டிருந்தா
லென்னெலாந் துலங்கு மொவ்வா திருக்குமவ் வணிக ளெல்லாம்.

வல்லவன் கருணை யொக்கும் வணமொளி யங் மீதி
லெல்லவன் கிரண மங்க வெறிக்கும்வச் சிரங்கி சாத்தி
யல்லவன் கரங்கள் சாய்க்கு மானன வள்ளல் மெய்யி
னல்லவன் கிருபை யோங்க நகைடல வணியல் செய்வார். (௩)

கழுத்தினிற் றரித்த கோடிக் கதிரவன் சுடர்விட் டென்ன
வழுத்துமா மணிப்ப தக்க மலங்குகண் டசாங் காறை
முழுத்தகண் டனக் கோவை மொய்சரப் பளிக மெல்லாம்
வழுத்தகாண்பாங்கண்டோன்மேல்வைத்தசேவகைக்கைபோலும்.

அங்குலி யிணைக்கி யின்கா லணிமணிப் பவுத்தி ரங்கள்
செங்குல மணிகள் ரங்கத் திருத்துகங் கணமுன் கையும்
பொங்குலம் பொருவும் வாகும் பொருத்துவங் கனங்கள் மற்று
மங்குலின் முதன்முன் னேற்று மகிளம்வின் விரல்கள் போலும். ()

ஆரணத் துறைய நீதி யண்ணல்பொற் சரங்க டன்னிற்
பேரணிச் சதங்கை தண்டை சிலம்புபின் சாலு மட்டும்
பூரண வணிக ளெல்லாம் புனைந்திருக் கின்ற தோற்றங்
காரண ரமுருக் கஞ்சிக் கழுமுங் காட்சி போலும். (எ)

மன்னிய மகுடந் தன்னை மன்னபி சென்னி சூட்ட
லென்னின்பின் கணங்க ளென்ன வெரிசுடர் கண்ட காணம்
கன்னிட வொளிருந் தோற்ற கனிமுதல் கண்பன் றன்னைக்
கன்னலிடை நோக்கு கின்ற கருணையாம் விழிகள் போலும். (அ)

சுற்றிய வானோர் கோடி சூரிய கிரண மென்ன
வெற்றிசேர் விரபட்டம் வேய்ந்தொளி விளங்கு மேன்மை
பற்றியே மனன நோவப் பணிந்தவர்க் கிரங்கு முன்னே
நெற்றிமேல் றருமத் தின்கை நீட்டியே தாங்கல் போலும். (௯)

பணியிறாக் குஞ்சி சேர்ந்து பற்றியேழ் சென்னி யிர்ந்த
பிணிமுகத் துருவாம் வள்ளல் பேரொளி வேய்ந்த காய
மணிபிறுக் கழகு செய்ய வன்னவர் பூ ணன்றே மெய்ய
லணியிறுக் கழகு செய்ய வணிவர்வின் னோர்கண் மாதோ. (௰)

ஆயபே ரழகு வாய்ந்த வருணமி மேனி தன்னன்
மேயபே ரணிக ளெல்லா மேதக விளங்குந் தோற்றந்
தூயபொன் னரிக்கத் தாக்குந் தோமுறு கருந்தா ரெல்லாந்
செயகெக் தங்க மாகச் சிறந்திடுந் தகைமை போலும். (கக)

பொற்றிரு மணியின் கட்டி புனைந்திடு மேலோர் சூழ்ந்து
வெற்றிகொள் விறருல் மெய்யின் வேய்ந்தபுட் காத்தி தோன்றல்
வற்றில்சீ செங்கோன் மேனி வனைந்திடப் பெற்றரு மென்ன
முற்றிய வோசை பொங்கி முயற்சியின் சூழ்தல் போலும். (௯௰)

இத்தகை யணிக ளெல்லா மிளவெயி லெறிக்க வானோர்
வித்தகர் புறத்திற் சாற்றி விறைவுற விருந்த பின்றை
முத்தனை நகையுள் மூரன் முகிழ்முலை யாம்ப நல்லார்
கத்திகை நகைக்குச் சூட்டுங் கன்னியர் பாலிற் செல்வார். (௯௧)

பெருகுறுந் தவத்தோர் வைகும் பிருதவு சென்னுஞ் சொர்க்கத்
திருவென மறிய மாகி யாவெனுந் தெரிவை மாதர்
மருவுறும் வதுவைக் கோல மாயணி வனைவான் போது
பொருவறு கூறுல் ஹீன்கள் பொற்பினிற் சிறிது சொல்வாம். ()

நபிநாயகத்திற்கு மாலையிட்டபடல - முற்றிற்று.

ஆகப்படலம் - ௨௫ - க்குத் திருவிருத்தம், ௯௨.

# கூறுல்ஹீன்கள் சிறப்புப் படலம்

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

மதுவழிந் தொழுகி நறைகம கமெனும்
வண்மலர் செறிதலாய்க் காவாய்ப்
புதியகூன் பிலையொன் றிருந்திருண் டறலைப்
பொருதலாய்ச் சூழ்கரு முகிலாய்த்
துதிகருட் கற்றை சைவலந் துதைந்து
தோன்றலாய் நீகிறக் கடலாய்
முதுமறை நபினூர் வழிவா சார் மணமாய்
முரிப்பெனச் செருக்குறுங் குழலார். (௧)

சேர்ந்தசெவ் வகத்தி தருமுகை யிளையுந்
தேய்ந்துகொன் கருவிச்சா ணையையுஞ்
சாய்ந்தபே ரெழிலுந் தழிர்கிழ மித்ர
தனுவையு முவமையிற் சாற்றேங்
கூந்தலின் கரும்பாம் பொக்குதண் செவ்விக்
கொழுஞ்சுடர்த் திங்களை விழுங்கிப்
பாந்தண்மேற் படியின் மெலமெல வுமிழும்
படியெனத் திகழ்தரு நுதலார். (௨)

வில்லகக் குனிசே நாணியிற் றிருந்து
வினைஞர்கை யேவல்செய் திடவே
பல்லக மிருந்து கடிபட வடிக்கப்
பட்டநிம் பத்தையும் பழித்துச்
செல்லக மெல்லாம் பயந்தொரு விழியாய்ச்
சேணிடை நோக்கியந் தாமரைப்
புல்லர்க ளெனவே கருங்கொடி வெருவப்
பொருகரும் பிருகுடி யுடையார். (௩)

கடுவெனச் சினந்து கதையெனக் குனித்து
கயலென வளகமேற் றுள்ளி
வடுவெனத் திகழ்ந்து வசியெனக் கடிந்து
வலையென வினைஞரைப் பிணித்துப்
படுகொலை புரியு மயிலெனக் கூர்ந்து
பற்றுயிர் பருகியே மருட்ட
விடுசுடர் வதனத் திங்கள்கண் டலரும்
விரைகமழ் குவளைபோல் விழியார். (௪)

பொற்குயி லிதென நவிற்றினு முவமை
பொருந்திடா வெள்ளினம் பேரலுஞ்
சொற்குயி லியெனக் கலைஞரொவ் வகையிற்
சொல்லினு மதற்கிணை யுரையா
நிற்குயிற் குழலா யுடலர் கூறு
நீளமிழி தனல் விழியால்

விற்குமிழ் செவ்வி திகழ்குரு விந்த
மேதகு விளங்குநா சியினார். (௫)

தூதுளங் கனியும் விழியங் கனியுந்
துப்பாக் காம்பல்செங் கிடையு
மாதுளகங் கனியுந் தொண்டையங் கனியும்
வைத்திடிற் கோபமாம் படியி
லேதுளங் கருதுஞ் சுவையெலா மூறி
யின்னமிழ் துறைந்திடு மறையாம்
போதுளங் கரும திருந்திழை தாங்கும்
பொற்கொடி வனிதைய ரிதழே. (௬)

முருந்தினைக் களவி னரும்பினைத் தவள
முகையினை முத்தினை மெழுகிற்
றருந்தினை யளவு மெனக்கினை யவிலனத்
தகமுறு வலித்திடு நகையா
சருந்தினை யடுபாகேன் குழம்பு பழமு
மாரினும் வேம்பினுஞ் சார்வார்
மருந்தினை யமைத்துக் கிள்ளையும் வாளு
மயங்கிட வுரைத்திடு மொழியார். (௭)

கயலிசன் கெளுடம் வள்ளைபோல் விழியுங்
காமுக ருயிரிருந் தாடப்
புயலம சளக்கக் காவகற் றியற்றும்
பொருவில்பொன் னூசல்போற் குழையார்
முயலுறும் புளியின் மெய்யெழி லேறுக்க
முழுமணி யமைத்தகற் பணைமா
மயல்வெறி தனித்துக் காமுக ருயிர்கொள்
வந்தியர் பொற்கபோ லமகோ. (௮)

விண்டிருக் கியவு வாமதிக் குறையு
மெய்யினு ளார்குழுங் கிடலா
கண்டிருக் கவலை கூறுத லையுமாங்
காளையர் கட்சகோ ரங்க

ளொண்டிருந் திழைகை யிமைப்பிலா நோக்கி
யுணுமலி யாபதி யெனவிர்
வண்டிருந் துலவி விகசித மென்ன
மலரென வொளிசெய்ய முகத்தார். (௯)

வளர்ந்தபைங் கழனிக் கமுகிணை யாரு
வன்கொலை வெட்டவே முருக்கி
யிளந்தளிர்க் கமலத் திருமல ரதன்கி
ழேய்வலம் புரியன கழுத்தா
ருளந்தருங் குறவே காமுகர்க் கிள்கி
யோங்குபஞ் சணையெனத் திரண்டு
தளந்தனிற் பணைத்த கழையெனப் பசந்து
தங்குமென் மணியணி தோளார். (௰)

இன்னிசை பயிலும் வயிரியர் கையா
ழென்னவே சுடரொளி மணிகள்
பொன்னிசை யுறுபூண் வளைந்துள முருக்கப்
பொங்கெழில் தங்குமென் னகையார்
வன்னியி னிறச்செங் காந்தளை நிகர்த்து
வடிவெலாந் திகழகங் கையார்
துன்னிய கிளையார் கெளிறன விருந்தங்
சூழ்க்கெதன வாய்ந்திடும் விரலார். (௧௧)

பஞ்சுறஞ் செவ்வாய் கரும்பெனக் கிளவி
பயில்சுகத் தளவிணைச் செங்காய்
விஞ்சிய விந்தி னிலையினைத் தவள
வெழுங்கு சத்தினைச் செம்பொ
னெஞ்சிற வமைத்த முத்திரைக் கோவி
னெழிலினைப் பழித்திணை நோர்க
னெஞ்சினைக் கருது மெவ்வழ கவை,
நிறைந்திடத் துலங்கிய வுகிரார். (௧௨)

இளகுபொற் சுயில மெனப்பணைத் திடக்கொண்
டிழைகொள்பொற் குடமெனத் திரண்டு

புளகமுத் றிரண்டு கமலினான் முகையிற்
பொறியது காவிருந் தென்னத்
தளதளத் திருகண் கறுத்திடை நடுங்கத்
தரித்தவம் புறம்புடைத் தடர்ந்து
பளபளத் தழகு திகழ்மெய் நகிவெண்
பகட்டையும் பகட்டுபூண் முலையார். (௧௩)

உங்கயின் முளரி முகையிரண் டேந்தி
யொருகரு நாணின்ற தென்னத்
தந்திமை நிகர்பூண் முலைகளைப் பணின்பரீட்
டாரையின் காந்துவீழுந் தென்னங்
பந்திகல் கொங்கைக் கணிந்தசாந் தொழுகு
பான்மையா மென்னவா டவர்கள்
புந்தியற் றனவெற் பேறுசோ பானம்
போலுமு றாமயி லொழுங்கார். (௧௪)

காமுக ரின்பக் கடலா சதன்மேற்
கவிழுமோ சாவினங் தவிர்போற்
றேமறு மழகு தோன்றிய வுதரத்
தோகையர் மாலெல்லு மாழி
மாமய லுங்கா முகர்களா வியெலாம்
வாரியிற் கழிக்குமற் புதம்போ
லழகுறு மொழியிற் றுதிப்பதற் கரிதாம்
நாரிய ருந்தியஞ் சுழியே. (௧௫)

அந்தர மென்ன நுணுகிநீ யென்ன
வாய்ந்த பூங்கொடியின வஞ்சி
சுந்தா மிருமின் னென்னவா வியெனத்
துளங்கிய தென்றலி னசைந்து
மந்தர மிரண்டு தாங்குதற் கேங்கி
வைகலு முடைந்திடைந் திடைந்து
கந்தர மிருந்த நமிதிருக் காட்சி
காண்கிலா நுள்ளதே யிடையார். (௧௬)

தூய்பரூற் கதலித் தண்டிரண் டென்னத்
தூங்கலி லிணைக்கா மென்ன
வுய்யவா டவர்கள் புயக்கனி றடுக்கு
மொளிர்மணிக் கம்பா மென்னச்
செய்யவாய் வனப்பின் மென்மைய வாகித்
திரண்டுமால் செயுமணிக் குறங்கார்
மெய்யபே ரழகின் கடலிடை தென்னட
விளைவுறப் பொருவுசா றுவினர். (௧எ)

இணைவிசா லிறும்பொற் காளம திறுங்கோல்
செறிவுறு தூணிய திறுமே
நினைபவ ரிசைவொல் வாரெனச் சிறந்து
நீள்வடி வமைகணைக் காலார்
வினைவரா தென்ன காளிகோந் தின்ன
மென்குரும் பைகள்மநம் பணிந்தாங்
கணைவரா ரழகு நிறைசெயுந் தாரக
தாமெனத் திரண்மணிப் பரடார். (௧அ)

கொங்கைகள் குலுங்க மாதர்க ளாடுங்
குடங்கையின் பந்தெனுங் குதியார்
செங்கம லுல்வுந் திளரயுறு கமடக்
திருமுறை திகர்புறந் தாளார்
கங்கையின் மகிப்பத் தூகிரதாய்த் துகிளைக்
கடைந்திணைக் கெபதென விரலார்
பங்கயம் பாலா யளிச்சமே முள்ளாய்ப்
பயப்படு மலத்தகப் பதத்தார். (௧௯)

அன்னமும் பிடியுங் கண்டுள மூருக
வாடவர் நெஞ்சின்மால் பெருகச்
சொன்னமும் பணியு மணிசெயுங் கொங்கைத்
துடியிடை மின்னென நடங்க

வன்னமுஞ் சாயன் மயிலெனத் தோற்ற
வடிவிழி கயலெனப் புரள
வின்னமு துயர்பொன் னுலகெலாம் விளங்க
விசையவே யசையுமென் னடையார். (உ0)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

ஆத்துவ ரிதழ்பொற் கும்பத் தனைமுலை மடநல் லாரை
யேத்துமெய் யழக தெல்லா மென்னையார் சொலும்பா லன்றே
நீத்துமே தினியை வேட்டு நீள்கதி தேடி னோர்க்குப்
பார்த்துவைத் திற்றி னல்கும் பராபர னறிவன் மன்றே. (உக)

மண்ணிறு லென்புந் தோலும் வாய்ந்தபேர் மடவார் தம்மைக்
கண்ணிறற் குறித்தெவ் வண்ணங் காணெனப் பேசுற் றாரே
யெண்ணிற எழக தெல்லா மேல்பணி யரற்றும் பொற்பு
விண்ணினூர் காணிற் செய்கை யிழந்தலம் வருவர் பார்மேல். (உஉ)

அம்பர்கற் பூர நாகங் குங்கும மவைக ளாலே
யிம்பர்தங் களுக்காய் முன்னே னமைத்தபே ரெழின்மின் னார்க
ளும்பர்மே லுலகந் தன்னி லொருதா முமிழ்ந்தா ரென்னில்
வம்பறு நரந்த வாசம் வருமுடி வளவு மாதே. (உந)

எழுபதி னுயி ரம்பூ ணிணைப்பல பலவி கற்ப
மெழுபதி னுயி ரங்கோ பிடைபுனை தாயில் வருக்க
மெழுபதி னுயி ரம்பொய் யெழில்தன் வகைக்காண் மூனே
யெழுபதி னுயி ரந்தா சுருவிகின் றிலங்கு மாதே. (உச)

தெருட்டிடு விறைவைத் தேடுந் தெள்ளியோர்நோற்ற நன்கின்[று
பொருட்டிடு லார்க்கும் பொற்பின்பொருவில்பொன் னுலகின்மின்
னுருட்டிடுன் மேன்மைபொங்கு மொளிவிலஞ் சனக்கண்வாளான்,
மருட்டிடு லுலகின் மாக்கண் மயலிறு.லுயிர்தீ வாரால். (உரு)

கடுவெனும் வேற்க ணல்லார் கவரித மொழுகுந் தேற்
றுடுவுயர் ககனி னின்றே ருதுசிறு திவலை மூன்னீர்த்
தொடுகட லதனின் வீழ்ந் தேயுவர்ப் புலவு நீந்திப்
படிகதை யமுதந் தோன்றும் பயோததி யாரு மாதே. (உசா)

இன்னவா யமைந்து வாய்ந்த வேந்திழை யரம்பை நல்லார்
பொன்னவா மூல்கு சேரும் பூவையர்க் கடியா ரென்னி
லன்னவ ரழகென் சொல்லோ யாவர்க்கு மாசி யார்தம்
மின்னவி ரெழிலென் சொல்லோ விளம்பலாந் தகைமைத் தாமால்.

ஈறிலா வனைத்து தோழர்க் கென்னவின் றொளியிற் றெள்ளி
மாறிலா தமைத்துச் சூட்டு மறியமோ டாசி யாதம்
பேறிலா கியமேற் சொர்க்கப் பிருதவு சதனிற் செல்லக்
கூறுல்ஹீ னவர்க ளெல்லாங் குலாவியே வருவார் மன்னோ. (உ௮)

பிடியென வாச/வன்னப் பேடெனத் தனவெற் பாலே
கொடியென விடைதள் ளாடக் கொழுஞ்சுட ரணியின் செய்ய
வடியினிற் சதங்கை நூபு ராதிகள் கலித்துப் பொங்க
வடிவெலாந் திரண் டிருந்த மங்கையர் நடந்து செல்வார். (உ௯)

வாகையார் நபிக்குச் செல்வ மனைமென வளவி லாத
வோகையங் கடலின் மூழ்கி யொளிரிழை முலைகள் விம்மப்
பாகையும் பழிக்கு மின்சொற் பைங்கிளி யரம்பை மாதர்
தோகையின் மயில்க ளென்னச் சோபனங் கூறிச் செல்வார். (௩0)

சென்றபின் னனைய ரெல்லாந் தெரிவையர்க் காசி யார்தம்
மன்றலங் கமலப் பொற்றாள் வணங்கியொண் மணியிற் செய்த
மின்றவி சதனிற் சொர்க்க மேடையி னிருத்தி யாதி
முன்றரு பூண முற்று முயலுறத் தெரிந்தெ டுப்பார். (௩௧)

இருதவி சருங்கா தோங்கு மேந்திழை யரம்பை மாதர்
பிருதவு சென்னும் சொர்க்கப் பெண்ணணங் கிருவர் தம்மைத்
தருதனி சதனில் வைத்துத் தருமணக் கோலஞ் செய்தற்
கருதவி யுடமே பெற்ற காசினின் மைந்தர் கேண்மோ. (௩௨)

கூறுல்ஹீன்கள் சிறப்புப்படல - முற்றிற்று.

ஆகப்படலம் - உ௯ - க்குத் திருவிருத்தம், ௩௩௭.

# ஆரியமாலையைச் சிங்காரிக்கும் படலம்

கலிநிலைத்துறை

வல்ல நாயகன் வர்க்கம தாகவே வகுத்த
பல்ல பேதமா மெழுபதி னாயிரம் பணியுஞ்
சொல்லல் லாமொளி யெழுபதி னாயிரந் துகிலும்
வல்ல ருவிருள் பருகிய கதிர்கள்மாண் மிளிரும். (௧)

நீல மும்பசும் பச்சையும் வயிரநித் திலமுஞ்
சால வொண்மணி யாவையும் வகைவகை தரித்து
மூல மன்னிய பூடணத் திரளவை முழுது
ஞால மெங்கணுந் தோற்றுபார்க் கரியவு நகைக்கும். (௨)

அருக்க னெண்ணில வல்லவ னெண்ணில வகலா
நெருக்க மின்கண மெண்ணில நீள்சுடர் செறிக்கும்
வருக்க மெப்படி யப்படி யெனினுமின் வடிவி
னிருக்கு மப்பணி மிக்கொளி வாகவே யிலங்கும். (௩)

பழுதி லாதவன் வல்லபத் தாற்றியே பகுத்த
வழுவி லாவொளி நகைகளுந் துகில்களு மயமா
யெழுதொ ணாதவோ வியமெனு மரம்பைய ரிறைஞ்சித்
தொழுது சூட்டுவார் தோகையர் மேனியிற் சுடர. (௪)

ஆய்ந்த கோடிக மெழுபதி னாயிர மணிவார்
வாய்ந்த பேரிழை யெழுபதி னாயிரம் வனைவார்
சேர்ந்த செம்மணிச் சுட்டியு மிலம்பகஞ் செய்வா
ரீந்த வொவ்வொரு முத்தம்வா னுலகுவில் லெறிக்க. (௫)

சுந்த ரந்தரு நவமணிக் கிரணமின் றலங்க
வந்த ரங்களில் வெயில்விரி யருணனு மழுங்கக்
கந்த ரந்தனி லெழுபதி னாயிரங் கலங்கள்
வந்த ரம்பைய ரணிகுவ ருள்ளக மகிழ. (௬)

கலன்கள் யாவையுந் திருத்துவர் பூட்டுவர் கயில்சு
ணலங்கொண் மேகலை காஞ்சியும் வேய்வரொண் ணகைசேர்

புலன்கொண் மின்மணிச் சரம்பல பதக்கமும் பொருத்தி
திலங்க ளெங்கணும் பளபளென் றொளிசெய நிரைவார். (௭)

கொத்து மாமணி மாலைகள் மரகதக் கோர்வை
தத்து நீலமொண் பதுமரா கத்தினிற் றொடையு
முத்து மாலைகள் வச்சிரச் சரங்கள்வான் முழுது
மெத்துமோரொளி வாகனின் றிசையமற் றிசைப்பார். (௮)

தோளு முன்கையு மங்கையும் விரல்களுந் துலங்க
வாளு லாவிய வாபர ணாதிகள் வனைவார்
காளு மென்முழந் தாளினு மாடகச் சதங்கை
யாளு நூபுர மற்றவு மிடனற வணிவார். (௯)

கைசெய் யாதிறை காரணத் தியற்றணி கலன்கள்
பொய்செய் யாவொளி பொங்கவெப் புலன்களும் பொலிய
மைசெய் யாதணி மஞ்சன விழிப்புற மடவா
ளைசெய் யாதவ னெனவொளி மக்களு வணிவார். (௧௦)

கங்கை மேவிய நபிமணந் தருதிருக் காட்சி
மங்கை மாரிரு வோர்கண்மெய் யொளிகளு மடவா
ரங்கை யாரவே யணியணி யொளிகளு மாதி
புங்க வாரமா மொளிகளுந் தயங்கின போத. (௧௧)

கோணி லங்கிய வொளியினி லாகியே கொடுத்த
மீனி லங்கின ராபர ணாதியால் வியனூர்
தானி லங்கின தலங்கண்மற் றிலங்கின தகைசேர்
வானி லங்கின மற்றவு மிலங்கின வடிவே. (௧௨)

மீதி லங்கிய வரம்பைய ரொளியினை மேயச்
சோதி தங்கிய வாசிய ரிருவர்மெய் தோன்றுங்
கோதில் பொன்களை யிழைகளை யோர்களைக் குறித்தே
யாதி யன்றிமற் றவர்களா லறியுமா றரிதே. (௧௩)

மறிய மாகியா தமைமணக் கோலமே வனைந்து
பிறிதி லாதசீர் மங்கைய ருவகை பெருக்க

வெறியு லாவிய சொர்க்கமெட் டிலுமுள்ளோர் விரும்பச்
செறியும் வானவ ரனைவருள் ளழுங்களி சிறப்பார். (௧௪)

பதிய னைத்துமே மகிழ்ந்திட வவனுழை பயிலுந்
துதிகள் பெற்றமா தவர்களு மரிவையர் தொகையு
மதிதெ ரித்தவா னவர்களு மனைகண்மற் றோரும்
புதிது மட்டிடா மகிழ்ச்சியா யுறுவராப் போதே. (௧௫)

உம்ப ராட்டிறல் செய்யவே யிவணவ னோங்கு
மம்ப ராட்டிய மேனியர்க் கணியன்பார் பணியுங்
கொம்ப ராட்டிய வேங்கைய ரெனவுளங் குளிர
நம்பி ராட்டிமா ரனைவரும் வியப்புற நயப்பார். (௧௬)

காய்ப்பி லாமைய ரன்னைய ரனைவருங் களிப்ப
மாய்ப்பி லாநிலை வைகிய கணங்கண்மேன் மகிழ
மூப்பி லாவிளங் கன்னியர் சோபன முழங்கக்
கூப்பி லாவொளி யோன்றரு மத்தெலாங் குலவ. (௧௭)

காசி லாத்துறக் கத்தினோர் யாவருங் கதிசேர்
மாசி லாப்புகழ் நபிக்குமங் கலமென மகிழ்வா
யாசில் வாழ்த்துவர் சோபனங் கூறுவ ரணியார்
தேசி னுற்றிகழ் மழுங்கலாங் குலவியே திரிவார், (௧௮)

கண்கொ ளாதென வயின்வயின் காட்சிகள் கண்டே
தண்கொண் மாமது நுகர்ந்திடுங் களிப்பொடு தமது
பெண்க ளோடுகொண் டாடுவர் பாடுவர் பிரிய
மெண்கொ ளாதவா னந்தமா யுலாவுவ ரெங்கும். (௧௯)

கறையு றுதவன் செயுமணங் கெழுமணி கலன்க
ணிறையு மேனியார் செழுமணி மவுலியர் நிதமுங்
குறையில் வாலிபக் கொள்கையா லரம்பையர் கூடி
யுறையு மாறுய ரோகைமட் டிடப்படா வுலகே. (௨0)

பொற்க லன்களைத் தாங்குவர் வீங்குவர் புயங்கள்
சொர்க்க மெங்கணு மலங்கரித் திடுவர்பூந் துடை

நிற்கும் வீதிகண் மாடமா ளிகைகண்மே னிலைக
ளற்க வங்கமா மணிச்சுடர் நிறைகுட மணிவார். (௨௧)

ஆர ணங்குறு சுடிகைவா னவருமற் றவருந்
தோர ணங்களு நவமணித் தொடையலுந் தொடுத்துக்
கார ணங்கொளு நபிதிரு மங்கலக் காட்சி
பூர ணங்களைக் காண்கவென் றெங்கணும் பொலிவார். (௨௨)

வானை மண்டிய பதாகையுங் கொடிகளு மல்குஞ்
சேனை யும்மட வார்கள்கொண் டாட்டமுந் திறல்சே
ரானை யுந்திகழ் மஞ்சின்மீ தாசனத் தழகுங்
கோனை யும்மிரு பேரையுங் கண்டுளங் குளிர்வார். (௨௩)

ஆசியா மாரியமைச் சிங்காரிக்கும்படல - முற்றிற்று.

ஆகப்படலம் - ௨௭ - க்குத் திருவிருத்தம் - ௬௬0.

## நபிநாயகமனையாருமுடையணிபடலம்.

கலிச்சந்தத் [illegible] விருத்தம்.

இன்னணஞ் சுவர்க்கமெங்கு மேமகிழ்ந்த காலையிற்
பன்னகஞ் சிறைத்தவள்ளல் பரிவுசேரு மாளிகை
முன்னணிந்த திண்ணைமீது மொய்க்குமிக்கு ளோரெலாம்
பொன்னணிந்த மோலியங்கி பூடணங்க டாங்குவார். (௧)

செங்கை முன்கை வாகுவுஞ் சிறந்தகந்த ரத்திலும்
பங்கையப்பொ ருப்பதங்கள் பன்னுசானு வதனமுந்
துங்கமாத வத்தினோர்கள் சூழுகின்ற வனிதைய
ரெங்குமொய்த்தி டாதபின் னெறிப்பதொத் திருக்குமே. (௨)

விதுவிருந்த வென்றுசொன்ன மீதுசேக ரஞ்செய்வார்
மதுவருந்து மென்றுகிண்ணம் வந்துநல்க மாந்துவார்
மெதுவிருந்த கனிகடாரு விளைவினிய மிசைகுவார்
புதுவிருந்த ருந்தியுண்ட போதஞான மேதையோர். (௩)

மாமதங்கள் பொங்கவே மகிழ்ந்திருக்கும் வேளையிற்
றுமதங்க ளன்றிவான் றாவுபொன்பு ருக்கெலாம்
காமதங்கொ ளாதவள்ளல் கபிகண்மற்று ளோர்கள்பா
லேமதங்கள் வீதியெங்கு மேகொணர்ந்து நிற்பரால். (சு)

ஆநமக்க ளன்பியாக்க ளவுலியாக்க ளனைவர்தம்
மாதருக் கரம்பைமாதர் வனைதுகிற் றிருத்தியே
பேதமிக்க வணிகண்மெய் பிறங்கவே யலங்கரித்
தேதமற்ற பொற்பிழைக் கெனக்களித்து நிற்பரால். (ரு)

வெள்ளமுந்து நதிகளின் விரைந்துசென்று மன்றியே
வள்ளமொன்று மொண்டுகொண்டு வந்துநல்க மாந்தியே
மெள்ளவின் டருப்பழங்க ளுதவமொண் டருந்தியுங்
கள்ளமொன்று வழியினுர் களித்துவந்து நிற்பரால். (சா)

அடிநடங்க டேணிமா ரனைவருஞ் சிறந்தபொற்
படிகளெங்கும் வள்ளலோடு பவனி போத வென்னவே
நடிகமழ்ந்த கற்புரக் கணத்தமைத்த கூன்றெறுப்
பிடிகள்கொண்டு வந்துவானர் பெட்பினங்கு நிற்பரால், (எ)

எங்குமுத்தீமை விட்டுநின்ற வள்ளலார் தமக்குநேர்
தங்குமாத ருக்கு...ந்த ருக்குமவ் வழக்குமேர்
பொங்குசோதி கொண்டுமின் பொலிந்தசெம்பொன் வீதிக
ளங்குலாவ மந்தரா சலத்தைவீ நடத்துவார். (அ)

செவந்தமாளி கைக்குளே செறிந்தமேரு வென்னவா
னிவர்ந்தவால வாரணத்தை நிறைதழைத்த வும்பர்தா
முவந்துவீயி னுற்றபோ தொருத்தலின் சிறப்பினை
யவந்தராத சோதியன்றி யார்தெரிக்க லாகுமே. (கூ)

கபிநாயக மனையாருமுடையணிபடல - முற்றிற்று.

ஆகப்படலம் - உஅ - க்குத் திருவிருத்தம். கூசகூ.

# நபிநாயக மணப்பவனிவரும் படலம்.

சந்தக் கலித்தாழிசை விருத்தம்.

மாறடுத்துவெ ளாசல மென்றுறு மதுமறைதக்
காறடுத்தனை மாறிபு மும்பர்கள் ககனூரி
ஹறடுங்கையி ஹருல வும்படி யெழில்நாணச்
சேறடுத்தனி வீதிகொ டுந்துவர் திரளாவே. (௧)

ஆனைகொ ணர்த்திடு காலையில் வண்டவி னருள்சால்போ
ஹனைபு ரம்பதி காசினி யெங்கணு மகலாதான்
ஊனையி கழ்ந்தெழு மேனியொ ரண்டமு முனைபோதா
மோனைத ருஞ்ஜிபு ரீனட னன்பொடு மொழிவானே, (௨)

என்கணி சம்பருள் கொண்டவெ னன்பனை யிறசூலைப்
புன்கனா கன்றற மெங்குந லன்கொடு புரிவோனை
மின்கணி றைந்திடு தண்டர ளந்தரு விறலோனை
முன்கணி ருந்தக ணங்களி னங்களின் முறையோனை. (௩)

நாயக ரீசவி சாலவு ளத்துறு கசியானைத்
நியக லாசக மாசுறா ரத்துந் திறலானைக்
காயம சாரிகல் குழுமி டத்துங் கவலானைக்
கூயகு மாதை விளைய னயத்தின் குறியானை. (௪)

பச்சிலை யந்தர லற்றம சந்தழை படகாடி.
யச்சிலை யந்தர நிற்குறி யென்றுகை யமைகோவை
பிச்சிலை யென்றவ றிக்கும ணங்குளிரிர் விரகாளைத்
அச்சிலை யென்ற குணக்கட லின்புகு துறவோனை, (௫)

எனஅமொ ழிப்பழ மறையை விளக்கிய விசையோனை
மனதில னுத்தனை பெருமையி னுத்தம வடிவானைத்
தனதென வைத்தவர் தமையினி நிற்புரி தயவோனைக்
கனதிபெ றற்கென அடன்வச னிதெழு கலையானை, (௬)

முந்த விதிக்கு மகிழ்ந்து பொருந்திய முயலோனை
யிந்தை யழைத்தொரு வன்கணி னின்புற விசைவோனைத்
தந்தை யனைக்கு மிகுந்திடு மன்பரு டருவோனைச்
சிந்தை யெனக்கிட மன்றி மறந்தய றிரியானை. (எ)

வாயக லாதுவ மூங்கும றைச்சொலை வழுவாத
தூயக மேவிய ஜின்கட னக்கரு டொலையாத
நேயக லாகா மைந்தர் பிறர்க்குநன் னிறைகூறும்
நாயக மாகு மெனன்பனை யிச்செழு நகருடே. (அ)

பெலமுந் தியவெண் காடக் களிறணி பிடர்மேவித்
தலமுந் தியவங் கவர்நற் சொலின்முறை தவறாதே
பலமுந் தியமைந் தர்கண்முற் றினுநிறை பரிவாக
நலமுந் தியவின் புடனுற் றலவென நவில்வாயே. (கூ)

என்றிறை யின்சொல் வழங்கலும் வண்ஜிபு ரீல்தாமும்
நன்றியி தென்று மகிழ்ந்து தெளிந்துயர் நபியேநீர்
வென்றியி னின்றருள் வெண்கரியின் பிடர் மிசைமேவிப்
பொன்றி மறைந்திட வின்றிய மின்பதி புகுவீரோ. (க0)

என்னவ னுப்பமுன் னளாழியானரு ளியவேவற்
சொன்னவை கைப்படி ராஜுத மேவிய துதியாளர்
செந்நெல் வயற்பொலி ரூமதி னுநகர் திசன்கோமா
னன்ன வனத்தல வாசல் மீதுற வணைவாரே. (கக)

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

எண்ணிறந்த கடோரா னுந் தண்ணவனு மின்கணமு
மெய்ந்த மேரு
நண்ணிவந்தா லெனப்பிறங்கு மகுமூது நால்வாய்பா
லணுகி யாதி
தண்ணிறைந்த பொற்சிறைசேர் வாருஜிபு ரீலாற்
றடம்புனி செங்கைக்
கண்ணிறைந்த வங்குசத்தாற் கத்தனரு ளாற்பிடிப்பார்
அடிதீ னன்றே (க௨)

தேன்படிந்த மொழியிறசூல் திருமேனி தனைப்படரிக்குந்
தெருட்சி தன்னால்
வான்பரிந்தாங் கெனப்பிரிய வாரியிடை ஆழ்ந்தனென்ன
மடிவி லாத
கான்படிந்த வியனுலகோர் கண்ணடங்காக் காட்சிதரு
களிசல் யானை
தான்பயந்த வாறுகண்டாங் கெழுந்தருள்வ ரெம்பிறசூல்,
தங்கி மாதோ (௧௩)

முன்னுதித்த படைப்பெவைக்கு முன்னுதித்த நபியெவர்க்கு
முதல்வ ராகப்
பின்னுதித்துக் கொத்தினையிற் காணாத காரணங்கள்
பெரிது காட்டிக்
கொன்னுதித்த குயிர்க்களையைக் கொய்துகற்றீன் பயிர்விளைக்குங்
கோமா னாதி
மன்னுதித்த திருமைதங்கு நபிகள்சிகா மணிவருவார்
மகிழ்வின் மாதோ. (௧௪)

உகமுதா கடுங்காலென் றிடுங்கோப மடக்கிவெள்ளி
யோங்கல் போன்ற
மருமுதா பிடர்மிசையே காந்தியுமிழ்ந் தொழுகுசுறை
மறுவிக் கூட்டின்
மிகுமுதா வார்வுதெளி வானவரோத் தியவொளிவு
மெத்தை மீதி
விகமுதா சைவிளக்கு மெம்மிறசூல் விற்றிருப்ப
வெழுவ ரன்றே. (௧௫)

பிறேடவ நபிமெழுனும் விந்தையிரு வருந்திரையுட்
பின்ன ரேகக்
கோடேறுங் கினிமஞ்சி விருந்தருடிக் கூடதனிற்
கோமா னேற
விடேறு மன்னையிரு வருமிருபா விருக்கைகளின்
வீற்று வைக

விடேறும் மத்தநகளு மருப்பினு சனங்கண்மிசை
    யேறு வாரே. (கசு)

அறிவுசெறி குரிசில்வைகு மஞ்சக்கூ டதன்வலப்பா
    லதிலே யிம்ருன்
மறியமம்மா வினிதிருக்க மற்றிடப்பா லாசனத்தின்
    மசாகு செல்வப்
பொறியெனுந்தா யாராசி யாவிருக்கப் புறம்போதும்
    பூதர் காணு
நெறியிருக ணுதற்செவந்த மணித்திரைபஞ் சாப்பாங்கர்
    நிறைகு வாரே. (கஎ)

அருமறையோ ராசனத்தி லிவாவுல்ஹம்த தெனுங்கொடியு
    மன்றி யோர்பாற்
றிருமதிய மிருக்கையிலி வாவுல்சுக்கூ றெனும்படங்குஞ்
    சிறந்த சீர்த்தி
பொருவறுலி வாவுல்பனீ லெனும்விடங்க மாகியார்
    புறத்துஞ் சேர்ப்பார்
மருவலிலா றினுவாணி யும்பர்மிகு பலசிறப்பும்
    பாவிப் பாரே. (கஅ)

நற்றவஞ்சேர் சொர்க்கநகர் மாட்சிமையா யாளாசர்
    நயந்து வைகுங்
கொற்றமிக்கோ ணமைத்தகிளிக் கூட்டுகளி னிறுவுமொளிக்
    கொடிக டோற்ற
மற்றமரூங் தனிமுதல்வன் மகிழ்ச்சியா மாடம்பெயங்
    தகமே னின்று
சுற்றவசைந் திடுமுபய சாமரைகள் போலுமாங்கன்
    றுலங்குந் தானே. (ககூ)

பனைகாம்ப ரிருக்குஞ்சுமை போராளி கடக்குமன்னர்
    பவனி போதுங்
கனகாஞ்சேர் கிளிக்கூடு களினிறுத்தும் பொற்கொடிகள்
    கவினுந் தோற்றந்

தனகரிய பெரியதுய்யோ னியுமா சாயமெல்லாந்
தாங்கி யார்க்குந்
தினகரன்போன்முடியமரர்கொடுத்திடுங்கைவினைபோன்றுஞ்
சிறக்கு மாதோ. (உ0)

ஆதியிற சூல்நபிமார்க் கரசர்மக்க மாநகர்வா
ழண்ணல் போதுங்
கோதிறவ ளக்காடக் குஞ்சரச்சேண் மஞ்சிமிசை
குலவச் சேர்த்துஞ்
சோதிவெயில் விரித்திமைக்குங் கிளிக்கூடு களின்கொடிகள்
சுடர்விண் போற்றும்
வீதியுவ னுலகமண்டும் வெள்ளமாந் திரள்கள்பெய்யு
மேக மேலும், (உக)

வண்டலம்பூந் தேங்கமழுந் தருக்கமா விகைதிகழு
மறுவின் மார்பர்
விண்டலத்து லாவுகரி மேற்கிளிக்கூ டுகளின்கொடி
விளங்குந் தோற்ற
மெண்டலங்கள் புகழ்மேரு வெனுமரசன் சிகரமிசை
யிசையச் சூடுந்
தண்டலத்தில் வில்லுமிழ்ந்து மினியதுர சினிகளென்றுந்
தயங்குந் தானே. (உஉ)

குன்றமுட னுணாபேசுங் கோமானு சனத்தனந்தங்
கூறுல் ஹின்கண்
மின்றருகற் றையங்கவரி கால்செய்வட்ட மசைப்பவுயர்
விட்பூஞ் சோலை
மன்றன்மக ரந்தந்த கறுத்தண்பூவு நானமம்பர்
மாபம் வாரித்
தென்றலசைத் திடக்கிரணக் கொடிகள்குடை யுந்தயங்கச்
சிறப்பிப் பாரே. (உங)

பைங்கிரணப் பொற்பலகை மிசைக்குரிசின் றொகைதரிக்கற்
பாலார் முற்றக்

தங்கிரவி யெனவெயில்சேர் பஞ்சணையுந் தலையணையுந்
தயங்கச் சேர்த்திச்
செங்கிரண நகையுமின்பப் பற்பலவொப் பனைவேய்ந்து
சிறப்பப் போத
விங்கிதமா மகிழ்வுறுவார் வேதியரும் மகத்துகளவ்
விருக்கை மீதே. (௨௪)

தருணவெயி லுமிழ்தொட்டிப் பற்றுபா காஞ்ஜிபுரீல்
தகைசேர் வெள்ளைக்
கருணியதன் கழுத்துறுவார் மீக்காயில் இளிக்கூடு
கட்டி னுவார்
வருணமளப் பிடப்பெரியோன் திருத்தோழர் தம்வழியும்
மத்தோர் பேறைக்
கருணைமழை பொழிவிழியா ளேக்கியச்சீ ரளித்தோனைக்
கருது வாரே. (௨௫)

சீருயர்மக் காவிறஞல் தங்கவிறை யோன்கிருபை
செறிய வோங்கும்
பேருவகை யொடுபகரச் சிபுரிவீ லங்குசத்தாற்
பிலத்தின் ருக்க
மேருவரை யாவதென்ன மகுமூது வடிவெபயர்க்க
வினாவாய் வெற்றே
சாருவர்வா கனத்தின்மிசை றிலுவாணி வசமவுலி
தயங்க வன்றே. (௨௬)

எல்லுலவு சுவர்க்கவா னகத்தில்றிலு வானமர
ரினிதிற் போத
மல்லுலவும் வரவலது புறத்தொளிவு திரண்டொழுகு
வாறு போலச்
சொல்லுலவு மறுமுற்று காற்பதுகோ டிக்குழாம்
சூழ்ந்து செல்வார்
செல்லுலவு மகவிடத்து மாக்கள்பயந் தனித்தசெல்வச்
சிறுவர் தாமே. (௨௭)

கூறும்றிலு வானவர்தம் மிடப்புறத்து மின்பிரபை
குழுமிச் செல்லு
மாறுவகை பொங்கவிலாங் தார்ப்பரித்துத் திண்டெழுவா
ரவனி மாக்கள்
வீறுடனே பெற்றெடுத்த மென்குதலை போற்றிறுவர்
விளம்பி னம்மா
தேறுமறு நூற்றுநாற் பதுகோடி யாமெனவுந்
தெரிந்த நூலோர். (௨௮)

மறுநூற்று மாறடக்கு மகுமூதா மால்யானை
வள்ள லார்தேந்
தெறுநூற்று மாறடக்கு மகுமூதா மால்யானை
செல்லப் பின்னே
யறுநூற்று வாளணிகள் கதிருமிழச் செலும்றிலுவா
னும்பர் முன்னே
யறுநூற்று நாற்பதுகோ டிக்கிரீட மணித்ததலை
யமரர் சார்வார். (௨௯)

வாகனங்கண் டிசைபொலியார் சுழிகைபின்செய்றிலுவானிவ்
வானோர் முன்னே
யேகனருள் பெருமுஹற்ற பானமலக் குகடிரரு
மிழைக டாங்கிப்
பாகனங்கு நடத்தியவெண் பகடுபின்னே யேகியசீர்
பாழி மேருப்
போகனங்களுறப்பிறகேபொருப்பெனவையுந்திரண்டெழும்பப்
பொலிவ தாமே. (௩௦)

காந்திசெறி யிழைவயங்கக் கவின்மணிமா மகுடமுடி
கதிரிற் றோன்ற
வாய்ந்தறிலு வானவர்பின் னுலகமெலா மீன்றளித்த
பாவா ஆகம்
வேய்ந்திடுபென் மணிச்சுடிகை பளபளென வெயில்விரிக்க
மின்பூண் டோன்றப்

பாய்ந்திடுபல் கதிர்பொருந்து மொளியினால் வாசியின்மேற்
    பரிந்து செல்வார். (௯௧)

முத்தெனவின் மாதர்செய வுலகமோம் புரிராஜ
    மோடி யாகச்
சுத்தகூ ருளியருண் டாடிவரச் சொலுத்தான
    நீதர்கை யின்பின்
பொற்றேரின் மணித்தேரி னிவுளிகளின் மிசைபொலிந்து
    பூண்வாண் காந்த
வுற்றேமா மணிமகுடச் சுடர்முறுச லின்கள் திரண்
    டொழுகு வாரே. (௯௨)

பூணரும்பச் சிலம்பொலிப்பச் சிற்றடியார் பணிகேட்டுப்
    போதப் போத
யாணரும்ப தாங்ககளும் புடைநெருக்கச் செலுமிறந்
    லாளேனர் பின்னே
காணரும்பின் மணிச்சுடிகை கதிர்கால மெய்யிலணி
    கலன்கள் மின்ன
மாணரும்பர் மகிழுவெள்ளி வாய்ப்பரிகண் மிசையினடி
    மார்கள் சொல்வார். (௯௩)

சொன்முறையே தேர்களிமார் டின்னமொழு பதாதிகளுஞ்
    சிறந்த பூணும்
புன்முறுவல் நகையமதி முகமுமிலங் கிடமுடிகள்
    பொலிவான் செய்ய
மின்முறுகு சிலம்பொலிப்ப நடைமிடு கொய்யுளைகண்
    மிசையென் னொன்று
வின்முறைமே தருமவுளி யாக்கண்முபி லீமகளெல்லா
    மேகு வாரே. (௯௪)

இவ்வவுளி யாக்கள்தொடர தாக்கள்மு மின்கண் முற்றூழ்
    ளியல்போர் பின்னே
யவ்வவுல கொளிர்கதிர்பொன் மணிமவுளி யணிதுகில்கள்
    பாகம் தோங்க

செவ்வவுலம் பொருதடந்தோ ளிறசூலமார் தஃகம்விழி
செல்வ ரெல்லாம்
தவ்வவுல விடுகவன வொளிவுபுறக் கதிரேறி
நடத்து வாரே. (௫௫)

ஆமொளியாங் கொய்யுளையின் மிசைமேவி வரும்பாவா
ஆதந் தம்மை
வாமொழியா மறைபயிஸ்ரீ மிறசூல்க ளபிமார்கள்
மற்றுள் ளோர்கள்
பாமொளியாஞ் சுவற்பரியின் மிசைமேவிச் சூழ்ந்துநிசா
பதிகூண் டென்ன
மீமொளியா ராசமொடி யாயமொடு மொகுமொகென
விரைவிற் செல்வார். (௫௬)

நீதமலி யாதுசெல்லுஞ் சான்றோர்கு ழாங்கணெலா
நெருங்கத் தானை
ஆதமலி லிஸ்லாமங் கமர்ந்துசெல ஹவ்வாபிறகே
யார்க்குந் தாயாம்
போதமக லாதஸைவ்வா கஸ்தூரி யம்பரிவை
பொருந்தி யார்க்கும்
சீதமக லாதபெட்டை யொட்டமிசை ஜினிக்கூட்டின்
செல்வ ரன்றே. (௫௭)

பொற்பூரு மொளிவுபுறக் கதன்மிசைநந் தாதைமுன்னர்
போக வன்னே
விற்பூரு கணையிழிசெவ் விழியிதழ்மின் னிடையான
மின்னு ரோடு
நற்பூதி மணியணிகள் தயங்கயா வரையுகல்குக்
தாயார் ஹவ்வா
கற்பூரத் தாலமைத்த கூன்றுறாப்பொன் மிசைகூட்டின்
கவினச் செல்வார். (௫௮)

ஊமந்தசெல்லா முன்போக்கிப் பின்பேகண் களித்துலக
மாதர் செல்லச்
சந்தாஞ்சேர் கருப்பூரப் பெண்டொறுவின் கிளிக்கூட்டின்
சுடர்பூண் மின்னைக்
கந்தரநேர் கபிகடுணை வியர்கள்ஹுவ் வாவழியோர்
காத மின்னு
சந்தரமின் னொணப்பூண மனிரவொட்டைப் பிடிமிடர்கூ
னதனிற் சொல்வார். (௩௯)

கத்திகைசேர் குழன்மடவார் யாவரும்ஹுவ் வாயிறகே
கலன்கடாங்கிச்
சித்ரவொட்டை மிசைக்கூட்டிற் செல்விலா டவர்யார்க்குந்
தெரியா வண்ணம்
பத்தியிவர் கட்காட்சி யுறச்செவந்த மணித்திரைப்பஞ்
சரப்பால் வெய்வா
சத்திகையெங் கணுமகுழ தாளையின்மின் னொளியெனவு
லாவு வாரே. (௪௦)

கிளிக்கூட்டின் மூன்றமுருங் கெம்புரிக்குஞ் சரக்கோட்டிற்
கிளர்வோர் வாறுங்
தெளிக்கூட்டு மகுழமுது நடையெழிலும் மின்வானோர்
திரளின் பொற்பின்
மனிக்கூட்டு மாதமுடன் புறம்போதுங் குழுவணங்கு
மடந்தோ ரோக
வெளிக்கூட்டுஞ் சிர்காண வெத்தனைகோ டிகள்வேண்டும்
விழிகடானே. (௪௧)

மீன்காட்சி விழியார்மால் கிரமெனுலியத் தடிகுயிர்
வெந்து மண்மேற்
றுன்காட்சி காணவென நடத்துவள ரச்சிறப்பை
யெத்தனையோ வென்றால்
நான்காட்சி காணவென வழியாத பெருவாட்டைக்
நாயன் பொன்னூர்

கோன்காட்சி வதுவைநடத் திடுஞ்சிறப்பிப் படியெனயாங்
கூற லாமே. (௪௨)

சந்தக் கலித் தாழிசை விருத்தம்.

பம்பைபேரிபணை வந்தடாரிதவில்
பாசமங்கல முழங்கநே
ஹம்பொன்மாளிகை களின்கபாடவெளி
யலைக டண்டொலி கறங்கநீள்
வம்பருதொளிர் சுணங்குலாவுமுலை
மகளிர் பண்களதி ரைங்கவே
கும்பமாகிய கதம்ப மேனியினர்
தவள சிந்துர மொதுங்குமோ. (௪௩)

குசைநெடும்பரிக ளிரவியென்னுருளிவு
குதிகொ டண்டிகைகள் சிவிகைதேர்
வசையிகந்தொறு வனமுமெண்டிசையு
மடம டென்றுவரி னுலவுதே
ரிசைநெடுங் கவிகை கவரியொண்பரிசை
யிலகுதன்கொடிகள் செறியவே
நசைதருந்தவள விபமதன்பிடரி
நபிகள் சிங்கபினி அலவுவார். (௪௪)

ஆரமுந்துமணி மார்புமம் பொனணி
யார்தடம்புயமு நீணிலா
வீரமுந்துகர சோமனுந்தருவி
னீர்செழுங்கரமு நேயமே
கூரவந்தண்விழி பாதமுங்கனக
கோலமேபெருகு கோடுபோ
லேரிணங்கமகு மூதுமஞ்சிவிற
லுவிதம்பெறவு லாவுவார். (௪௫)

நடனமிட்டுவரு குரகதத்தினுயர்
நார்தம்மேற்குடிகை யுலவுபூ

னிடையிமைக்குமொளி யுடனுறக்கதிர்க
ளிலகுபொற்பொழில்க ளெனுமொளி
கடன்முகட்டினெழு வெயில்செய் முச்சுடர்கள்
கடிதுநிக்கதென விடபிசை
படரிருக்கைகளி னடுவிருக்கையுறு
பரிபவக்குரிசி லுலவுவார். (௪௬)

நீர்த்தடந்தனிடை பூத்தசெங்கமல
நீர்க்கருங்குவளை யேய்க்கவேர்
வார்த்தடங்களப மேத்தகொங்கைமட
வார்க்கு மின்புருட ரார்க்குநே
ரத்தடங்குமெழில் வாய்த்திருந்தமையி
னூர்க்க ளிண்டிரள்கள் போர்த்தவான்
சேர்த்தடம்புயரு ளாப்புருந் தெருவர்
தேக்கு செம்பொனகர் வாய்க்கணே. (௪௭)

ஆர்கலிப்பரவை யோடுகட்பவிணை
யாருநற்றவர்க ளோடுசா
ஊர்கலிப்புரவி கூவிரத்திரத
மோலமிட்டதொழு யானையு
மேர்கலித்தகயி றுயபொற்கயிறி
னேதொடுத்தொளியி னூடுமுன்
வார்கலிக்குமகு மேதுமுயவதின்
மாதவக்குரிசி லேகுவார். (௪௮)

மீனமுகப்புகர் தவளவுச்சமுறு
பகடிணக்கமுற முதுகின்வார்
நீனமுகக்களிக ளுறுவிசித்த நகை
நளியிருக்கைகளி னடுவிலே
வீனமுகச்சசியு டையநற்றினவரும்
வனிதையர்க்கரசி யிருவரு
மினிதினுக்குவகை பெருகு பொற்புலவு
நிறைதழைத்தரசி புலவுவார். (௪௯)

முற்புராதனமு ருப்படா வொளியின்
முத்ததாகவரு நட்பினர்
பொற்புலாவுமொரு குப்பி மீதினுயிர்
புக்குளாருயிர்கண் மொய்த்தபோல்
வெற்புமேருவின்ம ருப்பின்மானவர்
மிகுத்த கோடிதிரண் மொய்ப்பவே
கற்பின் மாதரொடு சொர்க்க மாநகர்
களிப்பவேயினிது சுற்றுவார். (௫0)

கலிநிலைத்துறை.

ஆனெடும் பருமிதத் துளைக்கை வேளப்பின்
றானெடு மூர்த்தியிற் சங்க வெள்ளமேற்
சேனெடு புலவருந் திரண்மற் றோர்களும்
வானெடும் பொன்னகர் மறுகி னெய்துவார். (௫௧)

எண்ணிலா மவுலிகள் சுடரொ ளிர்த்திட
வெண்ணிலா வணிகல னிழல்நி லாச்செய
வெண்ணிலா வணிதுகி லெழின்மின் காலவே
யெண்ணிலா வொளிகள்பா ரெங்கு மீண்டுமே. (௫௨)

வானமுங் கடல்களு மாட கூடமுந்
தானமும் பூந்துணர்த் தருவின் சோலையு
மீனமில் கனந்திரண் டெழுமவ் வாறெலா
நானநன் றுகளெழு நறை யெழும்புமால். (௫௩)

வசந்தன்வந் துலவிட மாட கூடங்க
ளிசைந்தபொற் கதவங்க ளிணைக ளின்றியே
யசைந்திட வனந்தவாக் கியங்க ளாங்கென
நிசந்தர முழங்கிடு நிலைகண் மண்டவே. (௫௪)

முரசமுந் திமிலையு முழவும் பம்பையு
மிசைசெய்திண் டிமந்தடா ரியுமி டக்கையுங்
குமைசெயுங் கடல்களு மிடியுங் கூடியே
வரிசையின் முழங்கல்போன் முழங்கும் வானெலாம். (௫௫)

காளமுங் காளையுங் காளா சின்னமுந்
தாளமும் வீணையுந் தம்பு ராதியு
மேளமு மென்னமே கதவ மேவிய
வாளமந் தரநிலம் வாய்வ ளங்குமே. (௫௬)

விளைமது நதிகளின் மென்பு னோதைக
ளிளையவ ரிரக்கமா யிணைக்க பாடங்கள்
வளையமற் றொலிகண்மந் தளமத் தாளமாய்க்
கிளையொடு கூடியே கீத மாற்றுமால். (௫௭)

பணிசெயு மடந்தையர் பரத மாமுறை
தணிவறு நாடக சாலை யாடவே
மணிதிக ழிழைசில மாதர் பாடியே
யணியணி யாய்வீணை யாடிச் செல்லுவார். (௫௮)

கொவுரிமங் கையர்கள்கொண் டாடு மாடங்கள்
நவுரிபம் பைகளெனு நாடு நாதமும்
பவுரிகொள் பரியினோர் பார்க்கும் பாரெலாஞ்
சவுரிய விசை திருத் தம்மனைச் சாருமால். (௫௯)

முடியிடை யிடைந்திடப் பாரக மொய்த்திட
வடியிடை யிடைந்திட வணிசி றந்திடக்
கொடியிடை யிடைந்திடக் குழுமிச் சேணொடும்
படியிடை யிடைந்திடப் பரிந டத்துவார். (௬௦)

மட்டிடா விமானமு மணிப்பொற் றேர்களும்
பட்டிடாச் சிவிகையு மணியின் பாண்டியு
மட்டிடாப் புறக்கொடு வருந்தொ ழுக்களு
மட்டிடா மறுகெலா மலிந்து பம்முமால். (௬௧)

வானவ ரெண்ணில மகுட மெண்ணில
வானவ ரணிகளும் வடிவு மெண்ணில
மானவர் மிசைமிசை வடிவு மெண்ணில
வானவா டொளிவுக ளாக மண்டுமே. (௬௨)

கவின்மணிக் கிரீடமுங் கவின்செய் பூணமுந்
சவிமணிக் கோவையுந் தயங்கு சோதியு
மவிரொளி யங்கியு மழகுந் தாங்கியே
நவிகள்பொன் புருக்கின்மே னடத்தியேகுவார். (கூங)

தன்னவ னென்முகந் தயங்கப் பூணிழை
மின்னவி ரனந்தமீ னெனவி ரிந்திட
வண்ணவா கனங்களும் வான ரீட்டமுங்
கண்ணக னிடமெலாங் கடலென் றூர்க்குமால், (கூச)

குழுமிய வலகிலாக் குரவை நன்னிடை
விழுமிய வலகில்பொன் மேரு வூர்ந்தெனக்
கெழுமிய வமரருங் கிடக்கை மைந்தரு
மெழுமிய வல்லெலா மீண்டிப் போதுவார். (கூரு)

மாடம தொளிகளு மணியின் காந்தியு
மாடவர் சேகரத் தணங்கு வானவர்
பீடமர் சூழிகைப் பிறங்கு மேன்மையுந்
தேடருந் திசையெலா மொளிசி றக்கவே. (கூசா)

ஈகையை யுடையவ னளிக்கு மெவ்வனத்
தோகைய ரழகையு மருகி லவ்வவர்
வாகையு மண்டெலா வரிலவ் வோர்பெறு
மோகையு மடங்குமே வும்பர் சேனைலாம். (கூஎ)

ஊர்திக ளழகையோ வுற்ற மாதவர்
சீர்திக ழழகையோ திண்பொற் றேண்மிசைத்
தார்திக ழழகையோ தாங்கு மொள்ளிழை
யார்திக ழழகையோ வறைய வேண்டுமே. (கூஅ)

நோக்கிய திசையினு நடங்கு மின்கணந்
தாக்கிய மாடமச் சாள ரத்தினுந்
தூக்கிய பன்மணித் தோர ணத்தினும்
பாக்கிய வொளியிருற் பவனி காணுமால், (கூகூ)

எல்லையி லாவொளி யெறிக்கு மின்களுந்
தொல்லையின் கதிர்களுந் தொகையிற் சோமனு
மொல்லையி னடிக்கடி யொருங்கு போதலால்
வல்லையி னவணைம் மறுகு தோறுமே. (௭0)

கமைத்தரு நயிதிருக் காட்சி கண்ணிரண்
டமைத்தலி னிமைப்புமே லவர்வெண் டல்லவோ
சமைத்தபொற் பதியிலார் தமக்கு நோக்குதற்
கிமைத்திடா நாட்டமங் கியற்று கின்றதே. (௭௧)

அணங்குறு பொற்பதி யதிலு லாப்புகுங்
கணங்கண்மிக் கோர்கடங் காட்சிய கம்பிய
பிணங்கிய பொற்றக டிழைத்த மாமணி
குணங்கொள வழுத்திடுங் கோள தாகுமே. (௭௨)

தார்புனை யசைந்திடத் தன்ன ருற்றுமென்
மார்பிடை நகையணி மணி யுமிழ்ந்திட
நேர்படு முந்திவெண் ணில வியிர்த்துபொன்
னூர்புடை சிறந்திட வுலவு வாரரோ. (௭௩)

குலவிய கருப்புரக் குன்றொ றுக்கண்மே
னிலவிய மணியினு நிறைந்த சோதியாய்த்
தலவிய சவரவர் தாரை வாள்விழி
புலவிய மார்பொடு கோளுந் தீவரால். (௭௪)

துப்புறழ் வாயையுந் துணைப்பொற் கொங்கையுஞ்
செப்புறு மொழியையுந் திருமு கத்தையுங்
கொப்புறு குழையையு முள்ளங் கூர்தர
மெய்ப்புறு கடைக்கணா னோக்கி மேவுவார். (௭௫)

கொங்கையிற் சுணங்கினைக் கோல மேனியைச்
செங்கயன் மருட்டிய திறனைக் காந்தள்போ
லங்கையிற் செண்டினை யவர்க ளிப்பினைப்
பங்கயச் சிறியசெம் பதத்தை நோக்குவார். (௭௬)

அண்ணறம் மழகையு மாச னத்தையுந்
தண்ணமைக் கிரியபூந் நவளக் கோட்டின்மே
லெண்ணறுந் தவளாயு மிருக்கை தன்னையுங்
கண்ணறு நோக்கியே களிப்புப் பொங்குவார். (எஎ)

கண்டிகைச் சோதியுங் கலன்க ட்சோதியும்
விண்டிகை முழுகினும் வெயில் விரித்திடத்
தண்டிகை சிவிகைதே ரிவுளி தந்தியின்
ளெண்டிகை யடங்கலுந் தெரிய வெய்துவார். (எஅ)

மாகமண் டியபடங் குகளும் வாளமு
மேகமண் டியபொன் விமானத் தேர்களும்
பாகமண் டியநிறை குடமும் பாவையு
மேகமண் டியதெரு வீதி யெய்துவார். (எகூ)

மாட்கிகொ ணமியல்லா வரும்பொன் வீதியிற்
சூட்சியின் வானவர் சூழ்ந்து தத்தமில்
லாட்சியின் மிகவினை யாடுங் கோமளக்
காட்சியின் படியுள்ளோர் கணங்க ளாவரே. (அ0)

நாந்தமும் பளிதமு நறைகொ ளம்பரும்
பாந்தசந் தமும்பனி நீர்க லக்கியே
சாந்தரு சிவிறிக ளேந்திக் கண்ணெலாஞ்
சூாந்தவக் கணங்கண்மேற் றூவு வாரரோ. (அக

தரிசிடு நூபுரச் சதங்கை சீறடி
வரிதெரி கயல்விழிக் கௌவுரி மங்கையர்
தெரிசன மலிதிரு வீதிப் பண்ணைவா
யரிசன நீர்விளை யாடு வாரரோ. (அஉ)

செழித்தவங் கத்திற சூலுந் தேர்ச்சியோர்
வழித்தரு கணங்களு மற்றை யோர்களு

மெழிற்றிகழ் தரப்பொலிந் தெரு மாடெலாங்
கழித்தகஸ் தூரியுங் கலவைச் சாந்துமே. (அங)

வருக்கமா மணிசெறி மாட கூடமுந்
தெருக்களுந் தென்றலந் திகழு மந்தரத்
தருக்கனின் சுவைக்கனி தகைமி னல்கவே
செருக்குற வார்ந்துலாச் செல்வர் செல்வரே. (அச)

தண்ணுமின் றேமது நதிக டன்னிடை
கிண்ணமென் னிலவர் கிட்டி மொண்டுமொண்
டுண்ணுமி னுண்மினென் றுதவ நங்கியே
கண்ணக னிடமெலாங் களிப்பொ டெய்ப்பரால். (அரு)

கலிச்சந்த விருத்தம்.

புதுமென்கனி தின்று புனற் பிரச
மதுவுண்டு மதங்கண் மலிந்திடவே
விதுவென்று விளங்கொளி வீதி யெலாங்
கதுமென்று நடத்துவர் கற்கிகளே. (அசு)

வம்புக்கிளி யப்புள கித்துமணிக்
கும்பங்க ளெனத்திகழ் கொங்கையிரு
ளம்புஞ்சிலை யுங்கணை யுங்கொட்டர்த்
தெம்பங்கிக லென்றெதி ரேறுவரால். (அஎ)

முலையானைகள் பாய முடிக்குவர்கண்
வலையாலும் வளைப்பர் மருளர்புயந்
தொலையாவிழி யம்பு தொடுப்பர்மனை
மலையாதவர் தம்மை யருக் குவரே. (அஅ)

தண்ணம்பெரு காளையர் தம்புயமேல்
வண்ணம்பொலி செம்மணி மாலையின்றூர்
கண்ணம்பு துளைத்திடு காயமதிற்
புண்ணம்புன லென்று புதுக் கிடுமே. (அகூ)

வில்லுங்கணை யுங்கொலை வேளுமமை
கொல்லுங்கடி தென்று கொடிக்க னல்லார்
சொல்லுங்கய மத்துவ நொந்து சிவந்
செல்லுங்கடி வீதி செறிந் திடவே. (க௦)

புயலோ டிகல்கின்ற புரிக் குழலார்
மயலோடு மணாளனை நோக்கியகண்
கயலோடொளி யார்திரை யாழியெலாங்
கயலோடுவ தென்று கலங் கிடுமே, (கக)

அமலங்குசெய் தாளொளி வாசமொடே
விமலன்குறை வின்றி விடுக்குமின்னார்
தமலங்கு முகங்கள் புயத் தடமேற்
கமலங்கள் கலந்தன காணுமதோ. (கஉ)

சீலங்கள் சுமந்த திருந் திழையா
ராலங்கள் திகழ்ந்த கருங் கணிணா
மோலங்குழு வாமொளி யங்கடலில்
கீலங்க ளலர்ந்த நிகர்த்திடுமே. (கங)

புரிகின்றவர் பொன்னுத லங்கள்கதிர்
சொரிகின்றிற சூல்வரல் கண்ணுறவின்
விரிகின்ற விதுக்கள் விருப்புறவே
திரிகின்றன செவ்வி சிறந் திடுமே. (கச)

தளமார்மர பத்தொடை தாழ்புயனுர்
வளமாநகர் வீதியின் வந்தனனென்
றுளமார்வமொ டொண்புளி னங்கள் சொலிற்
களமாறு சினங்கள் களிப் பனவே. (கரு)

கார்நீழலின் மேவு ஹமிபிறரு
லேர்மேவிய வீதியில் வந்தன னென்
றூர்பாதல முற்று மறைந்து சொலற்
சீர்மேவு சினம்பல செப்பெனவே, (கசு)

கன்னங்குளி ரச்சொல் ஹரபி றகுல்
மின்னங்கவி வீதியி லேகினரென்
றன்னங்கள ஞர்சொலு மஞ்சொலெலாஞ்
சின்னங்கள் பொருந்திசை யெங்கனுமே. (௯௭)

வேலத்திர மேந்தி விரும்பின னீனீர்
ஜோலத்திரள் பொற்குட மேந்திநிரை
யேலத்திகழ் காந்திழை யேந்தியதி
ஜலத்திக ளேந்துவ ராயிழையார். (௯௮)

குயிலோமொழி தாவிய கூர்விழியோ
வயிலோமுக மம்புலி யோமதியோ
மயிலோ வியலென்ற மடப்பிடியார்
வெயிலோடிகல் சாமரை வீசுவரால். (௯௯)

சங்கத்திரை யாழிக டத்தியபோ
லெங்கட்களி யானையும் வேதியருந்
துங்கத்திற லோர்வரத் தோகையரு
மங்கத்திரு வீதி யுலா வுவரே. (௧௦௦)

ஒளியாவிறை நல்கிய வூர்திகண்மே
லொளியாநிறை செவ்வி யுமிழ்ந்திடவே
யொளியார்பதி யுற்றிடு வீதியெலா
மொளியாக வுலாவுவ ரோவறவே. (௧௦௧)

வம்மத்துற வோரையும் வானரையு
மும்மத்துகள் பெற்ற வுவப்பினையுங்
கம்மத்துளர் கண்டு களிப்புளமும்
விம்மத்திரு வீதியின் மேவுவரே. (௧௦௨)

தப்பேதெரி யாதத வத்தினரோ
டிப்பேறுட னேபல னிக்குறவாய்த்
துப்பேநிகர் மங்கையர் தோயகமக்
கெப்பே பறிவை யென்று மகிழ்ந் தெழுவார். (௧௦௩)

நாறெத்தனை பெற்றரு ளுண்ணறிவோர்
விறெத்தொகை மாமனர் மேவிவசத்
தேறெத்து சிறப்புற வேளைகணம்
பேறெத்தனை யென்று பெயர்க்தெழுவார். (௧௦௪)

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்,

இருடாத் தூய சிந்தை யெம்பெரு மான்மக் காவிற்
புருடமே ருவெனத் தோன்றும் புகழ்நபி யிறசூ லுள்ள
மருடாப் பொலியு மூர்தி யதன்மிசை யிபத்தின் பின்னே
வருடமோ ரிபத்தின் பின்னே மாந்தர்க ளுலவிச் செல்வார் (௧௦௫)

வான்றொடு தறுகட் சீற்ற வாலவா ரணத்தின் கோட்டின்
கூன்றொறு வுடனே பேசுங் கொற்றவ ரும்மத் தோருந்
தீன்றொடு நபிமா ரியாருந் திருந்துமவ் வழியுள் ளோருங்
கான்றொடு நகர வீதிக் கண்ணுலாப் புகுவ ரன்றே. (௧௦௬)

வீதிவாய் சென்னி மீதின் வெண்ணிலா விரிந்த வண்ணஞ்
சோதிவாய்ச் சேகரங்க டிலங்கமெய் யணிகள் காந்தக்
கோதிவா யரம்பை மாதர் குலாவிய பவுரி நோக்கித்
தீதிலா யாரும் பொன்னூர்ச் சேணுலாப் புகுவ ரன்றே. (௧௦௭)

மதநெடுந் தடங்கட் கும்ப வனமுலை பவளச் செவ்வாய்
புதுமட மகளி ராங்கே புரியுங்கே ளிக்கை பார்த்து
விதம்வித நடவ் மாவை வீசிவிட் டுள்ளங் கூரச்
சதநிறை களிப்புப் பொங்கத் தனிவினை யாடிச் செல்வார் (௧௦௮)

மல்லுலாந் திணிதோட் டெப்பின் மழவிடை யனையா ரோடு
மல்லுலாந் தகரக் கூந்த லணங்கனார் பலரும் வீதி
செல்லுநா ளொழியாச் செவ்வி திகழ்நகர் போது முன்றம்
வில்லுலாந் தருக்க ளெல்லாம் விண்ணிடை விளங்கித் தோன்றும்.

நெறியிடை யுலக மெல்லா நிற்குமோர் செங்கோ லோச்சி
மறியுடன் வசனித் தோருமற் றுளார் களுமு லாவிப்

பொறியுடன் விண்ணூர் சாலப் பொறிப்புடன் திசைக ளெல்லா
நறிய தண் புனல்கள் பொங்கி நடைகுதி கொள்ளு மன்றே. (௧௧0)

ஏழுவகைத் தோற்றத் துள்ள யாவையு மொருங்கு காத்து
வழுவக நாய காயன் வளங்கெழு மருதின் கீழ்நின்
றெழுமொரு சீத மந்தக் கால்தென் றுலவு கின்ற
குழுவினை வருத்துந் தேகங் குளிர்நறை வீசு மன்றே. (௧௧௧)

வீசின சிறுகா லாதி மேலவன் குதறத் தூற்றுக்
காசறு பனித நானங் கையரிக் கொடுபொன் னூரிற்
பாசமா யுலவு கின்ற பல்விரும் விரைக ளேறத்
தூசணி யேணி யெல்லாஞ் சோர்வறச் சொரியு மாதோ. (௧௧௨)

தென்றல்வந் துலவித் தண்ணந் தேன்களைச் சொரியும் வேளை
மன்றலங் குழல்செவ் வாம்பல் வாயரம் பையர்கண் முற்று
மன்றவ னுலவு மாடு யாவரு முவக்க விண்ட
நின்றநல் விசையி ராக நிகழ்த்துவர் களிப்பி னன்றே. (௧௧௩)

விள்ளுதற் கரிய சோதி விளம்பிய சபுர்வே தத்தைத்
தள்ளுதற் கரிய சீர்த்தா வூதுவே தாம்பர் தாமு
மெள்ளுதற் கிடமொன் றில்லா வின்னிசை ராகந் தன்னு
ளுள்ளுறை நபியைப் போற்றி யோதுவ ரோசை கொண்டே. ( )

இசையுணர் தாவூ தங்க ணியம்பிய ராக வோசை
வசையுணர் நபிகள் கோமான் வாரணத் துடனு லாவுந்
திசைபுகழ் மாந்தர் மென்பூஞ் செவிப்புலத் துண்ட போதே
நசையுடன் களிப்புப் பொங்கி நடந்துட னுலாவு வாரே. (௧௧௫)

தொகையறு குழாங்கண் முற்றுந் தோரண வீதிதோறு
நகையணி நிலவு செய்ய நன்னலத் துடனுண் டாடிச்
சிகைமுகை யவிழ்ய கூந்தற் றிகழ்முகி லரம்பை மாத
ருகைபரன் னடன நோக்கி யோசைகொண் டுலாவு வாரே. (௧௧௬)

கூடிய குழாங்க ளெல்லாங் கூடுபிச் சிறப்பி னோடு
நீடிய மதினம் வாழ்வோர் பிறங்கலா ரணத்தின் பின்னே

கூடிய வணியல் பூணந் துயல்வரச் செருக்குறும
லாடிய நதிபாற் செல்லு மவ்வழித் திசையிற் செல்வார். (௧௧௭)

ஈண்டிய மாந்த செல்லா மீயிருந் சூழ்ந்த வேபோற்
கூண்டுபல் லணைந்தா லூர்தி குலவவே கடலிற் போந்த
வேண்டுளம் விருப்பி னேடு வேளத்தை நபிகள் கோமா
னீண்டிய சாற்றின் கூல நிறைகளை நடத்து வாரே. (௧௧௮)

எழுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

அருஷகுறு சுடனுவணை யளறவனி சயிலமொளி
சலரிவினு முலவு நீரார்
நரலையொடு வைடவன நரர்கள் கணமு நடைபறவை
நவிலு தவளவனை வாரிகால்
வரிசையுட னெவ்வகையு மொரு தரளமணி தருவுதவு
மகிமைவனு மையுமுள தூய்யோ
னருகுகுபி ரிருள்பருகு கதிரொனவில் வுலகில்விட
வுதயம்வரு நபிகள் பெருமான் (௧௧௯)

வம்புலவு குங்கும வலங்கலு மிலங்கணி
வடங்களு மணிந்த புயனுர்
செம்பதும மென்பது மயங்கிட நடந்தடி
தெரிந்திட வருஞ் சரணினு
ரம்புலவு செங்கணிரு கும்பமென வம்மையு
மடர்ந்தெழுபு கொங்கை மடவார்
சொம்பொடு புரிந்தபர தங்கள்பல கண்டுவகை
துண்டவொளி வென்ற புருவார் (௧௨௦)

தருகுறைறவஷி யங்குலதி லகமொருவன் முன்புபெறு
தகையமட மங்கை யெனவே
வருகவரு ளங்குருசி லுபநிடத மென்றுமுளம்
வளர்நிறை தங்கு முரவோர்
திருவுருவ மெங்குமிர்க மதமணமெ மூம்பியொரு
தினகரனு மங்கு மெழிலார்

ஒருவனரு டங்கியரு வினையகல நின்றுரிமை
யுதவுபொறை கொண்ட விறலுல் (௧௨௧)

வானகம் படர்ககன மேகநன் கவிகையிட
வாரிசம் பொருவு சரணே
கானகம் படரவழன் மாரியின் புனலுதவு
காரணம் பெருகு திறலோர்
கோனகம் பரடறுஷி னேறிநன் கவைகள்பல
கூறியும் புவியில் வருவோர்
தீனகம்படர் முறைமை யானதந்தமு நிறுவு
தோருந்தக வடிவினர். (௧௨௨)

தனிமுதல்வ னருள்கொண்டு குறைவில்குண மதுகொண்டு
தயவுநிறை யதுகொண்டுசீர்
நனியறிவு பொறைகொண்டு வரிசைமர யதுகொண்டு
நல்முகம னதுகொண்டு நீள்
பனியிமைய வரைமுன்றில் வருமகிமை யதுகொண்டு
பகர்வலிமை யதுகொண்டுபா
ரினிலுதவி பலகொண்டு ஜெனனமது தரநின்ற
விசைவிளைவஞ் சிந்தையார். (௧௨௩)

கலியார் கலிப்பரவை புடைசூழ் ஜகத்தவர்கள்
கலிமா வினைத் திறைகளா
லொலியாய் நிறைப்பவவை பொருளா யுவக்குமதி
யுடையார் குயிர்க் கடல்களே
பலியாக வற்றிவிட வடலாட விற்பெருகு
படையார் வரிப் புலியினர்
அலியார் தமக்குரிய திருமாது லக்குரிசி
லரியார்தமக் கிழமையார். (௧௨௪)

மலையான தைச்சிதையக் கொசுகே யரிப்பதென
மனமே கறுத்த விகலான்
உலைவா யிறத்திவிடு கெனபூஜ கற்கிறுதி
யுரைகூறி யுற்ற விபுலீ

சலைவாக நித்ரைசெய் வவன்வாய்ம ணிட்டொருவ
னருளால் வளர்த்தி மதினு
நிலையா றிடைக்கெழுத னெளியாளர் சுத்தமுறு
நினைவோர் தெருட்சி பெறுவோர். (௧௨௫)

வாசத் துளாவயனைய ஞானச் செனனமருவு
மாசற் றகுண சரிதையார்
நேசக் கருணையினொடு தாயிற் பரிவு செறிவு
பேருற்ற குரிசி லுடையா
ராசற்ற குறைவதிமா போர்பெற்ற மணியதென
வார்கொற்ற மிகுதி பெறுவோர்
வீசப்ப ரிமளநாறு நாவிற் சயிலமருவு
வீரிற் பெரிய திறமையார். (௧௨௬)

உற்றமனு வுக்குமம ரர்க்குநெறி யிற்புகுகி
னுக்குமெவ னுக்கு ளுயிராய்
மற்றவர்க ளுக்குமர சற்றவர்க ளுக்குநிதி
மைப்பொவிகு பிர்க்கு மறலார்
நற்றவமு நற்குணமு மற்பெலமு மற்புதமு
நற்பரிவு பெற்ற மறையோர்
கொற்றதல் வற்பரவி நித்தமருள் பெற்றவொரு
குற்றமில சுத்த முடையோர். (௧௨௭)

புரைதீ ருயர்ந்தவெழு ககனேறி யெங்குமொரு
பொலிவாய் நிரம் பறுவின்மேல்
விரைவாய் நடந்துதனி முதலோடு மின்சொலுரை
மிகவோதி யன்பி னுடனே
வரையாமல் நம்பினர்த மதுகாரி யங்கனைய
மலிவோடு கொண் டொரிரவே
தரைமீது வந்துபஜிர் தொழுதே யிசந்தசயி
சவராகி பின்க ணெழுவார் (௧௨௮)

முந்துவெண் டாளமதில் விண்டலம் புவிபுனலை
மொண்டுமொண் டேறி யெழிலிவா

ணிந்துசுண் டனுமுடிவு மைந்தரும் பலவுமமை
யின்சிறந் தவருளே யிறகூல்
கந்துகந் தொறுமிரத மண்டமண் டியதிரள்க
ணங்கள்பின் றொடர நனிசேர்
சிந்துவின் பெருமையெவ ருண்டுணர்ந் திழியவொரு
திண்டிறந் தனைய திறலோர். (கசகூ)

திரைவண்ட லிட்டமணல் பளிதம் பரற்கள்கதிர்
திகழ்கின்ற ரத்ந மணியால்
விரைகொண்ட வெற்பவைக டாளங்கள் பச்சையிலை
விரியுந் தருக்கள் கரைமீ
திரைகின்ற புட்கணவ மணிகொண் டமைத்ததலை
யெரிதண் புனற் குடிஞைசே
ணிரைகின்ற திக்கிலுள புறவொன் றறக்கடிக
ணிலைநின் றறக் கமழுமே (கரு0)

வெறிதிரை கருட்டமிழ்த சலநிறை யிடத்திலுறை
மிகுநவ மணிக் குழுவினு
ணிறுவிய விசித்ரவிக சிதகமல புட்பமலர்
நிகருமெழில் பெற்றி லகுமால்
குறைவுநிறை வற்றவொரு தனிமுதல்வ னற்கடவுள்
குணகட லுடுத்த புவியோ
ருறவுண வழித்தெவையு மளவிடுவ தற்கரிய
வொளிவுநிலை வுலக் கவுதமே. (கருக)

மிக்க வோர்பொரு ளான ஹக்க ணயக ணுரு
மெய்ப்ப வாழ்வுபெறு தோழனர்
மக்க மாநக ரோடு திக்கெலா மிசலாம்
வளர்க்கு நோறி வாளனர்
கைக்கு நேரெனயாவ ருக்கு நேர்படவேக
ருத்துளேவினை காலையே
பக்க வேயமுதுாண ளிக்கமால்வனை யாவ
ருக்கு மேலவ ராகுமே. (கருஉ)

உள்ள மகிழ்தரு மாழை வெள்ளி நவமணியாலு
முள்ளி யளவிட லாதநீள்
வள்ள மதிலுறு யாரு மொல்லை யுறுமென நாடி
வல்லை யிவருழை யேகியே
கள்ள முதமற றேற னவ்வு மெனமை யுமை வீசு
கவ்வை யதுபிரி யாதநீர்
வெள்ள நதியத னூழ்வு வையமற மிரு சேனும்
விள்ள வரியவை யாகுமே. (௧௫௩)

சொற்படியும் வேலைபுடை சுற்றுகலை யாகவளி
திட்புவனி யோடு நதிபோ
னிற்பமணல் கிழுறவு முத்தொழுகல் வாகுகி
நிலத்திடை யுலாவ லெனவே
விற்படியு மேனிலைகி ளெத்தியுயர் மாளிகைகண்
மிக்கநா ளரிட முமே
பொற்படியின் மீதுகுளி வித்தினர்கண் மேவிவிடு
புற்புதம தோ டெழுமமோ. (௧௫௪)

மருநாறு மப்புனலி னிடைகோதை யர்க்கள்பல
வருமோர் கயற் பெருமைதா
னொருநாவி லக்க மடை மெயினீள மொப்புவமை
யுரைகூ றிடற் கரியவோர்
திரை நாயன் வைத்தபடி யெனில்வா னதித்தகைமை
தெளிநூல்கண் முற் றுணர்வினு
விருநாலு திக்கிலுள மதியோர் தமக்குமரி
தெனவநா னுரைக்கும் வழியே. (௧௫௫)

மண்ணும்பொன் மாளிகையு மின்னும்ப ராசிலையு
மன்னின்ற சோலை களுமே
நண்ணுந்தண் ணீரொழுகு கண்ணின்பல் காணவரு
நம்மூர்த்து சோதி வலனல்
விண்ணுந்தி யோமெது தன்னின்பொய் யாதவளம்
வெம்மங்க ளுனுகரவே

யெண்ணும்ப்ர தாபமிகு தம்மன்பி னுல்நபியி
னன்னன்ப ரோடு புகுவார். (௯௰௬)

நபிநாயக மணப்பவனிவரும்படல - முற்றிற்று.
ஆகப்படலம் - உ௯ - க்குத் திருவிருத்தம். அ௯௱௫.

## நபிநாயகம்ஹவுலல்க்கவுறிலிறங்கிவிருந்தருந்தும்படலம்.

அறுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

மால்வாய் நவமா மணியிமைய
வரையு மலர்பொற் பொருப்புகளுந்
கால்வாய் வழிகொண் டொளிவுவெள்ளங்
கடலிற் கவிழ்ந்த தகைமையென்ன
நால்வா யுடனே யெண்ணிறந்த
நரருந் திரள்வா னவர்குழுவுஞ்
சேல்வாய் ஹவுலல்க் கவுதறெனுந்
திரையங் கரையிற் செல்வாரே. (௧)

மாற்றங் கருவில் லாதபுகழ்
வள்ள லெவனும் பொருநரந்த
நாற்றங் கமழுந் திருமேனி
நபிகள் பெருமா னெழுந்தருள
வாற்றங் கரையி லொருகுளமுண்
டதனின் பெருமை யைப்போல
வேற்றங் கருதி லறுபதினா
யிரமென் றுரைத்தா ரியலோரே. (௨)

நோக்குந் திசைமன் மணிகொழித்து
நடங்குந் திரைகள் விரித்தமுதந்

தேக்குந் தடவா வியினுப்பண்
        செவந்த தாளத் தாலோங்குந்
தாக்குந் தனிமா ளிகையதொன்று
        நயங்குந் தாளத் தாலென்ன
வாக்குத் தகைய மனமுமொன்றாய்
        மனைநதே றறிஞர் நவின்றனரே. (௫)

கவந்த நிரம்பும் வாவியிடை
        கனகச் செழுந்தா மரைமலரொன்
றுவந்து விகசித் தலர்ந்ததென
        வோங்குந் தனித்தற் பானமைத்த
செவந்த தாள மாளிகையிற்
        சிறக்கு மொடுக்கொண் டேவதன்சேண்
குவிந்த வளவா மெனவுரைத்தார்
        கோதின் மறைக டெரிந்தாரே. (௬)

கந்த நறும்பூம் பொழின் மதினைக்
        காவ லரசர் கேசரியாய்
வந்த குறைஷி மாபினவ
        மணிபோ லுதித்த வயவேந்து
மந்த்ரப் புயத்தார் மகளுழும்மத்
        தாமேனார் பலரு மேனையராய்
முந்து நபிமார் பலருமவ
        ரும்மத் தினரு மருந்துதற்கே. (௭)

அவைமட் டறிதற் கரியபிரா
        னன்றி யொடுக்கி னமைத்துவைத்த
சுவைமட் டறிய வழிவலகித்
        தொகைமட் டறியப் பலதறிக
விவைமட் டறிய வின்பமள
        விடாவி தானந் தனையறியக்
குவைமட் டறியு மெவருமொப்புக்
        குறியிட் டறியக் கூடாதே. (௮)

என்னாந் தனிலே வேட்டுமுன
வெல்லா மதனிற் பகுந்திருக்கும்
விண்ணம் புவியின் பாதலத்தின்
மேவு மெவரு மளக்கரிதாந்
தண்ணம் பொலியுஞ் சுவர்க்கமதிற்
றங்கு நிருமத் தவைகளினு
முன்ன வருளி யொடுக்கைவன்னித்
துரைக்க வெவர்க்கு மெட்டாதே. (எ)

அறைந்த தாள மாளிகையு
ளமைந்த வொடுக்கிற் பலவளமு
நிறைந்த சுவனப் பதியிலுற்ற
நிருமத் தவையு மினிதுறைவாம்
பறைந்த வருட னூறுமட்டும்
பாங்காய்ப் பவனி வருங்குரிசி
லுறைந்த வொடுக்கை யருந்திடவா
னெண்மா ளிகையி னெழுதந்கே. (அ)

மீனின் கணமு மிருசுடரு
மின்னின் றொகையு முயர்ந்தபெரு
வானின் றிழியுந் தகைமையென
மருளுந் தாரைப் பிடரிருந்து
கோனின் புறுமா சகல்போதக்
கோமா னும்மத் தவர்களொடு
தானின் றமைக்கு மாதரொடு
துலங்கப் படியி லிறங்குவரால். (கூ)

வெற்றி யுடனே றுரைவிளம்பும்
வேத வியக்கம் பெற்றிருந்து
பொற்பின் மடவார்க் கரசாகப்
போற்று மெவர்க்கு நாயகமாய்க்
கற்பி னுறையுள் ளாய்மேனிக்
கழுங்க மகற்றும் பான்மதிபோல்

பற்பி னிரியா ரிருவருடன்
　　பாரிற் பரிவி லிறங்குவரால். (௧0)

பாதந் தரையிற் படா துநடை
　　பயிலுங் குறைஷிக் குலதிலகம்
நீதந் தவறு வள்ளல்நபி
　　நெயினா ரிறங்கு விபத்திருந்து
வேதந் தெருளும் மத்தவரா
　　மேலோ ரவர்க ளும்முடனே
சீதந் தருமின் மாளிகையிற்
　　செலவா னுவப்பி லிறங்குவரால். (௧௧)

சுற்றந் தழுவித் தவந்தழுவித்
　　தூய வருளிங் கிதந்தேக்கு
மற்ற நபிமா ரனைவருந்தம்
　　வரிசைப் பிராட்டி மாருடனே
கொற்றந் தருவா கனங்கள்விட்டுக்
　　குவ்வி னெருங்கித் திரண்டெழுவா
ரற்றந் தழுவா மாளிகையு
　　ளமரு மொருக்கை யாருதற்கே. (௧௨)

ஓங்கு நபிமா ரவரவர்க
　　ளும்மத் தவர்க ளவரவர்குப்
பாங்கு தருமின் னனையாரும்
　　பரிக்குங் கதிர்வா கனங்களிருந்
தோங்குந் தடமா ளிகையிடையி
　　னூற்ற சுவையி னமிழ்துதரு
மாங்கு பிரியத் துடனேழு
　　வார்ப்பி னுவரி யெழுவதொத்தே. (௧௩)

பாக னிபத்தைப் படிப்படித்த
　　பயஹாம் பருமின் னரசருமே
மேகன் திருந்து மாளிகைக்கு
　　னெழுவ ரால்வந் ததிர்க்க னெல்லா

மேகம் பொருந்து மவர்கணங்கள்
விட்டங் கிறங்கி யவ்வுழையி
னுகங் குளிரத் திரண்டுறுவா
ரமுத வடிசி லருந்திடவே. (௧௪)

இருந்தரு மூங்க ளனைவருமுண்
ணுதவ் வெழிலார் சுவைகூர
விரும்பி யருந்திப் பேரியல
விராத் தேக்கித் தகைநீக்கிப்
பொருந்து திரமது நீத்ததெனப்
போதக் குடித்துக் களித்தபிற்றைத்
திருந்த நிறையா ரணிக்களபச்
சேறு புயத்திற் றிமிர்வாரே. (௧௫)

இணக்கு மணிசே ரிழைகதிர்சே
ரிருமார் பகத்தி னணிந்தநறை
மணக்குந் திகையெங் கணுஞ்சீதம்
வந்து சமைய மகிழ்வோங்கிக்
குணக்கங் கருத்தி விலாநலத்தோர்
குழூவு நபிகள் கோமானுந்
தணக்கும் ஹவுலல்க் கவுதறதின்
ஜலதிக் கரையிற் சார்வாரே. (௧௬)

நத்த மயிலோர் பெருங்கடலந்
நதியின் புடையி லடைந்ததென்னச்
சித்தஞ் சுசியாந் திரள்களுடன்
செருக்கி னுடனே சென்றிலங்கு
முத்துந் துகிரும் பன்மணியு
முகந்து முகந்து கரைகொழித்துத்
தத்துந் தரங்கச் சுருட்டுந்தெண்ணீர்
சலதிக் கரையிற் புகுந்திருப்பார். (௧௭)

அந்த ஹவுலல்க் கவுதறெனு
மாற்றங் கரையின் வண்டனீஸல்லாங்

கந்தங் கமக மெனவெவனுங்
　　கமழுங் கனக மாற்குவையு
நந்த வகற்றி யெழும்பற்கை
　　நறைசேர் நரந்தப் பெருங்குவையுஞ்
சொந்த முறுமம் பரின்குவையுந்
　　துன்னித் திரியுஞ் சோர்வறவே. (கஅ)

இம்பர்க் கரச ரெவ்விடத்து
　　மெறிக்குங் கதிர்போற் பரிகடத்துஞ்
செம்பொற் கனகப் பதியுரக்குஞ்
　　சீமா னமிக்குத் திறையிடலா
மம்பொற் குவையு நறுநான்
　　மவையின் குவைப்பா ளிதக்குவையுந்
தம்பொற் கரஞ்சேர் துளைக்கரத்தாற்
　　சலதிக் கரையிற் கொழிப்பதுவே. (ககூ)

காவிற் பொதும்பர்ச் செழுந்தாமங்
　　கனிக ளிழிந்து வீழ்ந்தருப
பூவிற் றடியி னிறைந்து செந்நெற்
　　பூகம் பொரவே வளர்மதிறு
வாவிற் பொலியுங் கைக்கமலத்
　　தண்ண றதியி னற்புதங்கள்
கோவிற் குளிர நோக்கிநல்லோர்
　　குழாத்தோ டிருக்குங் காலையிலே. (உ0)

மங்கு லனைத்து மண்ணனைத்து
　　மற்று முளபல் படைப்பனைத்தும்
டொங்கு மறுகா லையிலமைத்த
　　பொம்ம லுடைய தனிமுதல்வன்
றங்கு முயிர்கட் குறுமிரணக்
　　தனக்குப் பிணைப்பட் டவனறுவி
னங்க ளுறையு மாருதமோ
　　வறையு மதின்போர் மதிறுவே. (உக)

மன்னு மறுவி னின்றுவரு
மதிரு வென்னுங் கால்வீச
வுன்னு மவர்தங் குறிப்பறிந்தே
யுதவும் பலசெங் கரங்களென
மின்னு நவமா மணிக்கிண்ண
மிகவு மேந்தி யமிழ்தளிக்கத்
துன்னுஞ் சலதிப் பிரளயங்க
ளெல்வுற் றெழும்பிப் பொங்கிடுமால். (௨௨)

காலே யெழும்பிப் பொங்குகடங்
கடலி னிறைகா னறும்புனலின்
மேலாய்ச் சிரங்க டமையுயர்த்தி
விண்ணி னோக்கி விளையாடுஞ்
சேலா னவைக ளெவர்தமக்குஞ்
சிந்திக் களக்கற் கேலாது
மாலாக் கிருபை யுளபெரிய
வல்லா னொருவ னல்லாதே. (௨௩)

வறப்பை யணுகா திறஞ்சான்று
வற்று வழுத முவட்டலையைத்
துறப்ப வரிய கயல்கள்சென்னி
தூக்கி யுயர்த்தி விளையாட
விறப்பைப் பிறப்பை யில்லாதா
னினிய தோழர் மனதிலறஞ்
சிறப்பைத் தலைக டமையுயர்த்திச்
சிந்துந் தெரிசித் திடவம்மா. (௨௪)

சட்டம் பெருகு நதிக்கயல்க
ளெழும்பிச் சிரங்க ளுயர்த்துவது
நாட்ட மொருவன் மேற்பூணு
நபிகட் காக மவர்வழியிற்
கூட்டம் பலரு மேலையருங்
குழுமி யிருக்குங் குழாக்கடலைத்

தேட்ட முடனீர்த் திரையலது
    பெரிதோ வென்று தெரிப்பதொக்கும். (உரு)

பின்ன லமருங் கருங்கூந்தற்
    பிடிநே ரிடைபான் மொழித்துவர்வாய்
அன்ன மனைய வரம்பைநல்லா
    ரழகா மயில்க ளடிப்பதென
மின்ன மருவும் பிறைவடங்கள்
    வீங்கு தடக்கொங் கைகள்குலுங்கப்
பொன்னம் விழிகள் புரளநித்தம்
    புரியும் விதம்பார்த் தினிதிருப்பார் (உசு)

பாத மணிந்த நூபுரங்கள்
    பதல மிடையென் றோலமிடப்
பேத மனுகாப் பாதமுறை
    பெயர்ந்து நடநா டகநாலை
யேத மனுகா ரிங்கிதங்கட்
    கெதத்த நடித்து யாழனச்சங்
கீத மிசைக்கு மடமாதர்
    கெழுமு நலன்பார்த் தினிதிருப்பார். (உஎ)

மைக்கின் கிதமா யுளாபகரு
    மதினு நகர்வாழ் பெருமானைச்
சக்கி லவர்தங் கிளையோனைத்
    தாழாப் புகழி னுற்போற்றித்
திக்கின் மலர்க்காத் தாட்கோட்டுஞ்
    சிந்து நதியின் தடங்கோட்டும்
பக்கி யினங்க ளிருந்திசைக்கும்
    பாடல் கேட்டு மினிதிருப்பார். (உஅ)

புதிய நிலவு மாமதியம்
    பொருவுங் கதிர்நித் திலங்கொழிக்கு
நதியின் புளின்மேற் பொங்குவது
    நாடு மிவர்பா லுண்மையினை

நிதிய முறுவள் ளங்கள்பல
நெறியி னுதவு வதுங்கயல்கண்
முதிய தலைக டனையுயர்த்தி
மூழ்கு வதும்பார்த் தினிதிருப்பார். (உகூ)

முன்னை கருணை யுடையநன
முதல்வ னிறக்கும் சபுர்வேநந்
தன்னை யழகாய் வரிசைநபி
தாவூ தோது மிசைகேட்டுக்
கன்னங் குளிர வுடல்குளிரக்
களிப்பு விளைப்பக் குழாங்களெல்லா
மின்ன லகலப் பெருமிதத்தோ
டிருப்பா ருள்ளம் விருப்பாயே. (௩0)

கன்னிப் புரிசை செறிபதினுக்
காவல் புரியுங் கோமானு
மன்னிப் புடையி லகலாத
மற்று நபிமா ரனைவோருந்
துன்னிச் செறியு நல்லோர்க
டகையு முவகைக் கடன்மூழ்கிப்
பன்னிப் புகழ்தற் கரியநிறைப்
பாங்க ரிருக்கு மவ்வேளை. (௩க)

தூணற் றுயராம் பரமேழுந்
துளக்க மறவா சற்பழிக்குங்
கோணற் றுவமை யறநிறுவிக்
குவ்வைப் பலவுந் தரத்தூக்கி
யூணற் றுறக்க மில்லாதங்
குள்ளன் புறக்காத் தொருபோதும்
வீணற் றிருப்போ னறுஷில்நின்று
விரைவோ ரங்கம் வெளிப்படுமால். (௩உ)

ஞாலத் தரசர் நபியிறசூல்
நடுவிற் பெரிது நோற்றதவச்

சீலச் சாக்குக் கொண்டொருவன்
செய்ய பலன்க ளுதவியதைச்
சாலப் பெருக வுறக்கவுலஸ்
சலதி முகட்டி னெடிவல்லைக்
கூலக் கரையிற் கொடுக்கவருங்
கோள்போ லுறுமக் கலந்தானே. (௯௧)

உருவ மெவரு மறியவொண்ணு
வொருவன் றனது நண்பதமேற்
பொருவிக் கிருடை யம்பியுருப்
போந்து மகரா லையமிசையே
வருவா ரெனவோ ரபிமான
மட்டு ளடங்காக் கிரணமுந்தத்
திருவஞ் சமரு மணிக்கப்பற்
சேணூர் கரையிற் செல்லுமரோ. (௯௨)

மயிலி லுருவா யொருதருவின்
வல்லோன் றனையே துதித்திருந்து
பயிலு மறைக்கோர் விளக்காகப்
படியி லுதித்த பயஸாம்பர்
செயிரின் முறுச லின்கண்மற்றத்
திரளோ டலையின் விளையாடச்
சயிலூ மெனவுற் றிடுங்கப்பற்
றனது பருமை யுரைக்கரிதே. (௯௩)

கலிச்சந்தத் தாழிசை விருத்தம்.

செப்ப லாத செழுங்கதிர்ச் செம்மணிக்
கப்பல் சேணுங் கவின்செய்யு நண்ணிலாத்
தப்பி லாத தருத்துந் தவங்களு
மிப்ப லாரு மியம்புவ தில்லையே. (௯௪)

வாய் மணிச்சுடர் மன்னிய வங்கமேற்
றூய் மணிக்கதிர்ச் சோதி விளங்கிய

பாய் மாத்திர ருன்னிதம் பாரனு
மாய் மதித்திட லாமென வாசமோ. (௯௭)

செக்கர் வானெனச் செங்கிர ணங்கள்செய்
தக்க வார்பெருங் கப்பலிற் றுவுறு
மிக்க பாய்மா மீதுறு காவியா
வொக்க வோங்கு மொளிர்வயி ரங்களே. (௯௮)

பருமல் யாவும் பகாரி தாய்வித்த்
தருமமாக வமைத்ததிற் றுன்னிய
கருமை யாயொளி கான்மணிக் கப்பிக
ளருமை யான தாளம தாகுமே. (௯௯)

மன்னு மொண்கரப் பாய்மா மற்றெலா
மின்னு கின்ற வடங்கள் பிறங்கிய
மின்னு தங்கம் வியப்புறு கம்பியா
லுன்னு மெங்கணு முள்ளொளி யுந்தவே (௱)

விண்ணி றைந்த விதுவுங் கதிர்களு
மண்ணி றைந்து வயங்குவ தென்னவே
யெண்ணி றைந்த தவத்தினர் வைகிய
கண்ணி றைந்திடக் காந்தி வயங்குமே. (௱௧)

சோதி தங்கு துவசமுந் தோரண
வீதி யுங்கதிர் விட்டு விரிந்திடுந்
தாதி லங்கு தருப்பொலி சோலையுந்
தீதி லங்கு சிறந்து துலங்குமே. (௱௨)

குறைவ கற்றிய கொற்றவ னெண்ணறு
மறைவ குத்திடும் வண்ணிறை முற்றிலு
நிறைவ கத்தி னினைப்பவை யாவையு
முறைய வைப்ப னெருகு தவர்க் கெலாம். (௱௩)

வாய்ந்தி மைக்கு மணிகளின் சோதியுஞ்
சாய்ந்து நிற்குந் தருக்துகள் சோதியுஞ்

காந்து பற்பல் கருவிகள் சோதிடு
மேத்தி நிற்கு மிமையம தாகுமே. (சச)

முற்று மூள்ள வளங்களி யாவையு
முற்றும் வின்ன வொருவன வர்திலே
வெற்றும் வெள்ளந் திறந்துரு மென்னவே
சுற்றும் வல்ல சுடர்மணிக் கப்பவின். (சரு)

ஆல மின்சுதை யாபின கம்மிற
ருதுல் லாவுந் துணைவிய ராயிரு
பாலும் வைகும் பரிவுறு தாயிருந்
சால்|வாருந் தனத்து மருக்குமே. (சசு)

அடிக டங்க ளருவியி ருக்கைநபோற்
படிக வென்று பகுத்திடு மாசனங்
கடிகள் வந்து கமழ்ந்திடு காரண
வடிவு பொங்கு மணவறை யாகுமே. (சஎ)

கந்த மாநலுங் கற்பகச் சோலையின்
கொந்து நான மலர்கொன்றை வாரியே
யந்த மாமணி யாற்றுச் சுருங்கையின்
மந்த மாருத மெல்ல வழங்குமே. (சஅ)

வாய்த்த சோதி மணவறை தன்னிடை
மூத்தில் லாரு முதல்வ னவங்கடாய்த்
தாய்த்தி ருந்த வணிதகரு சோடனே
யேத்து நாவின ரில்லை யிகத்திலே. (சகூ)

பாங்கு தங்கு மிருக்கையிற் பாங்கிற்
றுங்கு மொண்செயுந் தாள்மணித் தூக்கங்கள்
வீங்கு வின்கண் மிடைமொழி யாதசி
ரோங்கு மின்க ளொளிர்வதை யொக்குமே. (ருO)

தட்டி ன்மீது தயங்கொளி யாசன
மட்டி லாநகை மாமணி யாலமைத்

தெட்டி யாரு மிருப்ப வமளிமேற்
கட்டி லோடு விமானமுங் காணுமால் (௫௧)

வாள ரங்கொண் மதர்விழி யார்மன
வாள ரங்கொளி ரம்பொனின் மாளிகை
நீள ரங்க ணிசைத்தெழு பன்மணிச்
சாள ரங்க டனித்தனி நிற்குமால். (௫௨)

கூறு மேரொளி வாகக் குலாவுசீ
ரேறு மாலணி வங்க மதிரநே
ராறு காட்டி மீகாம னமரரிற்
றேறு மேன்மைச் சிபுரியி லாகுமே (௫௩)

வெற்றி கொண்டு விளங்கிய வள்ளலோ
டுற்றி ருக்கு முயர்தவத் தோரெலாஞ்
சுற்றி யேவினை யாடத் தொடுகடல்
வெற்றி யோடுமெவ் வங்கம தேறவே (௫௪)

தீனை யந்த மளவுந் திருத்தியோர்
மீனை யேசிரஞ் சேர்த்திய வேடனை
மானை யேவழி மாடுற வைத்தருண்
மோன மேவுமு கம்மது முஸ்தபா. (௫௫)

மைத்தி ருந்த பஃறலைப் பாந்தள்வாய்
வைத்தி ருந்து விடங்கெட மாய்த்திருண்
மெய்த்தி ருந்தவர் நன்னெறி மேவல்செய்
முத்தி ருந்த முகம்மது முஸ்தபா (௫௬)

வேங்கை வாயில் விளங்கொளி யாழிசேர்
பூங்கை யின்புனல் பொங்க வளித்தவர்
தீங்கை மாற்றி யொருமொழி செப்பிலா
மூங்கை பேசு முகம்மது முஸ்தபா (௫௭)

பாப்ப கத்தினும் பத்தி யளித்தருள்
கூப்ப கத்துசெங் கோக னகக்கையார்

சேப்ப கத்தி னுடங்கு மெய்த் தீங்கினன்
மூப்ப கற்றமு கம்மது மூஸ்தபா. (௫௮)

கனக டற்கெதிர் காய்க்கெதி ரேறிய
வினைமு கத்து விகட மருவலர்
மனைய கத்தெயில் மன்னுறச் செய்தவர்
முனைய கற்றமு கம்மது மூஸ்தபா. (௫௯)

குத்தி ரங்கொலை கூன்பிற மூடிய
சித்ர சாதம் பிழைத்திங்கு மாறியே
சத்தி யந்திகழ் தக்கன னன்பினன்
முத்தி நல்குமு கம்மது மூஸ்தபா. (௬0)

மன்னு திக்கினின் மாந்தரு மும்பருஞ்
ஜின்னு மாவுஞ் சிறைப்புள்ளி னங்களு
மின்னு மெந்தப் படைப்புமுண் டாகிட
முன்னு தித்தமு கம்மது மூஸ்தபா. (௬௧)

பொன்பு ரத்திற் புகும்பனு ஊனவர்
துன்பு றத்துட் டருவினை சூழ்பவை
யன்பு றப்புவி யோர்க ளறிந்திட
முன்பு ரைத்தமு கம்மது மூஸ்தபா. (௬௨)

பிழையி ருக்க பிருறலைப் பேயர்க்கா
லுழையொ துங்கு மொதுங்கிட மின்மையாற்
கழையி ருந்த பொருப்பது காட்டிமும்
முழையி ருந்த முகம்மது மூஸ்தபா. (௬௩)

புலையி ருந்தவர் புன்மையை நீக்கிநன்
னிலையி ருந்தவ திற்கு நிலைமையாற்
கலைய ருந்தகைத் தாயலி மாதிரு
முலைய ருந்தமு கம்மது மூஸ்தபா. (௬௪)

மன்னும் பயித்தல்முக் கத்திசுப் பள்ளியிற்
றன்னு நன்னபி மார்தொழு விக்கவே
யன்னை யற்ற வரியவன் சொற்படி
முன்னி னிற்குமு கம்மது முஸ்தபா. (சுரு)

தீது நந்திய செங்கண் குறித்திடா
தோது மாரணத் துட்பொருள் யாவையுங்
காது ணர்ந்திடு காரணத் தாலெல்லா
மூது ணர்ந்தமு கம்மது முஸ்தபா.. (சுசு)

ஆன வண்மை யருமத ஞருடன்
ஞான மேவிய தக்கவர் யாவரிங்
கோன னுப்புங் கொழுஞ்சுடர்க் கப்பலிற்
கான றும்புனற் காண்குதற் கேகுவார். (சுஎ)

வேட்டு நல்லற மிக்கமு மின்களு
நாட்டு நற்றவ நன்னபி மார்களும்
பூட்டு முள்ளுநறைப் போதமுள் ளோரெலாங்
காட்டும் பேரொளிக் கப்பலி லேறுவார். (சுஅ)

தங்க மேனி தரித்த நபியுடன்
வங்க மீதினில் யாவரும் வந்தபின்
செங்கண் மேவுஞ் சிறைச்சிபு ரீல்சிறை
யங்க ணேக நடத்துவ ரம்பியே. (சுகூ)

மதலை தன்னெறி வாய்த்தெழு பாயெல்லாம்
பதலை யாகப் படர்ந்தன கார்பொர
முதலை யோர்புதர் மொய்ப்ப வரிப்பவோ
டுதலை யொல்லை யுடைப்பவர் யாவரோ. (எ0)

உலக னைத்து மொருநொடி சுற்றுமா
விலகு வங்கம தேகும் விரைவுகண்
டலகு கண்ணு மலரு மனைவரும்
வியகு மிவ்விரை வென்று விளம்பவே. (எக)

வங்க மீதுறு மாதர்கண் மாந்தர்க
டங்க டாகந் தவிர்க்க நவமணித்
துங்க வள்ளங்கள் சூழ்குழிப் போர்த்துநே
ரங்க ஞாற்றிடை பள்ளி வழங்குமே. (௭௨)

ஊர்வலம்வரு மோர்மண வாளனுக்
கார்வ தோடவ் வணிகக ருள்ளவ
ரோர்வ ளங்களி னின்னமு தாதிப்பாற்
கூர்வ ளங்கள் கொடுக்கு மகிழ்தமே. (௭௩)

பிள்ளை யன்ன முவர்வு பெருங்கடற்
கள்ளை யுண்டவர் காட்சிக ணோக்கலுங்
கிள்ளை போன்மொழி கிஞ்சுக வாயினார்
வள்ளை போடுகண் வாளையிற் பாயுமே. (௭௪)

தேனி னங்களுந் தெள்ளமு தங்களுங்
கானி ரம்பு கடலிட மிட்டிடா
மீனினங்களனிவிளை யாடலு
மானி னங்களு மாந்தரு நோக்குவார். (௭௫)

வாங்கு தெண்டிரை வங்கம தொற்றிமே
லோங்கும் வெண்ணுரை யொக்க விரிந்திடல்
பாங்கு வெண்சவ ரங்கள் பலிந்திடல்
யாங்கு மேன்மைய தாக விலக்குமே. (௭௬)

மலைவி லங்கு முலையுறு வள்ளமேலா
டலையி லங்கம தாருங் குழாங்களாங்
கொலை விலங்கு மகங்களி கூரவே
துலைக ளெங்கணுஞ் சுற்றிய காலையில். (௭௭)

புரையி லாத புகழை யுடையவன்
வரையி லாதெழு வண்மை யறவினுஞ்
சுரைசெய் யாத வொளிவு துலங்கவே
விரைவ தாகவோர் மேக மெழும்புமே. (௭௮)

மாக மண்ட மெழும்பிய மாமுகில்
நாக மண்ட வளைத்திடு நண்ணியே
யோக மண்டு கடற்புகு மோடிமே
லேக மண்டக் கவிந்திடு மீண்டியே. (௭௯)

வந்து கப்பல் கவிந்டு மாமுகில்
கந்த மோவற வேகமழ் நானமுஞ்
சொந்த மாநறை தோயும் பணிகளு
நந்தி லாவினை நல்கிடு மம்பரும். (௮௰)

வைய மெங்கும் வயங்கு மிழைகளுந்
துய்ய சோதி துலங்குந் துயில்களு
மைய நுண்ணிடை யாரிழை யாளையும்
பெய்யு மாந்த ருவகை பெருக்கவே. (௮௧)

முச்சீர்க் கலிவிருத்தம்

குறிசி றந்தயர் கோதைமார்
நெறிக ருங்குழ லோசதா
யறிய வெங்கணு மாருமோ
வெறிபொ ருந்திய மேகமே. (௮௨)

மாரி தந்தருண் மானமு
ரேரி லங்கு மிலாடமே
நேரி லங்கொடு நீடுமோ
சாரு மிந்திர சாபமே. (௮௩)

மைச்சி றந்தகண் மானமு
ருச்சி தங்கொள் புருசரோ
தச்சி னிம்பம தாகுமோ
கைச்சி றந்தமை காணுமே. (௮௪)

சந்த மங்கையர் தங்கணோர்
சிந்தை யன்றித் திகழ்ந்ததோ

வுந்தி யுண்கனு றம்புலால்
கைந்து இன்றது கெண்டையே. (அரு)

தூய மங்கையர் துண்டநேர்
மேய சுந்திர விஞ்சுமோ
வாய மென்சுரு கங்கமே
யேய செங்குமி ழென்றதே. (அசு)

மாறி டாவெழின் மாதர்தே
னூறு சேயித ழோதவே
மீறி டாதுமெய் பேணுமோ
வீறி லாதெழு வினியே. (அஎ)

மங்கை மார்களை மானுமோ
மங்க ழுடுனு மாசமே
பொங்கு மான்மொழி போலுமோ
பங்க மாற்குயில் பாடியே. (அஅ)

சங்கை வாலுறை தையலார்
துங்க மார்குழை சொல்வினே
பொங்கு பூணிழை புல்லுமோ
மங்கல் காணிய வள்ளையே. (அகூ)

பூவை மாதர்கள் போலநேர்
தாவு ருவெழில் சூழினே
யோவு ருமெது வேதரா
தாவ தேதுக்கண் ணுடவே. (கூ0)

ஆர்மு கிற்பெய் யரம்பைமா
ரோர் முகத்தை யியம்பவே
கார்மு கத்தொடு கண்டதோர்
சீர்மு கத்தெடு திங்களே. (கூக)

வளைமை கொண்ட மடந்தைமார்
ளமை தென்றில் கண்டதேல்
புளக மென்று புனைந்ததோ
வெளிய பங்கள கென்பவே. (கஉ)

சோதி மங்கையர் தோளினேர்
நீதி யென்றசொன் னீடுமோ
மாதி ரங்கண்முன் மாறுதோய்
வீதி தங்கிய வேய்களே. (கங)

மோக மங்கையர் முன்கையா
மூகு மேன்பவ ளங்கள்பூண்
யோக முந்த வுறைந்திலா
தேகு இன்ற திரங்கியோ. (கச)

வாய்ந்த வஞ்சியர் வண்கையே
காந்த ளென்ப ளங்களே
தோய்ந்த நஞ்சு துறந்திடா
தேந்தி நின்றவை யென்றுமே. (கரு)

செழிய பொற்பவை சீறிஞ
செழில்வி ரற்கிணை யேறிடா
சுழியி டக்துணா கால்புலா
லுழிசி னைக்கெளி றானமே. (கசு)

போரு கத்துறை பூவைமார்
சீரு கிர்க்கிணை சேருமோ
கூரு நச்சுவை கோதலா
லார்சு கந்தல மானதோ. (கஎ)

குளகு மங்கையர் கொங்கைநேர்
கனக நின்று ததும்புமோ
நிளக ளங்க டியங்கவே
மீளக மொன்று மிலங்கவே. (கஅ)

மூய னகத்தை முருக்குமால்
செயி ரகற்று சிறப்பினோ
ரயர் வகற்றும கத்தினோர்
மயி ரொழுக்க வளப்பதோ. (௯௯.)

வாணி ருந்த வடிக்கணார்
யாணர் தங்கு தாத்தையால்
காணு மென்றுணை காட்டிலோ
மூணருஞ் சரு குற்றதே. (௧00)

மைந்த ராற்றின் மனத்தையே
யந்த ணாற்றி னமிழ்தலாற்
குந்த மேற்று கொலைக்கணு
ருந்தி நீர்ச்சுழி யொக்குமே. (௧0௧)

தருவு கண்புகு சம்பை நூன்
மருவு கின்ற மருங்குலே
திருவ ரம்பையர் செம்பொனார்
குருவ ரம்பை குறங்கதே. (௧0௨.)

மங்கு லீனுநல் வனிதைமா
ரங்கொள் சானுவி னலவனே
சங்க மோசினைத் தருவிரா
லிங்க நேர்சொல் லிழிவதே. (௧0௩.)

குற்ற மாறணி குலவுவோர்
பற்று சோதிசெய் பாடுநேர்
பொற்ற ராசது பொருவுமோ
யுற்ற பேரொளி யொளிவதே. (௧0௪)

அகம் விலங்கு மலங்கல்போன்
மகிழ்வு தந்த மடந்தைமார்
பகரு மொண்குதி பந்ததே
நிகரு மென்பது நிந்தையே. (௧0௫)

துறவ றத்தினர் துயரவே
நிறைவ னப்புறை நிதியனூர்
புறவ டிக்கிணை புரையுமோ
கறைசெ றித்தெழு கமடமே. (௧௦௬)

குரல் குழற்கிணை கொம்பர்காள்
விரல் களுக்கிணை விண்டதேல்
வளையில் பொற்பு வளங்கொடே
துருவு துப்பது துண்டமே. (௧௦௭)

மணி தரும்பொன் வளைக்கையார்
கணை பயந்த கயற்கணு
ரிணை சதங்கை யிசைக்குநீ
ளணி சரண்க ளணிக்கமோ. (௧௦௮)

இசைய வங்க ணெழுந்தகார்
மிசையின் வங்கம் விளங்கவோர்
நசை திருந்த நடந்தபோ
தசையு மொண்சிறை யஞ்சமே. (௧௦௯)

மண்கொள் சுந்திர வஞ்சிமார்
நன்க வின்க ணவின்றதான்
மின்க ளென்று விளம்பவோ
பொன்க ளென்று பொருந்தவே. (௧௧௦)

வேல மட்டும் விழிச்சியார்
கோல மட்டினொ குற்றமே
யேல மட்டு மிசைத்துமோர்
மீல மட்டு முழக்கமே. (௧௧௧)

ஸ்ரீசயசம்ஹவல்லக் கவுதரிடத்திலிறங்கி விருந்தருந்தும் படலமுற்றிற்று
ஆகப்படலம் - ௩௦ - க்குத் திருவிருத்தம். ௬௪௬.

# நபிநாயகமும்மத்துகளோடு

## மோட்சத்தில் வீற்றிருக்கும் படலம்.

கலிநிலைத்துறை

வாய்க்கு மிவ்வழ கமைந்திழை திகழ்மட வாரை
யாக்க மார்தவத் தினர்க்குமுன் சுவர்க்கமீ தளித்த
வீக்கு வார்முலை யரம்பைய ரினும்விய னுகப்
பார்க்கு முன்னவன் றருவனு டவருயிர் பதைப்ப. (௧)

கண்டு சொல்லுதற் கரியவா மயத்தினன் கருணை
கொண்டு கானமும் பொற்பும்பூண் டுகின்மின்னார் குழுவின்
விண்டு பெய்தலுங் கதிருமி ழிளைஞுகின் மிழையார்
மண்டு பொற்சிறை வானவ ரிளையவர் மாட்டே. (௨)

அவத்த மற்றசொல் ஜிபுரியி லனிதுகி லணியப்
பவத்தை மாறுமீக் காயில்நல் குத்துபாப் பகர
நவத்த நாயக னெனிசொல நாமொரு நாடு
மவத்தி னோர்க்கொலாங் கொடுத்திடப் படுமெவர் தமையே. (௩)

கண்ணு மெண்ணமுங் களித்திடுங் கிஞ்சுகக் கனிவாய்
வண்ண மாயவிவ் வியன்மட மகளிரை மாந்தர்க்
குன்ன யக்கிட வளித்தபோ தவர்பெறு மோகை
யெண்ணி மட்டிட வரங்களு முள்ளவ ரிலையே. (௪)

இந்த வண்ணமே மூமினு னவசெல்லா மிடமா
சிந்தை கூர்தாச் சேயினை யவரொடுஞ் சிறிய
மைந்தர் தம்மொடு மிகவிளை யாடியே வருவா
ருந்தி மீதிடை யோடிய வங்கமே லுவந்தே. (௫)

அல்லு ருதமு மின்கள்பா வரும்விளை யாடிச்
செல்லும் வேளையவ் வேளையிற் கயல்பல செறிந்து

புல்லு மற்றவை தன்னிலொன் றனைதயிமாம் புகலாத்
தெல்லை யற்றதோர் பெருமையுண் டாக்குவ னிறைவோன். (௬)

இகரு தற்கரி தாயமீன் பகடதைப் பரிவாய்ப
புகரி லாதவன் படைத்தனே னெனப்புகல் வோருஞ்
இகர வார்கலி சூழுமிச் செகதலத் திடத்தி
னிகரு நான்குநா றாயிரம் வருடமே நீளம், (௭)

வாசி றுநெடு நீட்சிமாட் சிமையமை வனப்பு
நாசி றுதெழும் பெருங்கய லதின்பெயர் நாளும்
பாசி றுதவின் சொற்பக ராகமம் பயின்றோர்
தாச றுவெனச் சாற்றினு றுலகுள்ளோர் தமக்கே. (௮)

உலவு மச்சுரு வயிற்றினோர் பட்டண முளதாம்
நிலவு வெண்ணிற வொண்ணிறை பாளித நிரைத்துக்
குலவு மப்பெரும் பட்டணத் தகலமிக் கூட்டோ
லலரு முப்பதி னாயிர மடங்கென வறைவார். (௯)

உற்ற பட்டணத் திடையொரு மாளிகை யுளதா
மற்ற திற்கணா யதுதனில் விரிவெழு மடங்காய்ப்
பெற்ற தன்னகன் பதலமுஞ் சிகரமும் பரிசம்
பற்ற றுதவெண் பாளிதத் திரளெனப் படுமே. (௧௦)

கயலு றப்பெருங் கடலிடை பட்டமீன் கணத்திற்
செயலு றத்திரி யொன்றனை யாவையுஞ் செய்பு
மயலு மன்னயு மத்தனு மற்றவ னமைத்தான்
முயலு றப்புவி மாந்தனைப் படைத்திடு முதலே. (௧௧)

தோற்ற மேழ்வகை யிருளினிற் கெல்லையிற் சுடரு
மாற்ற மானுடர் தம்மையுண் டாக்குவான் றனத்தி
லேற்ற மானவர் தமையுமவ் வானவையு மினிதின்
றேற்ற மாகவே படைத்திருந் திடவங்காட் டிருந்தார். (௧௨)

மோனை யாயமைத்தவ் வாற்றிடை முழ்கெண விடுத்த
மீனை யுந்தலை கிழப்பென மேல்வன் விழம்ப
வானை மற்றவை யுடையவ னேவலை மாறு
தேனை மாந்தர்கள் காண்குறுப் பெருஞ்சிர மெழுப்பும். (கங)

பெருங்க டற்படு மீனது பாழிவாய் பிளந்து
விருங்கக னிற்குமிப் பாரிற்கு மிடையுள விடம்போற்
சுருங்க லின்றியே யெழுபது மடங்கிடத் தோன்று
மருங்க யற்பெரும் வயிற்றிடை யாவரு மடைவார். (கச)

திரைக ருட்டிய தெள்ளமு தத்திடை செல்லு
முரைசெ யற்கருங் கப்பல்விட் டிறங்கிவின் னுலவும்
புரைய கற்றுசத் தீர்கிழல் செவ்விதிற் போது
மரையு டம்புடன் யாவரு மீன்வயிற் றடைவார் (கரு)

தடங்கி டந்தமீன் வயிற்றுளி மருமதி ஜயமு
மடங்கி டந்திடாப் பலசிறப் பீன்றவற் புகழு
மிடங்கி டந்தபீட் டணைத்தது நவநவ மாகுந்
திடங்கி டந்தமன் னவருடன் காண்குறச் செல்வார் (கசு)

வாது கொண்டட ரடையலர்த் தொலைகடும் வசியார்
கோது றுருவி தம்முடன் கூண்டயா வர்களு
மோது மோர்கடல் பிலத்துவா ரத்தினி னுறல்போற்
போது பேமொழி னுற்றமீன் வயற்றிடை புகுவார் (கஎ)

சுறவி னீள்வயி றுயதோ ராலமாய்த் துலங்கப்
பிறவி நீங்கிய பெரியவன் படைத்ததிற் பிரியா
வறலை சூழ்பதி வளமெல்லா நிறைசுற்று லாதி
குறைவ தாகிய வள்ளமோ டௌறுசுற் றுறைவார் (கஅ)

மகிழ்ந்த வள்ளலார் தம்முடன் யாருமீன் வயிற்றிற்
புகுந்து சென்றதும் புலப்பெரும் பட்டணம் விரிவு

மிருக்த பன்மணி வீதியுந் தெருக்களு மீவா
னுகந்த மாடமா ளிக்கைகளுங் கண்டுள முவப்பார் (௧௯)

மன்றல் வீசிய மார்பரிங் குலாவவே வந்தா
ரொன்று மாடமணித் தெருவெல்லா மலங்கரித் திழைசேர்
குன்று போன்முலை மாதரா லாற்றிகை கொடுநேர்
நின்று சோபனங் கூறுவார் நிரைநிரை யாக. (௨௦)

தெரிவை யென்னவோ செங்கதிர் மணியின்மா ளிகைக
ளுருவை யென்னவோ வொண்சுடர் வீதியி னுங்கு
தருவை யென்னவோ வத்தருப் பூப்புளக் தருதண்
மருவை யென்னவோ துதிக்கவோ படாதென மகிழ்வார். (௨௧)

சொல்லு தற்கருஞ் சேணெடுஞ் சுவர்க்கவீ திகளு
மொல்லும் பூதலம் பாதலங் கடன்மலை யோங்கல்
புல்லு மெத்தல மெத்திசை யனைத்துமிப் புலத்திற்
செல்லு மோர்மறு விடமிலை யென்றவண் டிரிவார். (௨௨)

பண்பொ ருந்தியே சிறந்தபட் டணத்தினி னுப்பண்
கண்பொ ருந்திய மாளிகை யிடமுநீள் கவினுந்
தண்பொ ருந்தியே நவங்களும் பொருந்தியே தனைத்தி
னெண்பொ ருந்தவே கண்டுமேற் றிடத்தினு மெழுவார். (௨௩)

பார்த்த திக்கெலா மளவிடற் கரும்வளம் பலவுஞ்
சேர்த்தி ருக்குமன் வீதியுந் தானமுந் திகழ
வார்த்தி ருந்திய புளகித வனமுலை மடவா
ரார்த்த கோமள வழகையுங் கொண்டுகண் களிப்பார். (௨௪)

மின்னு லாமிழை யரம்பையர் வயின்வயின் மேவிப்
பொன்னு லாவிய மயிலெனப் புழுதிகள் புரியத்
தென்னு லாவிய சோலைகள் செழுங்கனி பயிர்த
மின்ன விசலே யருந்துவர் பொருந்துவர் மகிழ்வே. (௨௫)

சொர்க்க மீதுள சிறப்புக ளனைத்தையுந் தொகுத்து
நிற்க வேசிதிப் பொருவரு மழகெலா நிறைந்த
பொற்க லாபமா மயிலெனை வரம்பையர் பொதித்தாண்
டற்கண் மாய்த்தெழு சோதிகொள் கப்பலுள் ளகமே. (உசு)

ஆல மற்றதி னுள்ளசே ணிடத்தையு மணிசேர்
கோல மாமணி மாளிகை விகற்பமூன் குறையாச்
சீல மார்பல பல்வளக் காரணச் சிறப்பு
மேல யாவரே கண்மெட் டிட்டவ ரிசைந்தே. (உஎ)

காணு தற்கரி தாகிய காரண காட்சி
சேணு றப்புகுந் தியாவர்கண் களிப்புறத் தெரிப்பார்
பூணு பல்வகை யீர்கள்பல் லிடத்தினும் பொருந்திப்
பேணு மோர்பொரு ளாதியா னவனலாற் பிறிதே. (உஅ)

அதிஜ யங்களா லயமீ துள்ளவை யனைத்து
நிதிசெய் மக்கமா நகர்வரு நிருபரோ டேகத்
துதிசெய் தோர்முத லினனையே முன்னலிற் சூழ்ந்து
கதிசெய் கட்புலங் கழித்துமீண் டேகுவர் கலந்தே. (உகூ)

அறல்பொ ருந்துமீன் வயிற்றினு லாற்றதி ஜயங்க
ளறல்பொ ருந்திய வேந்துடன் கண்டுளம் விருப்பால்
விறல்பொ ருந்திலர் கற்பக நாட்டுவேந் துடனே
திறல்பொ ருந்திடச் சோதிமா ளிகைகளிற் செல்வார். (௩0)

வந்து மாதவர் மாளிகை யினின்மணி மஞ்ச
மிந்து போன்முக மிலங்கிடக் கவனம்வே றின்றிச்
சொந்த மாகிய துணைவியர் துணைவர்தோட் டுமீஇச்
சந்த மோவற வாழியா யிருப்பருட் களிந்தே. (௩க)

நன்ன யப்பதி நம்மையர்நம் மணையயந் தளித்த
வன்னை சுற்றமு மலைவிலாச் செழுங்கதை விரித்துச்
சொன்ன நாவலர் தம்மையு மளவிறொன் றூற்குப்
பொன்னை யீந்தவர் தம்மையும் புகழ்வரு ளாமீன். (௬௨)

நபிநாயக மும்மத்துகளோடு மோட்சத்தில் வீற்றிருக்கும்

படலமுற்றிற்று

ஆகப்படலம் - ௩௧ - க்குத் திருவிருத்தம் - ௬௭௮.

# திருமணக்காட்சி

முற்றிற்றுப்பெற்றது.

அல்லாறகு உதவியாலும்

முகியாத்தினாண்டகை யவர்கள் கடாட்சத்தாலும்

ஹிஜூறத்து. ௲௩௱௫௧௵ றமலான்மீ ௬௨. வெள்ளிக்கிழமை

குத்துபாவின்பின்னர் அச்சிட்டு நிறைவேறலா யிற்று.

இஃது முன்னரேட்டூ திறேனு ரியற்றிய

பதிஞன்குசீர்க் கழிலடி யாசிரி விருத்தம்.

---

ஆரணங்கெதிரி நாவரு மதுரநயி னாரருள் ஹிஜுறாத்
தாயிரத்தி யன்பத்தோ ரெட்டினில் வரும்றஜபு
மாதம்பத் தொன்பதில்வரும்.

பூரணக்கதி ரோன்றேய னைவருடம் போக்ககார்த் திகை
பனி ரண்டினிற் பொலன்மருசுக் கிரவார நாளுதயம்
புரியுநா ளிகையொரு நான்கில்.

வாரணக்களிற் றன்வருகைக் வாழ்சாலிப் பிள்ளைலப்பைக்
குலமைந்தன் மன்னவ னெங்கள் துரை லப்பைநயினான்
மாதவம்பெற மனம்விரும்பிக்.

காரணச்சுவனத் திருமணக் காட்சிகளைக் கலப்புற
வெழுதினைத் தந்தனுங் கத்தனே யிவாறுதை ரீழவிமேல
கதியோடு சேர்த்துவாழ் வருளே.

அறுசீர்க் கழிலடி யாசிரிய விருத்தம்.

சீர்பூத்த வருகைவரு திரன்மகு தாம்நயினான்
செல்வ னாரும்
ஏர்பூத்த விருந்தொறவி ருவிதுக்கா நயினான்ற
விருகை யாக்
கார்பூத்த கவிகைமுகம் மதுநயினார் மணக்காட்சிக்
கவிதை யாவும்
பார்பூத்த பத்திரத்திற் றீட்டினனான் மாட்சிபெறப்
பரிவி னாலே.

## விளம்பரம்.

இங்ஙன மச்சிட்ட முறைபோல அச்சு மாறுபட்டமாக ஒரெழுத்துக் கூடினுங், குறையினும், மேல்விலங்கு கீழாகினும், கீழ்விலங்கு மேலாகினும், ஒற்றல்லாத எழுத்திற் றொற்றுற் றிருக்கினும், அவ்வொற்று வேண்டினும், குறில், நெடிற் கூடினுங், குறையினும் படித்துவருகையில் வரிகளிற் காணப்படுமாகின் முறைபோலே திருத்திக்கொள்க அவர்களை யாம்விரும்புகின்றனம்.